SRI

HARI MĪDĒ STOTRAM

OF

SRI ĀDI SANKARĀCHĀRYA



TAMIL TRANSLATION AND COMMENTARY

BY

ATMAVIDYA BHUSHANUM

V. JAGADEESWARA SASTRIGAL.

ஸ்ரீ

ஸ்ரீ ஹரிமீடே ஸ்தோத்திரம்

ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் இயற்றியது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர
ஸரஸ்வதீஸ்வாமிகளவர்கள்
ஸ்ரீமுகத்துடனும்

ஸ்ரீ குஹாநந்த மண்டலீ அத்யக்ஷர் அருட்கவி
பிரம்ஹஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யரவர்கள்
முன்னுரையுடனும்

ஆத்ம வித்யாபூஷணம் பிரம்ஹஸ்ரீ
V. ஜகதீச்வர சாஸ்திரிகளவர்களின்
தமிழனுவாதத்துடனும்
விளங்குவது

N. இராஜம் & கோ.,

வேப்பேரி, மதராஸ்-7.

1949

 [Price Rs. 1-8-0

First Edition
1000 Copies.

Printed
at the
Rathnam
Press,
Madras.

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य-
श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित-
श्रीकाञ्चीकामकोटिपीठाधिप जगद्गुरु-
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

सकलपुरुषार्थप्रतिपादक श्रुतिस्मृत्यादि प्रमाणसिद्धार्थबोधनबद्धादरैः श्रीमदाचार्यभगवच्चरणैः सहजानुकंपया मन्दाधिकारिणामपि तादृश पुरुषार्थसंपत्तये समनुगृहीतो हरिमीडेस्तवाभिधानो मुक्तिमार्गबोधकोनातिविस्तरः सरळपदवाक्यसंयोगरमणीयोऽतिगंभीरश्चग्रन्थभास्करो विद्वज्जनमानसारविन्दं विकासयतीति नाविदितमेतत् । एतद्ग्रन्थस्वारस्य विविदिषूणांसामान्यानामपिग्रन्थार्थज्ञानसौलभ्यसंपादनेच्छयाऽयंग्रन्थराजः द्राविडभाषामयपदार्थ - विषयविवरणसनाथो मुद्राप्य प्रकाशयिष्यत इति विज्ञाय सन्तुष्यामः ।

एवं लोकहितप्रवृत्ताः उक्तपदार्थविवरणप्रणेतारः आत्मविद्याभूषण बिरुदभाजः पण्डितजगदीश्वरशास्त्रिणः, मुद्रापण - प्रचारणादिकार्यनिर्वाह समुद्युक्त श्रीनारायणस्वाम्यार्याः, ग्रन्थपठनश्रवणश्रद्धालवस्साधुजनाश्च श्रीचन्द्रमौलीश परिपूर्णकृपापात्रीभूताः समवाप्नुवन्तु श्रेयांसिभूयांसीत्याशास्महे ।

प्रकृतविजययात्रास्थानं श्रीमध्यार्जुनक्षेत्रं । श्रीशा०शके १८७० सर्वधारिसं० फाल्गुनशु० पञ्चमी	नारायणस्मृतिः ॥

ஸ்ரீ:

ஸ்ரீமுகம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களான ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர்களால் பிரதிஷ்டை செய்யப்பெற்றஸ்ரீகாஞ்சி காமகோடிபீடத்திற்கு அதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ரஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

எல்லா புருஷார்த்தங்களையும் பிரதிபாதனம் பண்ணுகின்ற சுருதிஸ்மிருதி முதலிய பிரமாணங்களால் விதித்துள்ள விஷயங்களை உபதேசிப்பதிலேயே மிகுந்த ஆதரவுள்ளவர்களான ஸ்ரீபகவத் பாதாசார்யஸ்வாமிகளால் மந்தாதிகாரிகளுங்கூட ஷை புருஷார்த்தங்களை அடைந்து உய்யும்பொருட்டு ஸ்வாபாவிகமான கருணையால் அனுக்ரஹிக்கப்பட்டுள்ள ஹரிமீடேஸ்தோத்ரமென்ற பெயருள்ள கிரந்தமாகும் ஸூர்யன் ஸங்கிரஹமாய் முக்திமார்க்கத்தை அறிவிப்பதாயும், எளிய பத வாக்கியங்களால் ரமணீயமாயும், கம்பீரமாயுமிருப்பதால் வித்வான்களின் மனமென்னும் தாமரை மலரை மலரச்செய்கின்றதென்ற விஷயம் யாவரும் அறிந்ததேயாகும்

இந்த கிரந்தத்திலுள்ள ஸ்வாரஸ்யங்களை அறிய விருப்பங் கொண்ட ஸாமான்ய ஜனங்களுக்கும் இக்கிரந்தத்தின் அர்த்த ஞானத்தை ஸுலபமாய் எற்படுத்துவதற்காக இந்தக் கிரந்தம் தமிழ்மொழி பெயர்ப்புடனும், தாத்பரியத்துடனும்; அச்சிட்டு வெளியிடுவதை அறிந்து நாம் மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

இம்மாதிரி லோக ஹிதத்தில் பிரவிருத்தித்துள்ளவரும், தமிழ் மொழி பெயர்ப்பாளரும், "ஆத்ம வித்யா பூஷணம்" என்ற பட்டம் பெற்றவருமான பண்டித ஜகதீச்வர சாஸ்திரிகளும், அச்சிட்டு வெளியிடும் கார்யங்களில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ நாராயண ஸ்வாமி அய்யர் அவர்களும், இக்கிரந்தத்தைப் படிப்பதிலும் ச்ரவணம் செய்வதிலும் சிரத்தை கொண்ட ஸாது ஜனங்களும், ஸ்ரீசந்த்ரமௌளீச்வரரின் கருணைக்குப் பாத்திரர்களாகி எல்லா ச்ரேயஸ்ஸுகளையும் அடையவேண்டுமென்று ஆசீர்வதிக்கிறோம்.

விஜயயாத்ராஸ்தானம்
மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்)
ஸ்ரீசா 1870. சர்வதாரிவருஷ
பால்குனசுத்த பஞ்சமி.

நாராயணஸ்ம்ருதி

முகவுரை.

ஸ்ரீஹரிமீடே ஸ்தோத்திரம்

என்னும் இச்சிறுநூலானது, ஓரொப்பற்ற வேதாந்தப் பிரகரணமாகும். இதை யியற்றியவர் ஸாக்ஷாத் பரமேச்வராது லீலாவதாரமாகிய ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகளாவர். இவர்கள் உத்தமாதிகாரிகளாகிற தீவ்ரதரமுமுக்ஷுக்களின் பொருட்டு உபநிஷத்து, கீதை, ப்ரஹ்மஸூத்திரங்கள் என்னும் பிரஸ்தானத்திரய பாஷ்யங்களை யியற்றிப் பின்னர் அப்பிரஸ்தானத்திரய பாஷ்யங்களையும் நன்குணரும் ஆற்றலில்லாத மந்தாதிகார முமுக்ஷுக்கள் அதி ஸூக்ஷ்மமான பிரஹ்மாபின்ன ஆத்ம தத்துவத்தை மிகவெளிதில் உணர்ந்துய்யுமாறு விவேக சூடாமணி, உபதேச ஸாஹஸ்ரீ அபரோக்ஷாநுபூதி, ஸர்வவேதாந்த ஸித்தாந்தஸாரஸங்கிரஹம், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி யஷ்டகம் முதலிய பல வேதாந்த பிரகரணங்களை யியற்றியுள்ளார். அவற்றுள் ஹரிமீடே ஸ்தோத்திரமாகும் இதுவும் ஒன்றாகும்.

இந்நூல் ஹரிமீடே—என்னும் மகுடத்தோடு கூடிய 44 விருத்தங்களால் ஆக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு சுலோகமும் மிக மிக நுட்பமான அத்வைத சாஸ்திர ரஹஸ்யங்களைப் பிரமாண யுக்திகளைக்கொண்டு விமர்சிக்கின்றது.

இந்நூலுக்கு ஸ்ரீஸ்வயம் பிரகாசயதி யென்னும் ஒரு பிரஹ்மநிஷ்டரால் வடமொழியில் ஸ்ரீஹரிதத்துவ முக்தாவளீ யென்னும் ஓரொப்பற்ற வியாக்கியானம் இயற்றப்பட்டிருக்கின்றது. இவ்வியாக்கியானம் அதிகம்பீரமாயும், ஸகல அத்வைத சாஸ்திர ரஹஸ்யங்களை வெளிப்படுத்துவதாயும், மிகவும் ஸூக்ஷ்மமான விமர்சத்தோடு கூடியதாயும் விளங்குகின்றது. இத்தகைய வியாக்கியானத்தோடு இந்த ஹரிமீடே ஸ்தோத்திரத்தை ஒருவன் ஸம்பிரதாயமாய் ஸத்குருபால் சிரவணம் செய்வானேயாயின் அவன் ஸம்ஸாரமாகும் ஸர்வாநர்த்த நிவர்த்தியும் நித்தியாநந்த நிலையாகும் மோக்ஷமும் அடைவது நிச்சயம்.

இத்தகைய மஹாபலத்தோடு கூடிய சிறந்த நூலும் அதன் வியாக்கியானமும், ஸம்ஸ்கிருத பாஷா பாண்டித்தியமும், தர்க்கம்,

வியாகரணம், பூர்வமீமாம்ஸை முதலிய சாஸ்திரங்களின் ஆராய்ச்சியும் உடையவர்க்கே பயன் படுவதாயும் ஏனையோர்க்குப் பயன் படாததாயும் இருப்பதை யுணர்ந்து, மூல சுலோகங்களுக்கு பிரதி பதார்த்தமும் வியாக்கியானத்தைத் தழுவிய விரிவுரையும் பிரஹ்ம ஸ்ரீ ஆத்மவித்யாபூஷணம் V. ஜகதீச்வர சாஸ்திரிகளவர்கள் இயற்றியுள்ளார். ஒவ்வொரு சுலோகத்தின் முன்னரும் வடமொழி வியாக்கியானத்தை யநுஸரித்து விஸ்தாரமான அவதாரிகை யெழுதப்பட்டுள்ளது. இந்த அவதாரிகையால்தான் இந்நூலின் சிறப்பு வெளியாகின்றது.

பாடகர்களுக்கு "இந்நூலைப் படித்தே தீரவேண்டும்" மென்னும் நல்லூக்கத்தை யுண்டு பண்ணுவதற்காக ஒவ்வொரு சுலோகத்தில் விமர்சிக்கப்பட்ட விஷயத்தின் திக்தரிசனம் ஈண்டு செய்யபடுகின்றது.

அது வருமாறு :—

சுலோகம்	விஷயம்
1.	கிரந்தத்தின் பிரதிக்ஞை, ஜகத்காரண தடஸ்த லக்ஷண விமர்சம்.
2.	ஷை ஷை
3.	ஸகுண பிரஹ்மஸ்வரூப விமர்சம்
4.	நிர்க்குண பிரஹ்ம ஸ்வரூப விமர்சம்
5.	நிர்க்குண தத்துவ விசாரத்திற்குரிய அதிகாரி விமர்சம்
6.	பிரஹ்ம தத்வ ஞான ஸாதனம்
7.	ஷை ஷை
8.	துவம் பதவிசாரமும் தத்வஞான ஸாதனமுமாகுமெனல்.
9.	அத்வைத ஸ்வரூப விமர்சம்
10.	அதத்வியாவ்ருத்தியால் அஹம்பத லக்ஷ்யம் ஞேயாதீதமெனல்
11.	பிரதிபந்த நிவர்த்தியானல்தான், அத்வைதாபரோக்ஷ ஞானம் ஏற்படுமெனல்

26. பகவத் கீதையில் பிரதிபாதித்துள்ளபடி பிரஹ்ம ஸாக்ஷாத்கார விமர்சம்.

27. சிவபுராணம், விஷ்ணுபுராணம் முதலியவற்றுள் பிரதிபாதித்துள்ள அத்விதீய ஸ்வரூப விமர்சம்.

28. பிரபல வேதாந்த பிரமாணங்களாலும் அவற்றிற்கு அநுகூலமான யுக்திகளாலும்தான் ஜீவப்பிரஹ்மைக்ய விமர்சம் செய்யத்தக்கதெனல்.

29. **अत्रब्रह्मसमश्नुते** என்னும் பிரமாணத்தின்படி ஜீவன் முக்தியானது அகண்ட ஏகரஸ கூடஸ்தஸ்வரூபமே பிரஹ்மமாமென்னும் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தில் ஏற்படுமெனல்.

பிருஹதாரண்யம் 4 அத். 5-பிராஹ்மணம்

30. மதுப்பிராஹ்மண விமர்சம்.

31. அபேதோபாஸனையாகும் அஹங்கிரஹோபாஸன விமர்சம்.

32. உபாஸனையில் பலவியாப்தியை நீக்கிவிருத்திவியாப்தியை யங்கீகரிப்பதே சாஸ்திர ஸம்மதமாமெனல்.

33. கேவல ஆத்மா திரிசிய(ஞேய)மன்று, தேஹாதி உபாதிகளில் உபஹிதசேதனமே ஞாத்ருவாகும் கூடஸ்தன். இதுவே அஹம்பதலக்ஷ்யமாமெனல்.

34. தைத்திரீயம், பிரஹ்மாநந்தவல்லியில் பிரதிபாதிக்கும் வண்ணம் ஆநந்தமே ஆத்மாவாமென்னும் விமர்சம்.

35. ஐதரேயோபநிஷத்தில் பிரதிபாதித்துள்ளபடி பிரக்ஞானமே பிரஹ்மமாமென்று கூறல்.

36. பஞ்சகோசங்களில் ஆத்மாத்தியாஸத்தை நீக்கி அதிஷ்டான பிரக்ஞானமே ஆத்மாபின்ன பிரஹ்மமாமென நிரூபித்தல்.

37. சாந்தோக்கியம் 6-வது பிரபாடகம் உத்தாலக சுவேதகேது ஸம்வாத ரூபமான தத்துவமஸி மஹாவாக்கிய உபதேசலக்ஷ்யார்த்த விமர்சம்.

38. பிரஹதாரண்யகம் 2-வது அத் 3-வது பிராஹ்மணம் 1மந்-மூர்த்தா மூர்த்தப் பிராஹ்மணத்தில் விமர்சித்தப்படி ஸகல ஆரோபங்களின் அபவாதத்தில் மிஞ்சும் சுத்த சைதன்யமே ஆத்மவடிவமென நிரூபித்தல்,

39. பிரஹதாரண்யகம் 3-வது அத் 8-வது பிராஹ்மணம் யாக்ஞவல்கிய கார்க்கிஸம்வாதத்தில் 9-வது மந்த்ரம் அக்ஷரஸ்வரூப விமர்சம்.

40. **यस्मिन्दृष्टेनदृश्यतेकिमपि** யென்னும் பிரமாணத்தின்படி நிஷ்பிரபஞ்ச நிர்க்குண பிரஹ்மஸாக்ஷாத்காரத்தில்தான் ஸகல துவைத நாசமென்றும், அதுவரை துவைதத் தோற்றமுளதென்றும் நிரூபித்தல்.

41. ஆத்மஸ்வரூபத்தில் அத்தியஸ்தமான ராகாதி மலின வாஸனைகளை ஞானயோக அக்னியால் எரித்து அவசிஷ்ட சுத்த புத்த ஸத்கியஸ்வரூபமே தான் என்று நிரூபித்தல்.

42. ஸ்வஸ்வரூபாநுஸந்தான வடிவ பர பக்தியால் எற்படும் பிரயோஜனம்.

43. இந்த ஹரிமீடே ஸ்தோத்ரத்தால் பிரதிபாதிக்கப்பட்ட விஷ்ணு (வியாபக) வடிவ பிரஹ்மத்தை அபேத அகண்டாகாரவருத்தியால் ஸாக்ஷாத்காரம் செய்த மஹான்கள் அபய ஸ்வரூப பரவடிமே யாகின்றனர் எனல்.

44. இந்தக் கிரந்தத்தின் பாராயணத்தினுலும் சிரவணத்தினுலும் பத முத்தியாகும் விஷ்ணுலோக பிராப்தியும், ஞான பூர்வக மனன நிதித்தியாஸனங்களினுல் ஜீவன் முக்தியுமாமென்று பல சுருதி கூறி கிரந்தத்தை யுபஸம்ஹாரம் செய்தல்.

இங்ஙனம் மேலே கூறப்பட்ட ஆழ்ந்த கருத்துக்களோடுகூடிய அனேக விஷயங்கள் இச்சிறு நூலில் விமர்சிக்க பட்டுள்ளன.

இஃதோர் ஸ்தோத்ர நூல். ஸ்ரீ ஹரியை ஸ்தோத்திரம் செய்யும் வியாஜத்தால், ஸ்ரீசங்கர பகவத்பாதாள் இந்நூலில் பல நுட்பமான அத்வைத சாஸ்திர ரஹஸ்யங்களைப் புகுத்தி விமர்சித்துள்ளார். ஸ்தோத்திரத்தில் அத்வைத பாவம் எங்ஙனம் சித்திக்கும்? எனின் ஸித்திக்கலாம்.

ஸ்தோத்ர லக்ஷணமாவது:—

नमस्कारस्तथाशीश्च सिद्धान्तोक्तिः पराक्रमः ।
विभूतिःप्रार्थनाचेति षड्विधं स्तोत्रलक्षणम् ॥

என்னும் பிரமாணத்தின்படி நமஸ்காரம், ஆசீர்வாதம், ஸித்தாந்தமான ஸ்வரூப லக்ஷணங்கூறல், பராக்கிரமம் விபூதி என்னும் ஆறுவித விஷயங்களோடு கூடியது ஸ்தோத்திரமாகும்.

இந்த ஸ்தோத்திரத்தில் என்ன விஷயங் கூறப்பட்டுள்ளதெனின் ஸ்வரூபலக்ஷணம் கூறப்பட்டுள்ளது. எங்ஙனம்?

ஹரிமீடே:—ஹரியை நமஸ்கரிக்கின்றேன். ஹரியின் ஸ்வரூபம் யாது? **संसारध्वान्तविनाशं** ஸம்ஸாரயாகும் அஞ்ஞானவிருளை ஒழிக்கும் பிரகாசவடிவமேயாகும். இத்தகையஸ்வயம்பிரகாசஸ்வரூப ஹரியை, ஸத்குரு, பிரஹ்மம், ஆத்மா ஜீவன், காரணேச்வரன் முதலியவர்களோடு அபேதமாய்க் கூறப்பட்டுள்ளது கூர்ந்து அறியத்தக்கது.

கிரந்தாரம்பத்தில் பரமாசார்யாள் **स्तोष्ये** - ஸ்தோத்திரம் செய்கிறேன் என்று பிரதிக்ஞை செய்கிறார். **ईडे** நமஸ்கரிக்கிறேன் என்று ஒவ்வொரு சுலோகத்திலும் முடிக்கிறார். நமஸ்காரமென்பது த்வைதவடிவ வியாவஹாரிக ஸத்தையில் ஸித்திப்பதாகும். கீழான நிலையிலுள்ள ஒருவன் மேலான நிலையிலுள்ள ஒருவனைப்பணிதலே நமஸ்காரத்தின் பொருளாகும். அத்வைதஸ்வரூபபாரமார்த்திக ஸத்தையில் மேன்மை தாழ்மையென்பவை கிடையாது. மேன்மை தாழ்மைகள் அத்யஸ்தங்கள்.

प्रह्वत्वं - तच्चमायया स्वरूपाद्भेदेन परिकल्पितस्य जीवस्य पुनस्तत्स्वरूपतादात्म्यलक्षणसंबधे विश्राम्यतीत्यर्थः । एवं विध पराशिवस्वरूपमुद्दिश्याहंजीवः प्रह्वीभवामि । तत्स्वरूपेणैकीभूय तदात्मनाखण्डैकरसो भवामीत्यर्थः ।

என்று ஸூதஸம்ஹிதை யக்ஞவைபவ கண்டம் ஷட்கூர விசார அத்தியாய வியாக்கியானத்தில் ஸ்ரீவித்யாரண்யாள் கூறியுள்ளபடி ஜீவன் பிரஹ்மத்தோடு உபாதி நீக்கத்தில் ஐக்கியப்படுதலே **नमः** என்னும் பதத்தின் அர்த்தமாகும் நமஸ்காரத்தின் லக்ஷ்யார்த்த

மாகுமென்று ஸித்திக்கின்றது. ஆகவே, ஜீவப்ரஹ்ம ஐக்ய வடிவ அத்வைத சாஸ்திர ரஹஸ்யங்கள் யாவும் ஸ்தோத்ர கிரந்தமாகும் இதில் விமர்சிக்கப்படுதல் ஸமஞ்ஜஸமேயாகும்.

இத்தமிழ் மொழிபெயர்ப்பு முதநூலின் மூலசுலோகங்களின் அர்த்தத்திற்குச் சற்றும் முரண்படாமலும், வடமொழி வியாக்கியானத்தை யநுஸரித்தும், அத்வைத ஸித்தி-ஸித்தாந்த லேச ஸங்கிரஹம், பிரஸ்தானத்த்ரய பாஷ்யம் - பாமதீ முதலிய சிறந்த கிரந்தங்களிலுள்ள முக்கிய விஷயங்களைத் தொகுத்தும் சுலபமான தெள்ளிய நடையில் இயற்றியுள்ளதை சென்னை குஹாநந்த மண்டலியைச் சார்ந்தவரும் அத்வைத சாஸ்திரத்தில் பற்றுடையவருமாகிய ஸ்ரீ T. S. நாராயணசாமி அய்யர், M. A., அவர்கள் N. ராஜம் கம்பெனி மூலமாய்த் தமது சொந்த செலவில் இந்நூலின் முதற்பதிப்பை யச்சிட்டு வெளிப்படுத்தினர். ஆதலின் இந்நூலையோதி யுணர்ந்துய்யும் தமிழுலகம் இவர்கள் மாட்டு நன்றி செலுத்துவது கடமையே யாகும்.

இந்நூலின் மொழி பெயர்ப்பாசிரியராகிய பிரஹ்மஸ்ரீ ஆத்ம வித்யா பூஷணம் V. ஜகதீச்வர சாஸ்திரிகளும், பதிப்பித்த ஸ்ரீமான் அய்யரவர்களும் இச்சிறந்த நூலுக்கு முகவுரை யெழுதும் பெரும்பாக்கியத்தை அடியேனுக்குத் தந்தமைக்கு அவர்கள்பால் நன்றிபாராட்டுகின்றேன்.

சிவம்.

இங்ஙனம்,

ஸஜ்ஜனவிதேயன்

N சுப்ரஹ்மண்ய அய்யர்

ஸ்ரீ குஹாநந்த மண்டலி
பவழக்காரத் தெரு,
பரங்கிமலை போஸ்ட்
மதராஸ்—16.
26-3-49.

ஸமர்ப்பணம்

அத்வைத வேதாந்தசாஸ்திர ரஹஸ்யங்களை மந்தாதிகாரிகளான முமுக்ஷு மக்களும் அறிந்துய்யும்பொருட்டு பரமசிவாவதாரமாகவிளங்கும் ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹித்துள்ள ஹரி மீடே ஸ்தோத்திர மென்னும் இந்த ஒரு கிரந்தத்தை விசாரித்தாலே முமுக்ஷுக்களுக்குத் தானே ப்ருஹ்மமென்ற ஞானம் உதித்துவிடுமென்பதில் ஐயமில்லை. இதற்கு ஸ்வயம்பிரகாச ஸ்வாமிகள் அவர்களால் இயற்றப்பட்ட ஹரிதத்வமுக்தாவளி என்ற வியாக்கியானமும் இருக்கிறது. இக்கிரந்தத்திலுள்ள 44 ச்லோகங்களும் வெகு அபூர்வமான விருத்தத்தில் கானம் பண்ணக்கூடிய முறையில் அமையப்பட்டுள்ளன. இக் கிரந்தத்தை எதற்காக எந்த ஸமயத்தில் இயற்றினார் என்பதுமட்டும் என் சிற்றறிவிற் கெட்டாமலிருக்கிறது. ஸம்ஸ்கிருத பாஷை பயிலாத பொது ஜனங்களுக்கும் இதன் அர்த்தம் நன்கு விளங்கும் பொருட்டு ஸ்ரீசங்கரபகவத்பாதாளே ப்ருஹ்ம ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் மூலமாக இதற்குத் தமிழ் அனுவாதம் செய்யும்படி என்னைத்தூண்டினதன் பேரில், பதவுரை கருத்துரைகளுடன் நான் இதற்கு தமிழ் அனுவாதம் செய்துள்ளேன். இதற்கு வேறு சில தமிழ் அனுவாதங்கள் காணப்படுகின்றன. அவை யாவும், மூலக் கிரந்தத்தின் பதார்த்தபாவார்த்தங்களை ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளக் கூடியவைகளாக இல்லை என்பது அவ்வனுவாதங்களை வாசிக்கும் நேயர்களுக்கு ஸ்பஷ்டமாகும். அவ்வித குறைகளிருக்கக்கூடாதென்று நினைத்து நான் தமிழ் அனுவாதம் இதற்கு செய்திருக்கிறேன். அதிலும் ஸ்திரீகளுக்கும் மிகவும் உபயோகப்படும்படி முடிந்த வரையில் சுலபமான நடையில் வியாக்கியானத்தின் முக்கியமான அம்சங்களை விடாமல் இவ்வனுவாதத்தை எழுதியிருக்கிறேன். இதிலும் ஏதாவது குறைகள் காணப்பட்டால், அவற்றை வித்வான்கள் தெரிவிக்கும் பக்ஷத்தில் மறுபதிப்பில் மாற்றிக்கொள்ள ஸித்தனாயிருக்கிறேன். ஆனால், தெய்வாதீனமாக இப்பதிப்பில் அனேக அச்சுப் பிழைகள் ஸம்பவித்து விட்டன. அதற்காகப் பிழைத்திருத்தமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. எனவே, பிரிய வாசகர்கள் அப்பிழைகளைத் திருத்திக்கொண்டு இதை வாசிக்க வேணுமென்று வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

இக் கிரந்தத்தை வெளியிடும் காரியத்தில் ஆரம்பம் முதல் கடைசி வரையில் உதவி செய்து உத்ஸாஹமூட்டிக் காரியம் கை கூடும்படி செய்த ப்ருஹ்மஸ்ரீ. A. நடராஜய்யரவர்களுக்கும், இதற்கு முகவுரை எழுதி யனுக்ரஹித்த அருட்கவி ப்ருஹ்மஸ்ரீ N. சுப்பிரமண்ய அய்யர் அவர்களுக்கும், கிருதஜ்ஞதை செலுத்துவதுடன் மன:ப்பூர்வமான வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கிரந்தத்தின் முதலாவது பதிப்பிற்கு மட்டும் அதிகாரத்தை ராஜம் கம்பெனி மானேஜர் ஸ்ரீ நாராயண ஸ்வாமி அய்யரவர்களுக்கு அளித்திருக்கிறேன்.

ஸ்ரீசங்கரபகவத் பாதாளுடைய வாக்கு வைபவத்தை எல்லோரும் அனுபவிக்கவேண்டுமென்றும், அதனால், அவர்கள் கிருதார்த்தர்களாக ஆகவேண்டுமென்றும் கருதி வெளியிடப்பட்ட இந்தக் கிரந்தத்தை என்னை யாட்கொண்ட ஸ்ரீபகவத்பாதாளின் பாதாரவிந்தங்களில் பக்திசிரத்தா பூர்வகமாய் ஸமர்ப்பணம் செய்கிறேன்.

55, பஸ்லுல்லா ரோடு
தியாகராய நகர்
மெட்ராஸ்—17.
28-3-49.

(ஆத்ம வித்யாபூஷணம்)
V. ஜகதீச்வர சாஸ்திரிகள்
மொழிபெயர்ப்பாளர்

பிழைத் திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	22	स्ताष्ये	स्तोष्ये
5	14	காரண	காரண
7	7	காரண	காரண
12	22	சைத்ன்ய	சைதன்ய
15	6	ப்ரம்ஹ்ம	ப்ரம்ஹம
,,	20	ससारं ध्वा	संसारध्वा
17	20	माधु	साधु
18	2	मापेक्ष	सापेक्ष
21	23	ब्रह्मं	ब्रह्म
24	1	ल्ाके	लोके
,,	18	क्षास्त्यपि	त्रास्त्यपि
27	16	ஸவரூப	ஸ்வரூப
,,	20	மனடந்த	மடைந்த
,,	24	மெனதை	மென்பதை
28	19	த்யரன	த்யான
29	11	எனறு	என்று
,,	22	ध्यायत	ध्यायथ
30	10	समाधिस्था	समाधिस्था
,,	14	आत्तनि	आत्मनि
,,	16	னென்ன்பதை	னென்பதை
31	2	ब्राह्मणः	ब्राह्मणः
,,	7	भनन्यं	मनन्यं
,,	23	லோ	ளோ
32	4	என்றும்	என்ற
,,	11	ஏன்னும்	என்னும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
32	12	பக்துரி	பக்தர்
,,	15	षंद्	षदं
,,	23	பரம்	பரமென
,,	26	नन्त	नन्द
33	12	नांश	नाशं
,,	16	தபஸ்ஸலோ	தபஸ்ஸாலோ
34	13	ஞேயதீத	ஞேயாதீத
37	10	सहा	सह
,,	,,	विमेति	बिभेति
,,	24	औत्मवेदं	आत्मैवेदं
38	6	वंद्य	वेद्य
,,	22	திருசயம்	திருச்யம்
39	26	த்தலா	த்தலால்
41	13	யார்தமி	யார்த்தமி
43	11	மாயும	மாயும்
45	27	इत्थ	इत्थं
46	17	சருதி	ச்ருதி
47	6	ब्रम्ह	ब्रह्म
,,	7	ப்ருஹம	ப்ருஹ்ம
48	7	பிரவேசிதது	பிரவேசித்து
49	10	जरात्	जगत्
,,	12	दृष्ठा	दृष्ट्वा
50	21	ब्रंग	ब्रह्म
51	27	மாத்திமா	மாத்திரமா
54	4	க்காரரும்	க்காரரும்
,,	23	इत्यं	इत्थं
55	6	ईंडे	ईडे

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
56	20	வ்பவா ஹா	வ்யவஹா
57	6	ஜர்க்கிர	ஜாக்கிர
,,	8	ஸ்ப்நத்தில்	ஸ்வப்நத்தில்
59	2	ஸவாபவத்தில்	ஸ்வபாவத்தில்
60	13	பரயாத்வை	பரமாத்மாவை
63	19	யையும	யையும்
64	17	ஸதயம்	ஸத்யம்
,,	23	வாக்ககரும்	வாக்குக்கும்
65	18	யோபா	யோப
,,	24	தத்வவிமேகத்தில்	தத்வவிவேகத்தில்
66	17	மாகும்	மாகும்
,,	21	ஸவாதீன	ஸ்வாதீன
76	10	சித்தாந்தம	சித்தாந்தம்
,,	13	மாய	மாய்
79	3	ப்படட்டுளது	ப்பட்டுளது
,,	16	कीडया	क्रीडया
80	20	பிாதி	பிரதி.
86	23	स्थमिमं	स्थमिमं
88	15	खसं	स्वसं
93	14	त्वाग्रचया	त्वग्रचया
95	25	वंत्यु	वक्तयु
99	13	अह	अहं
107	13	ஒப்பு	ஒப்ப
,,	25	ध्वाघ्न्त	ध्वान्त
118	20	பிஙா	பிரா



SRI GURUVAYURAPPAN

With kind permission of :—
C. S. KRISHNA IYER
MYLAPORE

|| श्रीः ||

|| श्रीहरिमीडेस्तोत्रम् ||

அவதாரிகை

शंकरं शंकराचार्यं केशवं बादरायणं ।
सूत्रभाष्यकृतौ वन्दे भगवन्तौ पुनःपुनः ॥

ஸச்சிதானந்த ஸ்வரூபனாயும் அத்விதீயனாயுமுள்ள பரமாத்மாவே சுத்த ஸத்வப்பிரதானமாயையை உபாதியாய் கொண்டு ஈச்வரனாயும், மலின ஸத்வகுணப்பிரதானமான அவித்யையை உபாதியாயடைந்து ஜீவனாயுமானார். "जीवेशावाभासेन करोतिमाया चा विद्याच स्वयमेवभवतः" என்ற சுருதி இதற்குப் பிரமாணமாகும். மாயாப்பிரதிபிம்பிதசித்ரூபனான அவ்வீச்வரன் அம்மாயையைஸ்வவசம் செய்து ஸர்வஞ்ஞனாயும், ஸர்வசக்தியுற்றவனாயுமாகி ஸர்வ ஜீவர்களுக்கும் போகாபவர்க்கங்களை உண்டுபண்ணுவதற்காகஸங்கல்பமாத்திரத்தால் விளையாட்டாக ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதி கார்யங்களை செய்கிறார். எந்த ஜீவர்கள் சுருதி ஸ்மிருதிகளில் கூறிய கர்மாக்களை விடாமல் அவ்வீச்வரனைக்குறித்து பக்தி பண்ணுகின்றனரோ; அவர்களை ஸுலபமாய் தன் உபாஸனையால் அனுக்ரஹிப்பதற்காக, சங்க சக்ர கதைகளுடன் கூடினதும், சூலம் பரசுமிருகம் இவற்றை தரித்ததும், நீலோத்பலம் மேகம் இதற்கு ஸமான தேககாந்தியுடையதும், சந்திரன் ஸ்படிகம் இதற்கு

ஸ்மான தேஹ காந்தியுடையதும், ஆநந்த மயமானதும், சுத்த ஸத்வகுண ப்ரதானமானதும், அனேக லீலைகளைச் செய்வதும், ஸர்வாங்க ஸுந்தரமானதும், விஷ்ணு சங்கரன் என்னும் நாமத்துடன் இருமூர்த்திகளை அப்பரமாத்மாவே எடுத்துக்கொள்ளுகிறார். அத்தகைய இரண்டுமூர்த்திகளும் வைகுண்டம் கைலாசம் முதலிய இடங்களிலும்; அன்பர்களின் இதயத்திலும் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. பயனைக்கருதாமல் நித்தியமாய் அனுஷ்டிக்கப்பட்ட வேதாத்யயன. யஞ்ஞ தான தபஸ்ஸுகளால் சித்தசுத்தியடைந்தவர்களும், நித்யாநித்ய வஸ்து விவேகத்தால் பிரும்மலோகாதி போகத்தை திருணமாக மதிப்பவர்களும், சம, தமாதி ஸத்குண முள்ளவர்களும் தன் (விஷ்ணுவின்) நிச்வாஸம் போன்ற வேதங்களின் அர்த்தத்தை விசாரிக்க ஸாமர்த்தியமில்லாதவர்களுமான முமுக்ஷுஜனங்களுக்கு மோக்ஷஸாதனமாயுள்ள பிரும்மாத்மதத்வஞானத்தை உபதேசிப்பதற்காக தமதம்சத்தால் பகவான் ஸ்ரீவேதவ்யாஸரூபமாய் அவதரித்து, பலவித ந்யாயங்களுடன் கூடினதும் நான்கு அத்யாயங்களுள்ளதுமான பிரம்ஹஸூத்ரங்களால் எல்லாவேதாந்த வாக்கியங்களையும் தொகுத்துள்ளார். அந்தஸூத்திரங்கள் அதிகம்பீரமான அர்த்தத்துடன் கூடியிருப்பதால், அவற்றின் அபிப்பிராயத்தை அறியக்கூடாத முறையிலிருக்கின்றன. அவை இக்கலியில் துஷ்டசித்தர்களான பேதவாதிகளாலும், அபேதவாதிகளாலும் வெவ்வேறு விதமாக ஸமன்வயிக்கப் பட்டிருப்பதால்மோக்ஷ புருஷார்த்தத்தை அளிப்பவையாக இல்லை. அதன்பின்புபகவான் ஸர்வக்ஞரகிய பரமேச்வரன் மந்த புத்தியுள்ளோரையனு க்ரஹிப்பதற்காக, கருணையால் தனதம்சத்தைக்கொண்டு ஸ்ரீபகவத்பாத சங்கரகுருரூபமாய், ப்ரம்ஹாதி தேவாம்சம்பொருந்திய

நான்குசிஷ்யர்களுடன் கூட அவதரித்து, ப்ரும்ஹஸூத்ர வ்யாக்யாரூபமானதும் ஒருதடவை ச்ரவணம்செய்வதாலேயே அஜ்ஞானந்தகாரத்தை அகற்ற வல்லமையுற்றதுமான சாரீரகமீமாம்ஸாபாஷ்யத்தை இயற்றி முக்யாதிகாரிகளான முமுக்ஷுக்களை அனுக்ரஹித்துள்ளார். இப்போது ப்ரும்ஹஸூத்ரார்த்தவிமர்சம் செய்ய சக்தியற்றவர்களும், அநாயாஸமாய் அதிசீக்கிரத்தில் ப்ரும்ஹதத்வஸாக்ஷாத்காரம் பெற ஆவலுள்ளவர்களுமான மந்தாதிகாரிகளை அனுக்ரஹிப்பதற்காக பகவான் பாஷ்யகாரர் அவர்களுக்கு உள்ளங்கை வில்வக்கனிபோல் ப்ரம்ஹதத்வம் விளங்கச்செய்வதற்காகவும், பாராயணம் பண்ணுவதாலேயே ஸர்வபுருஷார்த்தங்களை உண்டுபண்ணுவதும், ஸர்வவேதாந்தஸாரமானதும், ச்ரவணமனன நிதித்யாஸநரூபமுமான ஹரிஸ்தோத்திரத்தை ஆரம்பிக்கக்கருதி முதலில் ப்ரதிஜ்ஞைசெய்கிறார்,

स्तोष्ये भक्त्या विष्णुमनादिं जगदादिं
यस्मिन्नेतत्संसृतिचक्रं भ्रमतीत्थम् ।
यस्मिन्दृष्टे नश्यति तत्संसृतिचक्रं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१॥

பதவுரை

जगदादिं= பிரபஞ்சகாரணமாயும், **अनादिं**= (தனக்கு) காரண மில்லாதவராயுமுள்ள **विष्णुं**= வ்யாபகபரமாத்மாவை **भक्त्या**= பக்திபூர்வகமாக **स्तोष्ये**= துதிக்கப்போகிறேன். **यस्मिन्**= எந்தபரமாத்மாவினிடத்தில் **एतत्**= இந்த **संसृतिचक्रं**= ஸம்ஸாரசக்கரம் **इत्थं**= இவ்விதமாக **भ्रमति**= சுழல்கின்றதோ, **यस्मिन्**=எந்தபரமாத்மாவை

दृष्टे= ஸாக்ஷாத்கரித்தவுடன், **तत्**= அந்த **संसृतिचक्रं**= ஸம்ஸாரசக்கரம் **नश्यति**= நசிக்கின்றதோ, **तं**= அத்தகைய **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நசிக்கச்செய்யும் **हरिं**= பரமாத்மாவை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

विष्णुं =என்றபதத்திற்கு காலதேசவஸ்து பரிச்சேதமில்லாத வ்யாபகமான பரமாத்மவஸ்து என்றுபொருள். **स्तोष्ये**=என்பதற்குசொல்லுகிறேன் என்று அர்த்தம் கற்பிதவஸ்துக்களுக்கு அதிஷ்டானமாயும், ஸர்வாத்மகமாயும், அநந்தமங்கள குணஸம்பந்நமாயிருப்பினும் வாஸ்தவத்தில் சின்மாத்ரமானதுமான பரமாத்மாவைப்ரதிபாதனம் பண்ணுகிறேன் என்றுகருத்து.

ஒருவஸ்து ஸித்திப்பதற்கு லக்ஷணப்ரமாணங்கள் அவச்யமானதால், விஷ்ணுவுக்கு லக்ஷணப்ரமாணங்கள் இல்லையென்று சங்கித்து "யதோவா" என்றசுருதிப்ரமாணஸித்தமான ஜகத்காரணத்வ லக்ஷணத்தை **जगदादिं** என்கிற விசேஷணத்தால் கூறுகிறார். ஆகாசாதிபிரபஞ்சத்திற்கு உபாதானகாரணமாயும், நிமித்தகாரணமாயு முள்ளவர் பரமாத்மாவென்றுகருத்து. இதனால் மாயை, ப்ரதானம் பரமாணு, தடஸ்தேச்வரன் இவர்களிடத்தில் இப்பரமாத்மலக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி தோஷமேற்படாது. [மாயை, ப்ரதானம், பரமாணு, இவற்றிற்கு உபாதாநகாரணத்வம் மட்டும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தடஸ்தேச்வரனுக்கு நிமித்தகாரணத்வம் மட்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உபாதாநகாரணத்வம், நிமித்தகாரணத்வம் இரண்டும் பரமாத்மாவினிடம் தானுள்ளன. ஆகையால் அவற்றில் அதிவ்யாப்தி இல்லைஎன்று கூறப்பட்டது.]

சங்கை:—இந்த அபின்ன நிமித்த காரணத்வமானது ஓரிடத்திலும் பிரஸித்தமாயில்லை. குடம்முதலியவஸ்துக்களுக்கு உபாதானமும், நிமித்தகாரணமும் வேறாய்காணப்படுகின்றதன்றோ? தவிர ஸர்வப்ரபஞ்சத்திற்கும் ஒரேவஸ்து உபாதாநகாரணம் என்பதும் உலகப்பிரஸித்தமன்று. ஏனெனில் மிருத்திகை முதலியவற்றிற்கு குடம்முதலிய ஒவ்வொருகார்யத்தைக் குறித்துதான் உபாதாநத்வம் காணப்படுகின்றது. அகவே அப்பிரஸித்த லக்ஷணத்தை எங்ஙனம் கூறலாம்? ப்ரஸித்தத்தைத்தானே உலகில் லக்ஷணமாகக் கூறுவது வழக்கம்?

ஸமாதானம்.: பிருதிவீ, ஜலம், தேஜஸ் வாயு முதலியவை பூதங்க்ளாயிருப்பதால் உத்பத்தியுள்ளவை. எனவே ஆகாசமும் பூதமானதால் உத்பத்தியுள்ளதே. பிருதிவீ முதலிய பூதங்களுக்கு உபாதாநகாரணமாக ஸத்வஸ்துவைத் தான் கூறவேண்டும். ஏனெனில் பிருதிவீ முதலிய பூதங்களில் ஸத்வஸ்து ஸம்பந்தம் தோன்றுகிறது. எது எந்த வஸ்துவுடன் நித்யமாய் ஸம்பந்தித்திருக்குமோ, அதுவே அந்த வஸ்துவுக்கு உபாதானகாரணமாகும். மிருத்திகையின் ஸம்பந்தம் குடம் முதலியவற்றில் காணப்படுவதால் குடம் முதலியவற்றிற்கு மிருத்திகை உபாதான காரணம். அதுபோல் ஸத்வஸ்து ஸம்பந்தம் ஆகாசாதிகளில் தென்படுவதால் ஜகத்திற்கு ஸத்வஸ்துவே உபாதாந காரணமென ஸித்திக்கின்றது. அனேக உபாதாந காரணங்களை அங்கீகரிப்பதில் "கௌரவதோஷ" மிருப்பதால் ஒரே ஸத்வஸ்துவே எல்லாவற்றிற்கு முபாதாந காரணமெனல் தான் உசிதம். அந்த கௌரவ தோஷத்தாலேயே அந்த ஸத்வஸ்துவைத் தவிர வேறு வஸ்துவை நிமித்தகாரணமாக அங்கீகரிக்க முடியாமலிருப்பதால் அந்த ஸத்வஸ்து

வுக்கு அபின்னநிமித்தோபாதானத்வம் அனுமானத்தாலேயே ஸித்தமாயிற்று.

தார்க்கிகர்மதத்திலுங்கூட பரமேச்வரனுக்கும், குடத்திற்குமுள்ள ஸம்யோக ஸம்பந்த விஷயத்திலும், ஜீவர்களுக்கு ஞானம் உண்டாகும் விஷயத்திலும் அபின்ன நிமித்த உபாதானத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆகவே அனுமானப் பிரமாண ப்ரஸித்தமான அபின்ன நிமித்தோபாதானத்வத்தையே **यतोवा** என்பதாதி ச்ருதிகள் அனுவாதம் பண்ணி பரமாத்மாவை தெரிவிக்கின்றன. பரமாத்மாவின் ஸ்வரூபத்தை **आनन्दाध्येवखल्विमानि** என்கிற வாக்யம் நிர்ணயித்துக் கூறுகின்றது.

விஷ்ணுவுக்கு ப்பிரமாணங்கள் **शास्त्रयोनित्वात्, तत्तु समन्वयात्** என்ற நியாயத்தால் எல்லா வேதாந்தங்களும் தான். ஆகவே விஷ்ணுவுக்கு லக்ஷணப்பிரமாணங்களிருப்பதால் விஷ்ணுஸ்தோத்ரப்ரதிஞ்ஞை பொருத்தமானதேயாம். எது எது காரணமோ அது அது அந்யவஸ்துவால் உத்பத்தியாகு மென்ற நியமம் ஆகாசாதி பூதங்களில் காணப்படுவதால், ஆகாசாதி காரணமாயுள்ள விஷ்ணுவுக்கும் அந்யவஸ்துவிலிருந்து உத்பத்தியானது அனுமானிக்கப் படலாம். எனவே அவ்விஷ்ணுவுக்கு ஸகல ஜகத் உபாதானகாரணத்வம் கூறுவது யுக்தமில்லையே என்று சங்கித்து, " **असंभवस्तुसतोऽनुपपत्तेः** " என்ற நியாயத்தைக்கொண்டு விஷ்ணுவுக்கு உத்பத்தி கிடையாதென்பதை **अनादि** என்ற விசேஷணத்தால் ப்ரதிபாதிக்கிறார். **आदि** = காரணம். காரணம் எதற்குஇல்லையோ அது அநாதி யெனப்படும். விஷ்ணுவுக்கு உத்பத்தி இல்லை என்று கருத்து.

இது இங்கு தாத்பர்யம்:— பரமாத்மாவுக்கு ஜட வஸ்து காரணமா? அல்லது சேதந வஸ்து காரணமா? ஜடமாயுள்ள ஆகாசாதி வஸ்துக்கள் பரமாத்மா வினிடமிருந்து உண்டாயிருப்பதால் அவை அப்பரமாத்மாவுக்குக் காரணமாக இருத்தல் தகாது. பரமாத்மாவைத் தவிர வேறு சேதந வஸ்து இல்லையானதால் பரமாத்மா தனக்குத் தானே காரணமென்று கூறுவதும் சரியில்லை. பரமாத்மாவைத் தவிர வேறு சேதன வஸ்துவை ஒப்புக்கொள்வதாயிருந்தால் அந்த சேதந வஸ்துவுக்கும் காரணமாகவேறு சேதந வஸ்துவை ஒப்புக்கொள்ள நேருமானதால் "அனவஸ்தா" தோஷமேற்படும். ஏதாவதொரு சேதன வஸ்துவுக்கு நித்யத்வத்தை ஒப்புக்கொள்வதானல் காரண மெல்லாம் அநித்ய மென்றவ்யாப்திக்கு வ்யபிசாரம் கூற நேர்ந்துவிடும். இன்றேல் அந்த சேதந வஸ்துவையே பரமாத்மா வென்று ஒப்புக் கொள்ள வேண்டும். "**सवाएषमहानज आत्मा**" என்ற சுருதியும் பரமாத்மாவை அநித்யமென ஒப்புக்கொண்டால் விரோதிக்கின்றது. ஆகவே விஷ்ணுவுக்கு இங்கு கூறியுள்ள அபின்ன 'நிமித்தோபாதாநகாரணத்வம் யுக்தமேயாம்.

சங்கை:—இந்த ஸ்தோத்ரத்திற்கு விஷயமும் பிரயோஜனமும் இல்லாமலிருப்பதால் இதை ஆரம்பித்தல் அயுக்தமானதே. **அதாவது**:—ஜீவாபின்னப்ரம்ஹம் இந்த ஸ்தோத்ரத்திற்கு விஷயமென்று அபிப்பிராயம். இதுசரியன்று. கர்த்தாவாய் போக்தாவாய், ப்ரமாதாவாயுமுள்ள ஜீவனுக்கும் இவை இல்லாத பரமாத்மாவுக்கும் அபேதம் பொருந்தாதன்றோ? "ஆத்மாவுக்கு கர்த்ருத்வாதிகள் இல்லை. ஆத்மாவில் அத்யஸ்தமான அஹங்காரத்தினிடம் தான் கர்த்ருத்வாதிகள் இருக்கின்றன" என்று கூறுவ

தும் பொருத்தமில்லை. ஏனெனின்? அத்யாஸத்தை ஒப்புக்கொள்ளக் காரணமில்லையானதால் கர்த்ருத்வத்தை அத்யஸ்தரூபமாக அங்கீகரிக்க இயலாது. கர்த்தாவுக்கு ஜடத்தில் அத்யாஸமா? சித்தில் அத்யாஸமா? ஜடவஸ்துவெல்லாம் அத்யஸ்தமானதால் அதற்கு அத்யாஸாதிஷ்டானத்வம் பொருந்தாது. சித்ப்ரகாசத்திற்கு அஞ்ஞாந ஸம்பந்தமொப்ப முடியாமலிருப்பதால் அதற்கும் அத்யாஸாதிஷ்டானத்வம் கூறமுடியாது. அஞ்ஞான ஸம்பந்தமுள்ள சுக்திமுதலியவற்றிற்குத்தான் லோகத்தில் அதிஷ்டானத்வம் கண்டுள்ளோம். ஸ்வயம்ப்ரகாச வடிவமான வஸ்துவில் அஜ்ஞான ஸம்பந்தம் பொருந்தாது. ப்ரகாசத்திற்கும் அப்பிரகாசத்திற்கும் விரோதமன்றோ? இங்ஙனமே ஸாத்ருச்யம் முதலிய விஷயதோஷமும் கண்முதலிய பிரமாண தோஷமும், ஸ்வப்ரகாச வஸ்துவில் கூறமுடியாது. ஆகவே கர்த்ருத்வமானது அத்யஸ்தமென்று சொல்லக் கூடாது. அதுவேதான் ஆத்மாவானதால் அநேகதோஷங்களுள்ள அவ்வாத்மாவை தோஷமற்ற ப்ரும்ஹத்துடன் அபின்னமாகக் கூறமுடியாததால் இந்தஸ்தோத்ர விஷயம் ஸித்திக்கவில்லை.

அப்படியே பிரயோஜநமும் ஸம்பவிக்கவில்லை. எங்ஙனம்? ஆத்மாவினிடம்தோன்றும் அனர்த்தத்தின் நிவ்ருத்தியேபிரயோஜனம் எனகூறவேண்டும். முன்புகூறிய விதமாககர்த்ருத்வம்முதலிய அனர்த்தங்கள் அத்யஸ்தமில்லாததால் ஸத்யமாயுள்ள அந்த அனர்த்தங்கள் ஞானத்தால் நிவ்ருத்தியாகாது. ஆகவே விஷயமும் பிரயோஜனமும் ஸம்பவிக்காமலிருப்பதால் இந்தஸ்தோத்ராரம்பம் ஸரியன்று—இதற்குச்சமாதானமாக விஷயப்ரயோஜனங்களை எடுத்துறைத்து ஸ்தோத்ராரம்பம் செய்கிறார் **यस्मिन्नेत्** என்று. இதன்கருத்தாவது:—

सदेवसोम्येदं, सत्यं ज्ञानं अनन्तं ब्रह्म, योशनायापिपासे शोकं मोहं जरां मृत्युमत्यति, तत्वमसि, अहं ब्रह्मास्मि, अयमात्माब्रह्म, अथयोऽन्यां देवतामुपास्ते, मृत्योस्समृत्युमाप्नोतिय इह नानेवपश्यति என்பதாதி சுருதிகள் உபக்ரமாதி ஷட்வித தாத்பர்ய லிங்கங்களால், பசிதாகமின்றியதும், பிராம்மண க்ஷத்திரியாதி பேதமற்றதும், ஸச்சிதாநந்தமய நிர்விசேஷ பரமாத்ம ஸ்வரூபமாக ஜீவாத்மாவை அறிவிக்கின்றன. சில சுருதிகள் ஜீவபரமாத்ம பேதத்தை நிந்திக்கின்றன. தாத்பர்ய லிங்கங்களுடன் கூடிய மேற்கூறிய ச்ருதிகளை ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் பாதிக்கமுடியாது. ஜீவப்ருஹ்மாபேதத்தில் ச்ருதிகளுக்குத் தாத்பர்யம் இருப்பதால் ப்ரத்யக்ஷாதிகளைக் காட்டிலும் ச்ருதிகள் ப்ரபலங்களாகும். ஆனால் ச்ருதிகள் ப்ரத்யக்ஷாதிப் பிரமாணங்களை பாரமார்த்திக ஸ்வபாவத்தினின்றும் நழுவச்செய்து வ்யாவஹாரிக ஸ்வபாவத்தில் வியவஸ்தை செய்கின்றன. அதாவது. ப்ரத்யக்ஷாதிகளின் பாரமார்த்திக அம்சத்தை ச்ருதிகள் உபஜீவிக்கிறதில்லை. தவிர ச்ருதி ப்ரமாணத்தால் உண்டான ஞானம் ப்ரத்யக்ஷாதி ஞானத்திற்குப் பிறகு சுக்தி ஞானம்போல் உண்டாகிறது. ஆகையால் ப்ரத்யக்ஷாதிகளை உபஜீவனம் பண்ணாத ஸ்வப்ரகாச சைதன்ய வஸ்துவை ச்ருதிகள் அறிவிப்பதால் அவை ப்ரபல ப்ரமாணமாகும். இவ்விதமாயுள்ள ஆத்மஸ்வரூபத்தில் தோன்றும் கர்த்ருத்வாதிகள் அத்யஸ்தங்களேயொழிய ஸத்யங்களில்லை.

ஸ்வப்ரகாச வஸ்துவில் அஞ்ஞான ஸம்பந்தம் ஸம்பவிக்காதபடியால் அதற்கு அதிஷ்டானத்வம் உசிதமில்லை என்ற சங்கைக்கும் அவகாசமில்லை. ஏனெனில்? ஸ்வப்ரகாசவஸ்துவில் நான் என்னை உணரவில்லை என்ற அனு

பவத்தால் அஜ்ஞான ஸம்பந்த மிருப்பதாகத் தெரிவதால் அதற்கு அதிஷ்டானத்வம் பொருத்தமானதே. அஜ்ஞானஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கும் ஸ்வரூபஞானத்திற்கு அஜ்ஞான ஸம்பந்த மில்லாமற் போனல் அஜ்ஞானம் பிரகாசிக்காமற் போகுமன்றோ? அஜ்ஞானமோ "நான் ஒன்றும் அறியேன்" என்று எல்லோராலும் அனுபவிக்கப் படுகிறது. ஆகவே ஸ்வரூபஞானம் அஜ்ஞானப்ரகாசகமாயிருத்தலால் அஜ்ஞான விரோதியன்று. வ்ருத்தி ஞானம் தான் அஜ்ஞானத்திற்கு விரோதியானது. தவிர ஸாத்ருச்ய தோஷமோ, ப்ரமாண தோஷமோ, இரண்டுங்கூட அத்யாஸத்திற்குக்காரணங்களாக இருக்கவேசெய்கின்றன. அஜ்ஞானமே ப்ரமாண தோஷமாகும். ஆகவே கர்த்ருத்வம் அத்யஸ்தம் என்பதில் ஸந்தேகத்திற் கிடமில்லை. கர்த்ருத்வஸாக்ஷியான ஆத்மாவுக்கு ப்ருஹ்மத்துடன் ஐக்யம் கூறுவதில் யாதொரு பாதகமுமில்லை. எனவே இந்த ஸ்தோத்ரத்திற்கு விஷயம் ஸித்தித்து விட்டது. இங்ஙனம் ஆத்மாவினிடத்தில் கர்த்ருத்துவாதிகளான அனர்த்தங்கள் கற்பிதமானதென ஸ்தாபித்து விட்டபடியால், கர்த்ருத்வாதி அனர்த்த நிவிருத்தி வடிவ பிரயோஜனமும் ஸம்பவிக்கலாம் என்பதை **यस्मिन्द्देष्ट्र** என்பதாதியால் நிரூபிக்கின்றார். அகண்ட ஸச்சிதானந்த பரமாத்மாவை ச்ரவண மனன நிதித்யாஸநாதி ஸாதனப்யாஸத்தால் ஸாக்ஷாத்கரித்து விட்டால், ஸம்ஸார சக்கர மெல்லாம் வேரோடு நசித்து விடுகிறதென்று கருத்து. **यत्वस्य सर्वमात्मैवाभूत् तत्केनकंपश्येत्** என்ற சுருதி இதற்குப்ரமாணம்.

இங்கொருசங்கை :—அஹங்காராதி ப்ரபஞ்ச காரணமான அஜ்ஞானத்தை அத்யஸ்தமாகக் கூறமுடியாததால் அதற்கு நாசம் ஸம்பவிக்க மாட்டாது. அஜ்ஞான

உபாதியால் அஹங்காராதிபிரபஞ்சத்துக்கு ஆத்மாவினிடத்தில் அத்யாஸம் ஸம்பவிக்கலாம். அஜ்ஞானத்யாஸத்திற்கு ஆத்மாவினிடம் வேறுஉபாதி யொன்று மில்லை. அஜ்ஞானத்யாஸத்திற்கு வேறொரு அஜ்ஞானத்தை அங்கீகரித்தால் அனவஸ்தை ஏற்படும். தானே தனது அத்யாஸத்திற்கு உபாதி யென்று புகன்றால் ஆத்மாச்ரய தோஷ மேற்படும். அஜ்ஞானத்யாஸத்தை அங்கீகரிக்காவிட்டாலோ, அது ஞானத்தால் நிவிருத்தியாகாது.

தவிர அஜ்ஞானம் அனாதியான பாவபதார்த்தமென்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதால் அனாதி வஸ்துவுக்கு ஞானத்தால் நிவிருத்தி ஸம்பவிக்காது. அனாதி வஸ்து வெல்லாம் ஆத்மாவைப்போல் நித்யமல்லவா?

தவிர அஜ்ஞாந நிவிருத்தியானது ஸத்தா? அல்லது அஸத்தா? இன்றேல் ஸதஸத்தா? பின்னை ஸதஸத்விலக்ஷணமா? ஸத்தென்றால் அது ஆத்மபிந்நமா? ஆத்மாபின்னமா? ஆத்ம பின்னா பின்னமா? ஆத்ம பின்னா பின்ன விலக்ஷணமா? இருஸத்ய மில்லாததால் ஸத்தான அஜ்ஞானத்தை ஆத்மபின்னமாக கூறமுடியாது. இரண்டாவது பக்ஷமும் சரியன்று. ஆத்மா அநாதியானதால் ஆத்மாபின்ன அஜ்ஞான நிவிருத்தியும் அநாதியென்று ஏற்படுவதால் அஜ்ஞான நிவிருத்தியை ஞானத்தால் உண்டாவதாகச் சொல்லமுடியாமற் போகும்.

பின்னாபின்னத்வம் பரஸ்பர விரோதியானபடியால் மூன்றாவதுபக்ஷமும் அஸங்கதம். பின்னாபின்ன விலக்ஷணமென்ற நான்காவது பக்ஷமும் அத்தகையஸ்வபாவம் உலகில் கண்டதில்லை யானதால் முறண்பட்டதே. அஜ்ஞான நிவிருத்தி அஸத்தென்று கூறும் பக்ஷத்தில் முயற்கொம்புபோல் அஸத்தான அஜ்ஞானநிவிருத்தி ஞானத்திலிருந்து

உண்டாவதாகக் கூறமுடியாமற்போகும். புருஷார்த்தப் பிராப்தியும் ஸித்திக்காமற் போகும்.

பரஸ்பர விரோத தோஷத்தாலும், மேற்கூறிய தூஷணங்கள் ஸம்பவிப்பதாலும் ஸதஸத்த அஞ்ஞான நிவிருத்தி என்ற பக்ஷமும் யுக்தமில்லை. ஸதஸத் விலக்ஷணமென்ற நான்காவது பக்ஷமும் தவறுனதே. ஸதஸத் விலக்ஷணத்வம்தான் அனிர்வசனீயமென்பது. அஞ்ஞான நிவிருத்தியை அநிர்வசனீயமென்றுரைத்தால் அஜ்ஞானம் ஸத்யமென்று ஸித்தித்து விடுமன்றோ? அஞ்ஞானமும் அநிர்வசனீயம், அஜ்ஞாந நிவிருத்தியும் அநிர்வசனீயமென்று எங்ஙனம் கூறுதல் தகும். குடமும், குடத்தின் நாசமும் ஒன்றென்று கூறமுடியுமா? ஆகையால் அஞ்ஞான நிவிருத்தியானது ஸம்பவிக்க மாட்டாது.

இதற்கு ஸமாதானமாவது :—

தீபமானது தன்னையும், தனக்கு அன்யத்தையும் பிரகாசிப்பிக்கச் செய்வதுபோல் அஜ்ஞானம் தன்னையும் தனக்கு அன்யமான அஹங்காராதி ப்ரபஞ்சத்தையும், அத்யாஸமடையும்படி செய்கின்றது. இது அஜ்ஞான ஸ்வபாவம். ஆத்மா நிர்விசேஷஸ்வ ப்ரகாச வஸ்துவானதால் அதனிடத்தில் அஜ்ஞானம் வாஸ்தவமாக ஆச்ரயித்திருக்க முடியாது. ஆகவே அது கற்பிதமென்று தான் கூறவேண்டும். நிர்விசேஷ சுத்த சைதந்யரூப பரமாத்மாவினிடம் வேறொரு உபாதியை அபேக்ஷிக்காமல், தன்னையும் உபாதியாக நினைக்காமல் அஜ்ஞானம் ஆச்ரயித்திருப்பதால் ஆத்மாச்ரய அனவஸ்தாதி தோஷங்களில்லை. அஜ்ஞானம் கற்பிதமேயொழிய ஸத்யமன்றென்ற விஷயத்தை "अनृतेनहिप्रत्यूढाः" "नासदासीन्नोसदासीत्" என்பதாதி ச்ருதிகளும் வர்ணிக்கின்றன.

அஜ்ஞானம் அநாதியானதால் ஞானத்தால் அது நிவிருத்தியடையாதென்று கூறினதும் சரியில்லை. தார்க்கிக மதத்தில் பிராகபாவம்போல் அஜ்ஞானம் அநாதியானாலும் ஞானத்தால் நிவிருத்திக்கலாம். ப்ராகபாவம் அநாதி அபாவரூபமானதால் நிவிருத்திக்கலாம்; அஜ்ஞானமோ அநாதிபாவரூப வஸ்துவானதால் அது ஞானத்தால் நிவிருத்திக்க முடியாதென்று சொல்வதும் யுக்தமில்லை. அநாதிபாவவஸ்துவுக்கு நிவிருத்தி கிடையாதென்பது ஸாமாந்ய யுக்தியாகும். ச்ருதி ஸ்மிருதிகளில் அநாதி அஜ்ஞானம் ஞானத்தால் நிவிருத்திக்கிறதாகச் சொல்லியிருப்பதால் அஜ்ஞானத்திற்கு ஞானத்தால் நிவிருத்தியுண்டென்பது விசேஷ யுக்தியாகும். ஸாமான்யயுக்தியைக் காட்டிலும், விசேஷ யுக்தி, ச்ருதி ஸ்மிருதி ப்ரமாண ஸித்தமானதால் அதிக பலமுள்ளது. விசேஷ யுக்தியால் ஸாமான்ய யுக்தி பாதிக்கப்பட்டுவிடும். இதனால் அநாதி அஜ்ஞானத்தைத் தவிர மற்ற அநாதி பாவவஸ்துக்கள் நிவிருத்திக்காது என்று ஸாமான்ய யுக்திக்கு ஸங்கோசம் செய்வதுதான் நியாயமாகும். அஜ்ஞானம் ஞானத்தால் நசிக்கிறவிஷயத்தில். "तरतिशोकमात्मवित्" "भूयश्चान्ते विश्वमायानिवृत्तिः" "निचाय्यतंमृत्युमुखात्प्रमुच्यते" "ज्ञानेनतु तदज्ञानंयेषां नाशितमात्मनः।" "मामे व ये प्रपद्यन्ते मायामेतां तरन्तिते" "तयोमेवानुकंपार्थ महमज्ञानजंतमः। नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेनभास्वता॥" "तरत्यविद्यां विततां हृदियस्मिन्निवेशिते। योगीमायाममेयायतस्मैज्ञानात्मने नमः॥" என்பதாதி ச்ருதி ஸ்மிருதிகள் பிரமாணம். தவிர அஜ்ஞானம் அபாவஸ்வபாவமில்லை என்பதை அஜ்ஞானம் பாவவஸ்து என்பதற்கு அர்த்தமாகக் கொள்ளவேண்டும் ஆகையால் அஜ்ஞான நிவ்ருத்தி ஸத்ரூபமானதென்றும், பரமாத்மாபின்னமென்றும் "संसारध्वान्तविनाशं" என்ற விசேஷணத்

தால் வர்ணிக்கிறார். ஸம்ஸாரகாரணமான அஜ்ஞானத்தை நசிப்பிக்கச்செய்கின்ற **हरिं**=அகண்டாகார விருத்தி ஞானத்தை துதிக்கிறேன் என்று அர்த்தம்.

சங்கை:— அஜ்ஞான நிவிருத்தியை ஆத்மஸ்வரூபமென்று அங்கீகரித்தால், அநாதி நித்யமான ஆத்மா ஞானத்தால் ஸாதிக்கப்பட்டதாக எங்ஙனமாகும் என்று.

ஸமாதானம்:— ஞானம் உண்டானால் அஜ்ஞான நிவிருத்தியுடன் கூடிய ஆத்மா பிரகாசிக்கும். ஞானம் உண்டாகாமற் போனால் அஜ்ஞான மற்ற ஆத்மா பிரகாசிப்பதில்லை. எந்த வஸ்து இருக்கின் எந்த வஸ்து இருக்குமோ, எது இல்லையானால் எது இல்லாமற் போகுமோ அது தான் கார்யகாரணபாவம். இது இங்கு பொருந்துவதால் யாதொரு தோஷமுமில்லை. தவிர அஜ்ஞான நிவிருத்தி ஞானத்தால் ஸாத்யமில்லை ஆத்மா அஜ்ஞானசூன்யமாகவே எக்காலத்து மிருப்பதால், அதில் அஜ்ஞானத்தை ப்ராந்தி ஞானத்தால் ஆரோபித்து அதன் நிவிருத்தியையும் அங்ஙனமே ஆரோபித்துக் கொண்டு விடுகிறான் என்பது ரஹஸ்யம். **प्रपञ्चोपशमं शान्तंशिवमद्वैतं** என்ற சுருதி இதற்கு பிரமாணம். எனவே அஜ்ஞான நிவிருத்திரூப பிரயோஜனம் ஸம்பவிப்பதால் ஸ்தோத்ராரம்பம் யுக்தமானதே.

அவதாரிகை.

பிருஹ்மம் தனக்கு அன்யமான ஜகத்தை ஆரம்பிக்கின்றதா? அல்லது பிருஹ்மமே ஜகத்தாக ஜனிக்கின்றதா? முதற்பக்ஷம் சரியில்லை. பிரும்ஹம், அதற்கு அன்யமான "ஜகத்" என்று இருவஸ்துக்கள் ஏற்படுவதால் அத்வைதம் போய்விடும். தவிர பிருஹ்மம் நிரவயவமானதால் அதற்கு ஜகத்தை ஆரம்பிக்கும் தன்மை கிடையாது.

உலகில் நிரவயவ வஸ்து ஒன்றை ஆரம்பிப்பதில்லையன்றோ? இரண்டாவது பக்ஷமும் அஸங்கதமானது. ப்ருஹ்மம் ஸர்வாம்சத்தாலும் ஜகத்ரூபமாக ஆகிறதா? அல்லது ஏகதேசாம்சத்தால் ஜகத்ரூபமாக ஆகிறதா? முதற்பக்ஷத்தில் முக்தர்கள் அடையத்தக்க ஸ்தானமில்லாமற் போகும். பிரபஞ்ச ஸம்பந்தமற்ற ப்ரம்ஹமன்றோ முக்தர்கள் அடையத்தக்க ஸ்தானம். ப்ரும்ஹம் நிரவயவமானதென்று ச்ருதிகளில் கூறியுள்ளதால் ஏகதேசாம்சத்தால் அது ஜகத்ரூபமாக ஆயிற்றென்ற இரண்டாவது பக்ஷமும் சரியில்லை. ப்ருஹ்மத்தை ஸாவயவவஸ்துவாக ஒப்புக்கொண்டாலோ, அதற்கு அநித்யத்வ தோஷமும், "**निष्कलम्**" என்கிற சுருதி விரோததோஷமும் ஸம்பவித்துவிடுமென்று ஆசங்கித்துக்கொண்டு, "**निरंशेप्यंशमारोप्य कृत्स्नेंऽशेवातिपृच्छतः। तद्भाषयोत्तरंब्रूते श्रुतिःश्रोतृहितैषिणी॥**" என்ற நியாயத்தை அனுசரித்து ஸமாதானம் சொல்லத்தொடங்குகிறார்.

यस्यैकांशादित्थमशेषं जगदेतत्
प्रादुर्भूतं येन पिनद्धं पुनरित्थम् ।
येन व्याप्तं येन विबुद्धं सुखदुःखै
स्तं संसारं ध्वान्तविनाशं हरिमीडे ॥२॥

பதவுரை.

यस्य= எந்தபரமாத்மாவின் **एकांशात्**= மாயிகமானதன் அம்சத்தால். **इत्थं**= இவ்விதமாக. **एतत्**= இந்த. **अशेषं**= எல்லா **जगत्**= உலகமும் **प्रादुर्भूतं**= உண்டாயிற்றோ **पुनः** = பிறகு **येन**= எந்த பரமாத்மாவால் **इत्थं**= வர்ணாச்ரமாதிபேதத்துடன் கூட **पिनद्धं**= நன்குகட்டப்

பட்டுளதோ **येन** = எந்தபரமாத்மாவால் **स्यात्** = உள்ளும் வெளியும் நிரம்பப்பட்டுளதோ **येन** = எந்த பரமாத்மாவால் **सुखदुःखैः** = சுகதுக்கங்களுடன் கூடிய (ஜகத்தானது) **विबुद्धं** = பிரகாசிப்பிக்கப்படுகின்றதோ **तं** = அத்தகைய **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை அகற்றுகின்ற **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

ப்ருஹ்மம் உண்மையில் நிரவயவவஸ்து. ஆயினும் மாயாசக்திஸம்பந்தத்தால் அதற்கு அனிர்வசனீயமான அவயவமும் கற்பிதமாயுண்டு. அத்தகைய ஏகதேச அம்சத்தால் இந்த ஜகத்தை ப்ருஹ்மம் உண்டுபண்ணுகிறது. "**पादोऽस्यविश्वाभूतानि । त्रिपादस्यामृतंदिवि**" என்ற சுருதி இதற்கு ஆதாரமாகும். இவ்வுலகமனைத்தும் ப்ருஹ்மத்தின் ஒரு அம்சம். மற்ற மூன்றுபாதமும் ப்ரபஞ்ச ஸம்பந்தமற்ற மோக்ஷரூப ப்ருஹ்மஸ்வரூபமாயுள்ளது என்பது இதன்கருத்து. இவ்விஷயத்தை வியாஸாசார்யாளும் பிருஹ்மஸூத்திரத்தில் "**विकारावार्तिच तथाहिस्थितिमाह**" என்ற ஸூத்திரத்தினால் கூறியிருக்கிறார்கள். இதனால் ப்ருஹ்மம் ஜகத்ரூபமாயிருப்பின் முக்தர்கள் அடையத்தக்கஸ்தானமில்லை என்கிற பிரச்னத்திற்கு அவகாசமில்லை என ஸித்தித்தது.

இவ்விதமாக பரமாத்மாவினிடமிருந்து ஜகத்தின் உத்பத்தியை கூறி, அதற்கு ஸ்திதிகாரணத்வத்தை யடுத்தபடியாகக்கூறுகிறார். "**एषसेतुर्विधरणएषां लोकानामसंभेदाय**" என்ற ச்ருதியில் தேவர், மனிதர், பசுக்கள் முதலிய ஜீவராசிகளுடன் கூடினதும், வர்ணாச்ரமாதி தர்மங்களுடன் வெகு விசித்திரங்களான இவ்வுலகங்களை ஸாங்கர்யமடையாமல் அணைபோல் பரமாத்மா பிரகாசிப்பதாக

சொல்லி யிருக்கிறது. தவிர "**यच्चकिंचिज्जगत्सर्वं दृश्यते श्रूयतेऽपिवा। अन्तर्बहिश्चतत्सर्वं व्याप्यनारायणस्स्थितः॥**" என்ற சுருதியில் கூறிய படி உள்ளும் வெளியும் பரமாத்மா நிரம்பி பரிபூர்ணமாய் விளங்குவதாக அடுத்தாற்போல் கூறியுள்ளார். **नरात्**=புருஷோத்தமனிடமிருந்து உண்டான உலகங்கள்யாவும் **नाराणि**= அவற்றிற்கு அதிஷ்டானமாயுள்ள பரமாத்மாவே **नारायणः** என்ற சப்தத்தின் அர்த்தம்.

சங்கை:—பரமாத்மாவை ஜகத்காரணமாகக் கூறமுடியாது. வைஷம்யதோஷமும், கருணையில்லாமையும் பரமாத்மாவுக்கு நேருகிறதன்றோ? தேவர்களை சுகிகளாயும், பசுபக்ஷி முதலிய திர்யக்ஜந்துக்களை துக்கிகளாயும், மனிதர்களை, சுகதுக்கங்களுடன் கூடினவர்களாயும், ஸ்ருஷ்டிக்கும் பரமாத்மாவுக்குவைஷம்ய தோஷம் அவச்யம் ஸம்பவிக்கும். அங்ஙனமே பிரளயகாலத்தில் எல்லா உலகத்தையும் ஸம்ஹாரம்பண்ணும் பரமாத்மா கருணையற்றவராவரன்றோ? என்று சங்கித்து, பிராணிகளின் கர்மாவை அபேக்ஷித்துப் பரமாத்மா ஸ்ருஷ்டி யாதிகார்யங்களில் பிரவிருத்திப்பதால் மேற்கூறிய தோஷங்கள் அவரிடம் அணுகாதென்பதை கடைசியில் கூறுகிறார். **एषह्येवसाधुकर्मकारयति तं, यमेभ्यो लोकेभ्यः उन्निनीषते, एषह्येवासाधुकर्मकारयतितं, यमेभ्यो लोकेभ्य अधोनिनीषते** என்ற சுருதி இதற்கு பிரமாணமாகும். இதனால் பூர்வபூர்வமாக அனுஷ்டித்த பிராணிகளின் புண்யபாபங்களை யனுசரித்தே தேவாதி ஜன்மங்களையும், அதற்கு சுகதுக்கங்களையும் பரமாத்மா ஸிருஷ்டிக்கிறார். இவ்விதமாயுள்ள ஸம்ஸாரம் அனாதியானபடியால் வைஷம்யதோஷமும் கருணையில்லாமை என்பதும் அவருக்கில்லை. எனவே ஜகத்

காரணத்வம் பரமாத்மாவுக்கு ஒப்புக்கொள்வதில் தோஷம் யாதொன்றுமில்லை. “वैषम्यनैघृण्येन मापेक्षत्वात्तथाहिदर्शयति” “नकर्माविभागादितिचेन्नानादित्वात्” என்று வ்யாஸாசார்யாளும் இதை மேற்கண்டவாறே தீர்மானித்திருக்கின்றனர்.

அவதாரிகை.

கார்யகாரணங்களுக்கு வைலக்ஷண்யம் இருக்கக் கூடாது. ஆகையால்பரமாத்மாவை ஜகத்காரணமாகச் சொல்லுதல்கூடாது. ஸுகதுக்கமோஹரூபமாய் ஜகத்து விளங்குகின்றது. ஸச்சிதானந்தமான பரமாத்மா இதற்குக் காரணமாக இருக்க நியாயமில்லை. ஸுகதுக்க மோஹவடிவ ஸத்வ ரஜஸ்தமோ குணரூபமான பிரதானந்தான் ஸுக துக்க மோஹரூப ஜகத்துக்குக் காரணமாக இருக்கலாம். “अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीःप्रजां सृजमानां सरूपां” என்றச்ருதியும் பிரதானத்தையே ஜகத் காரணமாகக் கூறுகிறது என்று ஆசங்கித்துக் கூறுகின்றார்.

सर्वज्ञो यो यश्च हि सर्वस्सकलो यो
यश्चानन्दोऽनन्तगुणो यो गुणधामा ।
यश्चाव्यक्तो व्यस्तसमस्तस्सदसद्यः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३॥

பதவுரை.

यः = எவன் सर्वज्ञः = ஸர்வஜ்ஞனோ? यश्चहि = எவன் सर्वः = ஸர்வஸ்வரூபனோ यः = எவன் सकलः = அதிஷ்டாதாவோ, यश्च = எவன் आनन्दः = ஆனந்தஸ்வரூபனோ यः = எவன் अनन्तगुणः = ஸர்வஜ்ஞத்வாதி அனந்தகுண

முள்ளவனோ **यः**= எவன் **गुणधामा**= மாயையை உபாதியாயுடையவனோ. **यश्च**= எவன் **अव्यक्तः**= அறியப்படாதவனோ **व्यस्तः**= பின்னப் பிரபஞ்சவடிவனோ **समस्तः**= எல்லாப் பிரபஞ்சவடிவனோ **यः**= எவன் **सत्**= ஸத்யஸ்வரூபனோ **असत्**= அஸத்ய ரூபனோ. **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளைப்போக்குகின்ற **हरिं**=ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

सर्वज्ञः = எல்லாவற்றை உணருபவன் என்றுபொருள்: "**यस्सर्वज्ञस्सर्वविद्यस्यज्ञानमयंतपः**" என்பது சுருதி. "எவன் ஸாமான்யமாயும் விசேஷமாயும் எல்லாமுணர்ந் தவனோ, எவனுக்கு ஞானமே தபஸ்ஸோ" என்று இதனர்த்தம்.

இதனால் பிரதானம் ஜகத்காரண மன்றென்று நிரூபிக்கப்பட்டுளது. ஏனெனின்? பிரதானம் ஜடமானதால் அதற்கு நாநாவித கர்மபலரூபமான தேஹாதிகளுடன் கூடிய ஜகத்தை உண்டுபண்ண சக்தியில்லை, பாஹ்யப் பிரபஞ்சத்தில் சுகமிருப்பதாகக் கூறுவதும் தவறு. உள்ளேயன்றோ சுகமிருக்கிறது: தவிர ஜடவஸ்து தானாக பிரவிருத்திப்பதாக உலகத்தில் காணோம். "**अजामेकां**" என்ற சுருதியும் பரமாத்மாவினிடம் கற்பிதமாயையைத் தான் தெரிவிக்கிறது. ஆகையால் பிரதானத்தை ஜகத்காரணமாக கூறமுடியாது. வ்யாஸாசார்யாளும் பிருஹ்ம ஸூத்திரத்தில் "**ईक्षतेर्नाशब्दं**" "**रचनानुपत्तेश्चनानुमानं**" என்ற சூத்திரங்களால் பிரதானம் ஜகத்காரண மன்றென்று கூறியுள்ளார்கள். எனவே ஸர்வஜ்ஞனை பரமாத்மாவே ஜகத்காரணம் என்று கருத்து. பரஸ்பர விலக்ஷணங்களான பரமாத்மாவும், ஜகத்தும் எங்ஙனம் கார்யகாரண

பாவத்தை அடையலாம் என்ற சங்கையும் சரியில்லை. சிலந்திப்பூச்சிக்கும், நூலுக்கும், சாணிக்கும், தேளுக்கும், புருஷனுக்கும் கேசங்களுக்கும் வைலக்ஷண்யம் இருந்த போதிலும் கார்ய காரணபாவம் கண்டிருப்பதுபோல், பரமாத்மாவுக்கும் ஜகத்துக்கும் வைலக்ஷண்ய மிருந்தாலும் கார்யகாரணபாவம் கூறலாமென்பதை மனதில் கருதி "**यश्चाहिसर्वः**" என்கிறார். "**सर्वंखल्विदंब्रह्म**" "**इदंसर्वंयदयमात्मा**" என்பது ச்ருதி. தவிர பரமாத்மாவின் ஸாத்ருச்யம் ஜகத்திற்கும் இல்லாமலில்லை. "குடம் இருக்கிறது" "குடம் விளங்குகிறது" என்ற அனுபவத்தால் ஸத்தையும் ஸ்புரணமும் ஜகத்தில் இருக்கிறதன்றோ? ஸத்தையும், ஸ்புரணமும் பரமாத்மாவினுடையதே யொழிய குடம் முதலிய வஸ்துக்களுடைய தன்று.

ஜடமான பிரதானத்திற்குத்தானுகவே ஸ்ருஷ்டியாதிகளில் பிரவிருத்தி ஏற்படாவிடினும், ஈச்வரனை அதற்கு அதிஷ்டாதாவாக அங்கீகரித்து, ஸ்ருஷ்டியாதிப்பிரவிருத்தியை கூறலாம் என்ற ஸேச்வர ஸாங்கியமதத்தினரின் ஆக்ஷேபத்துக்கு "**सकलोयः**" என்பதால் சமாதானம் கூறுகிறார். ப்ரகிருதியாயும, நிமித்தமாயும் உள்ளவர் எவரோ என்று பொருள். அதாவது:—"**सोकामयतबहुस्यां-प्रजायेयेति**" என்ற சுருதியில் பரமாத்மா வெகுவிதமாக ஆவதற்கு ஸங்கல்பித்ததாகச் சொல்லியுள்ளதாலும், "**तदात्मानंस्वयमकुरुत**" என்றவிடத்தில் பரமாத்மாவே ஜகத்ரூபமாயிற்றென்று தெரிவதாலும், "**कस्मिन्नुभगवो विज्ञाते सर्वमिदंविज्ञातंभवति**" "**येनाश्रुतंश्रुतंभवति**" "**आत्मनिखल्वरेदृष्टे श्रुतेमतेविज्ञाते इदंसर्वंविदितंभवति**" என்பதாதிச்ருதிகளில் கூறியுள்ள "ஒன்றை அறிந்தால் எல்லாம் தெரியு" மென்ற பிரதிஜ்ஞையானது ஈச்வரனையும் பிரகிரு

தியையும் வேறாக ஒப்புக்கொண்டால் பங்கத்தையடையு மானதாலும், பிரகிருதியைக்காட்டிலும் வேறான ஈச்வரனை அனுமானப்பிரமாணத்தால் ஸாதிக்க முடியாமலிருப்பதாலும், பரமாத்மாவே பிரகிருதியும் அதிஷ்டாதாவுமாக அங்கிகரிக்கவேண்டும். ப்ருஹ்ம ஸூத்திரத்தில் "प्रकृतिश्चप्रतिज्ञादृष्टान्तानुपरोधात्" "साक्षाच्चोभयाम्नानात्" "आत्मकृतेः परिणामात्" "पत्युरसामंजस्यात्" என்ற ஸூத்திரங்களால் பரமாத்மாவை பிரகிருதி அதிஷ்டாதாவாயும் நிமித்தகாரணமாகமட்டுமில்லை என்பதாயும் கூறியிருக்கிறது. ஆகையால் ஈச்வரனை நிமித்தமாய் வைத்துக்கொண்டு பிரகிருதிக்கு ஜகத்ஸ்ருஷ்டியாதி பிரவிருத்தியைக்கூறும் ஸேச்வர ஸாங்க்யமதமும் சரியானதன்று.

"தனக்குப்பிரயோஜனமில்லாத ஜகத்ஸ்ருஷ்டியாதி கார்யங்களைச்செய்யும் பரமாத்மா உந்மத்தன்போன்று ப்ரேக்ஷாபூர்வகாரியாக (முன்னாலோசனையுடன் கார்யங்களைச்செய்கிறவனாக) ஆகமாட்டான். தன் பிரயோஜனத்தைக் கருதி ஜகத்ஸிருஷ்டியாதிகார்யங்களை பரமாத்மா செய்வதாக அங்கிகரித்தால் அவரை நித்யத்ருப்தர் எனச்சொல்லமுடியாமற்போகும். எனவே பரமாத்மாவை ஜகத்காரணமாக எங்ஙனம் கூறலாம்? என்ற சங்கைக்கு "यश्चानन्दः" என்பதால் உத்தரங்கூறுகிறார். எப்போதும் பிரகாசிக்கிற நிரதிசயாநந்தஸ்வரூபன் பரமாத்மாவென்று பொருள். "आनन्दोब्रह्म," "नित्यंविज्ञानमानन्दंब्रह्म" एतस्यैवानन्दस्यान्यानिभूतानि मात्रामुपजीवन्ति" என்று சுருதிகள் கூறுகின்றன. ஆப்தகாமனாய், நிரதிசயாநந்தஸ்வரூபியான பரமாத்மாவுக்கு அடையத்தகுந்த வஸ்து கிடையாததால் நித்ய திருப்திக்கு யாதொருஹானி இல்லை என்று கருத்து. உலகத்திலும் ப்ரேக்ஷாபூர்வகாரியாயுள்ள

சக்ரவர்த்தியானவன் பிரயோஜனமின்றியே "வேட்டையாடுதல்" "விளையாடுதல்" முதலியவைகளில் பிரவிருத்திப்பதால் உன்மத்தனென்று அவனை கூறுவதில்லை. பிராணிகளின் கர்மானுஸாரமாக ஜகத்ஸ்ருஷ்டியாதிகார்யங்களைச்செய்வது பரமாத்மாவுக்கு ஸ்வபாவம். அந்த ஸ்வபாவத்தைப்பற்றிக் கேள்விகேட்கக்கூடாது. வியாஸாசார்யாளும், "**नप्रयोजनवत्वात्**" என்ற சூத்திரத்தினல் பிரயோஜனமில்லாததால் பரமாத்மா ஜகத்கர்த்தாவன்றென்று ஆசங்கித்துக்கொண்டு "**लोकवत्तुलीलाकैवल्यं**" என்ற சூத்திரத்தினல் அரசனுக்குப்போல் பரமாத்மாவிற்கு ஜகத்ஸ்ருஷ்டியாதிகள் விளையாட்டானதால் பிரயோஜன சர்ச்சைக்கு அவகாசமில்லை என ஸமாதானம் கூறியுள்ளார்

"உலகில் குயவன் முதலியோர் சரீரத்துடன் கூடினவர்களாய், குடம்முதலியவற்றைச்செய்யும் சக்தியுற்றவர்களாய், அவற்றின் பிரயோஜனத்தை அறிந்தவர்களாய், மண் தண்டம், முதலிய உபகரணங்களால் குடம்முதலியவற்றை உண்டுபண்ணுவதாகக் காணப்படுகிறது. பரமாத்மாவோ, நிர்விகல்பர், சரீரமற்றவர், அதனலேயே ஸ்ருஷ்டி சக்தியற்றவர், ஸ்வப்ரயோஜனமற்றவர். தனக்கு அன்யமான வஸ்து இல்லாததால் பாஹ்ய உபகரணங்களில்லாதவருமாவர். இத்தகையபரமாத்மா ஜகத்தை எங்ஙனம் ஸ்ருஷ்டிக்கலாமென்ற சங்கைக்கு "**अनन्तगुणः**" "**गुणधामा**" என்றவிசேஷணங்களால் சமாதானம் கூறுகிறார். மாயாசக்தியை உபாதியாகக்கொண்டவரென்றும், ஸர்வசக்தி ஸர்வஜ்ஞத்வம் முதலியகுணங்களுள்ளவரென்றும் இதன்கருத்து. இதனல் குயவனைப்போல் பரமாத்மா இல்லாமலிருந்தாலும், மாயாசக்தியாலும் ஸர்வஜ்ஞத்வாதி குணங்களாலும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கலாம்

என்று கூறப்பட்டது. பாஹ்யஸாதனமின்றியே பால் தயிருக்குக் காரணமாதல்போல் பரமாத்மாவும் காரண மெனலாம். தவிரதேவர்களும் யோகிகளும் பாஹ்யஸாதன மின்றியேயோகசக்தியால் ஸ்ருஷ்டிசெய்வதாக புராணாதி களில் வர்ணிக்கப்பட்டுளது. மேலும் வேறு சரீரமில்லாமல் ஆத்மா இந்தஸ்தூல சரீரத்திற்கு நிமித்தகாரணமாக இல்லையா? பரமாத்மாவும் பாஹ்யஸாதந மின்றியே காரண மாயிருக்க என்னதடை? "पराऽस्यशक्तिर्विविधैवश्रूयते" "मायां तु प्रकृतिंविद्यान्मायिनंतुमहेश्वरं" என்றசுருதிகளில் பரமாத்மாவுக்கு ஸர்வ ஸாமர்த்தியம் பொருந்திய மாயா சக்தியொன்றிருப்பதாக சொல்லியுள்ளது. அங்ஙனமே ப்ருஹ்மஸூத்ரமும். "उपसंहारदर्शनान्नेतिचेन्न क्षीरवद्धि" "देवादिवदपिलोके" "सर्वधर्मोपपत्तेश्च" என்று. "அவ்வித மானால் பிரஸித்தமாயாவியைப் போல் பரமாத்மாவை ஏன் அறியமுடியவில்லை" என்பதற்கு "अव्यक्तः" என்பது ஸமாதானம். "अचिन्त्यमव्यक्तं" "अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसंनित्यमगन्धवच्चयत्" என்றசுருதிகளில் ரூபாதி களில்லாததால் பரமாத்மா இந்திரிய விஷயமாகாதென்று சொல்லியிருப்பதால் பரமாத்மாவை அறியமுடியவில்லை என்பது கருத்து.

"பரமாத்மாவே ஜகத்ரூபமென்றால் போக்தா போக்யமென்ற பேதம் ஸித்திக்காமல் போகுமென்ற சங் கைக்கு "व्यस्तस्समस्तः" என்ற விசேஷணங்களால் உத்த ரம் உரைக்கப்பட்டுளது. போக்தா, போக்யம் என்று பின்னமாயும், அபின்னமாயும் பரமாத்மா இருக்கிறார் என்று கருத்து. ஒரே ஸமுத்திரம், நுரை அலை, குமுழி, ரூபத்தால் பின்னமாயும், வாஸ்தவத்தில் ஒன்றாயுமிருப் பதுபோல் பரமாத்மா அபின்னமாயிருந்தாலும் பின்ன

மாயு மிருக்கலாம். "" **भोक्त्रापत्तेरविभागश्चेत्स्याल्लोकवत्** " என்ற ப்ருஹ்ம ஸூத்திரத்தில் இந்த விஷயம் நிரூபிக்கப் பட்டுளது. ஆனதால் பரமாத்மாதான் ஜகத்காரணம். பரமாத்மா ஸத்யாநிருத போக்ய வஸ்து ரூபமாக இருக் கிறார் என்பதை **सदसद्यः** என்ற பாகத்தால் உறைக்கி றார். ஸத்—ஸத்யம் அஸத்—அஸத்யம். வ்யாவஹாரிக பதார்த்த ரூபமாயும், பிராந்திபதார்த்த ரூபமாயுமிருக்கி றார் என்று கருத்து. " **सत्यंचानृतंचसत्यमभवत्** " என்பது ச்ருதி.

அவதாரிகை.

கார்யமெல்லாம் தனக்கு ந்யூநமான (குறைந்த) பரிமாண முள்ளதிரவ்யத்தால் ஆரம்பிக்கப்படுகின்ற தென்றவ்யாப்தி குடம் முதலியவற்றில் காணப்படுவதால் ந்யூநபரிமாண முள்ளத்ரவ்யத்தால் தான் கார்ய முண்டாகுமென்ற நியமம் அங்கீகரிக்கவேண்டும். ஆகவே பரமாணுக்களே ஜகத் காரணமாகும். வியாபகமான பிருஹ்மமில்லை என்று ஆசங் கித்து உத்தரம் கூறுகிறார்.

यस्मादन्यक्षास्त्यपिनैवं परमार्थः
दृश्यादन्यो निर्विषयज्ञानमयत्वात् ।
ज्ञातृज्ञानज्ञेयविहीनोऽपिसदाज्ञः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥४॥

பதவுரை.

यस्मात्=எந்த விஷ்ணுவைக்காட்டிலும் **अन्यत्**= வேறாக பரமாணு முதலியவை **नास्ति**=இல்லையோ, **एवमपि**=பரமாணு முதலிய ஜகத்ஸ்வரூபமாயிருந்தாலும், **न परमार्थः**=உண்மை இல்லையோ. **निर्विषयज्ञानमयत्वात्**=

விஷய ஸம்பந்தமற்ற ஞானவடிவனுனதால் **दृश्यादन्यः**= பாஹ்யப்பிரபஞ்சத்திற்கு வேறானவரோ, **ज्ञातृज्ञानज्ञेय-विहीनः**=அறிகிறவன், அறிவு–அறியப்படும் பொருள் இந்த பேதமில்லாமலிருந்தாலும் **सदा**=எப்போதும் **ज्ञः**= அறிவுருபனே **तं**=அத்தகைய **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை நசிப்பிக்கும் **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

ஸச்சிதாநந்தரூபியான பரமாத்மாவுக்கு அன்யமாக பரமாணு முதலிய வஸ்து இல்லை என்பதை "**एकमेवा-द्वितीयं**" "**यस्मात्परंनापरमस्तिकिंचित्**" என்ற சுருதிகளும் கூறுகின்றன.

கார்யம் யாவும் ந்யூநபரிமாணத்ரவ்யத்தால் ஆரம்பிக்கப்படும் என்ற வ்யாப்தி சரியில்லை. நீண்ட அகன்ற நூலால் சிறியகயிறு உண்டுபண்ணும் விஷயத்தில் அந்த வ்யாப்தி கூறமுடியவில்லை. சுருதியும் அந்த வ்யாப்திக்கு விரோதமாயுள்ளது. "பரமாத்மா யதார்த்தமாக ஜகத்ரூபமாய் பரிணமிக்கின்றது" என்ற பாஸ்கராசார்ய மதத்தை "**अपिनैवंपरमार्थे**" என்பதால் கண்டனம்புரிகிறார். "**निष्कलंनिष्क्रियं**" என்ற சுருதியால் பரமாத்மா நிரவயவரென்று தெரியவருவதால் ஏகதேசாம்சத்தால் பரிணமம் சொல்லமுடியாது. ஸர்வாம்சத்தால் பரிணமம் கூறினல் பரமாத்மா இல்லாமற்போவார். மீண்டும் பிரளயத்தில் ஸச்சிதானந்தரூபமாய் பரமாத்மா பரிணமிப்பாராஞல் அவர் அநித்யராவார். ஸமுத்திரம் ஸாவயவமானதால் ஏகதேசத்தால் நுரை முதலிய பரிணமம் ஏற்பட்டாலும், ஏகதேசத்தில் அது ஸ்திதியடையலாம். ஆகவே பரமாத்மா ஜகத்ரூபமாய் இருப்பது யதார்த்தமில்லை.

ப்ருஹ்மஸூத்திரக்காரரும் "कृत्स्नप्रसक्तिर्निरवयत्वशब्द-कोपोवा" என்ற அதிகரணத்தில் பரிணாமவாதத்தை நிரா கரித்துவிட்டு "तदनन्यत्वं आरंभणशब्दादिभ्यः" என்ற அதிகரணத்தில் விவர்த்த வாதத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

"எல்லோருக்கும் ப்ரத்யக்ஷமாய் காணப்படும் ஜகத்து த்ருச்யமாயிருப்பதால் பொய்யென்று கூறினால் பரமாத்மாவும் த்ருச்யமாயிருப்பதால் பொய்யாயாகும்" என்ற சங்கையை "दृश्यादन्यः" என்ற விசேஷணத்தால் நிரா கரிக்கிறார். "अदृष्टोद्रष्टा" என்ற சுருதியால் பரமாத்மா த்ருக்ரூபனென்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணத்தை "निर्विषयज्ञानमयत्वात्" என்ற விசேஷணம் உரைக்கிறது "विज्ञानघनएव" என்று ச்ருதி விஷயசூன்ய அறிவே பரமாத்மாவென்று சொல்கிறது.

கூடஸ்தஞானமாத்திர ஸ்வரூபமான பரமாத்மாவுக்கு ஸர்வஜ்ஞத்வம் எங்ஙனம் கூறமுடியும் என்று சங்கித்து ज्ञातृज्ञानज्ञेयविहीनोपि सदाज्ञः" என்று கூறுகிறார். எப்போதும் ஸந்நிதிமாத்திரத்தால் ஸர்வத்தையும் பிரகாசிப்பிக்கச்செய்வதால் ஸர்வக்ஞத்வம் ஸம்பவிக்கலாம். "सवेत्तिवेद्यंनचतस्यास्तिवेत्ता" என்பது சுருதி. ஜகத்து பொய்யானதால் பரமாத்மாவுக்குக் காரணத்வமும் வாஸ்தவமில்லை. தடாஸ்தமாயிருந்துக்கொண்டு அது உபலக்ஷணம், விசேஷணமின்று.

அவதாரிகை.

இவ்விதம் கேவலயுக்தியால் அறியமுடியாததும், வேதாந்தமாத்திரத்தால் அறியத்தகுந்ததும், ஜகத்காரணமுமான பரமாத்மாவை துதித்துவிட்டு, பக்திமுதலிய ஸாதநங்களாலும், குரு சுச்ரூஷையாலும் அறியக்கூடியதாக அப்பரமாத்ம ஸ்வரூபத்தை துதிக்க ஆரம்பிக்கிறார்.

आचार्येभ्यो लब्धसुसूक्ष्माऽच्युततत्त्वाः
वैराग्येणाऽभ्यासबलाच्चैव द्रढिम्ना ।
भक्त्यैकाग्र्यध्यानपरा यं विदुरीशं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥५॥

பதவுரை.

आचार्येभ्यः = ஆசார்யாளிடமிருந்து. **लब्धसुसूक्ष्माच्युततत्त्वाः** = அதிஸூக்ஷ்ம பரமாத்மதத்வமுணர்ந்தவர்களாயும் **वैराग्येण** = வைராக்யத்தாலும் **अभ्यासबलाच्चैव** = ச்ரவணமனனப்யாஸபலத்தாலும், **द्रढिम्ना** = திடமாயுமுள்ள **भक्त्या** = பக்தியால் **ऐकाग्र्यध्यानपराः** = ஏகாக்ரமான த்யான நிஷ்டையையடைந்தவர்கள் **यं** = எந்த **ईशं** = பரமாத்மாவை **विदुः** = ஸாக்ஷாத்கரிக்கிறார்களோ, **तं** = அத்தகைய **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நசிப்பிக்கும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

அதிஸூக்ஷ்மமான பரமாத்மஸவரூபத்தை ஆசார்யனுடைய அனுக்ரஹத்தால் த்தான் ஸாக்ஷாத்கரிக்க முடியும். உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்தவர்களாயும், தன்னை சாஸ்திரமுறைப்படி அடைக்கலமடைந்த சிஷ்யர்களுக்கு கருணையால் ஞானத்தை உபதேசிப்பவரே ஆசார்யராவார், "**आचार्यवान्पुरुषोवेद**" "**तद्विज्ञानार्थंसगुरुमेवाभिगच्छेत्समित्पाणिःश्रोत्रियंब्रह्मनिष्ठं**" "**नैषातर्केणमतिरापनेयाप्रोक्ताऽन्येनैवसुज्ञानायप्रेष्ठ**" "**तद्विद्धिप्रणिपातेन**" என்றசுருதிஸ்மிருதிகள் ஆசார்யனவச்யமெனதை வற்ப்புறுத்துகின்றன. ஆசார்யன் அருளால்ஞானமடைந்த பின்பும் "அபாவனை, அஸம்பாவனை, விபரீத

பாவனை, தோஷங்களால் அதுதிடப்படாமல் இருக்கும் பக்ஷத்தில் அதற்காக வைராக்யாதி ஸாதனங்களை **वैराग्येण** என்பதாதியால் உபதேசிக்கிறார். “ **ब्रह्मलोकतृणीकारोवैराग्यस्यावधिर्मतः** ” என்று ப்ருஹ்மலோகத்தை திருணமாக நினைக்கக்கூடிய பரவைராக்யத்தால் மனனம் திடப்படும் அதனால் நிதித்யாஸநவடிவ பக்தியும் திடமாகும். “நானே ப்ருஹ்மம்” என்றஐக்ய ஞானதாரையே பக்தியாகும். அதற்குநானேப்ருஹ்மம் என்ற ஐக்யத்யானம்வேண்டும். இத்தகைய ஸாதனப்யாஸத்தால் அஸம்பாவனாதிதோஷங்கள் விலகும் என்று கருத்து. வைராக்யம், ச்ரவண, மனன நிதித்யா ஸனப்யாஸம், பரபக்தி இவையாவும், ஞானம் உண்டான பிறகும் கூட அவச்யம் அப்யஸித்தல்வேண்டும். “ **नायमात्माप्रवचनेननलभ्यः नमेधयानबहुनाश्रुतेन** ” “ **यमेवैषवृणुते तेनलभ्यः तस्यैषआत्मविवृणुतेतनूंस्वां** ” “ **अभ्यासेनतु कौन्तेयवैराग्येणचगृह्यते** ” “ **भक्त्यामामभिजानातियावान्यश्चास्मितत्त्वतः** ” என்றசுருதி ஸ்மிருதிகள் இதற்குப் பிரமாணங்கள்.

அவதாரிகை.

ஏகாக்ரத்யரதபர்கள் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கின்றனர் என்று முன்பு கூறப்பட்டது. அவர்கள் எந்தப்பிரகாரமாக பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கின்றனர் என்பதை நிரூபிக்கிறார்.

प्राणानायम्यौ मिति चित्तं हृदि रुध्वा
नान्यत्स्मृत्वा तत्पुनरत्रैव विलाप्य ।
क्षीणे चित्ते भादृशिरस्मिति विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥६॥

பதவுரை.

प्राणान्=வாகாதி இந்திரியங்களை **आयम्य**=அடக்கி, **ॐमिति**=ஓம் என்றும் பிரணவத்தை (உச்சரித்துக் கொண்டு) **चित्तं** = அந்த:கரணத்தை **हृदि**=ஹ்ருதயாகாசத்தில் அல்லது பரமாத்மாவில். **रुध्वा**=நிரோதம்செய்து **अन्यत्**=ரூபாதி வஸ்துக்களை **नस्मृत्वा**=(விஷய தோஷதர்சனத்தால்) ஸ்மரிக்காமல் **पुनः**=பிறகு **अत्रैव**=அந்த பரமாத்ம ஸ்வரூபத்திலேயே **तत्**=அந்த அந்த: கரணத்தை **विलाप्य**=லயமாகும்படி செய்து **चित्ते**=அவ்வந்த: கரணம் **क्षीणे**=நசித்தவுடன் **भाद्दशिः**=ஸ்வப்ரகாச பரமாத்மாவாக **अस्मि**=(நான்) இருக்கிறேன் **इति**=என்று **यं**=எவரை **विदुः**=அறிகின்றனரோ? **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை அகற்றுகின்ற **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

“**प्राणानायम्य**” என்பதால் பிராணன் முதலிய வாயுக்களையும், இந்திரியங்களையும் அடக்கவேண்டும் என்று கூறப்பட்டது. அந்த:கரணத்தை ஹ்ருதயாகாச பரமாத்மாவினிடம் நிலைப்பெறச்செய்து, ஆுத்மசப்த ஸ்பர்சாதி விஷயங்களை தோஷதரிசனத்தால் தூரவிலக்கிவிட்டு ஓங்காரத்தை அநுஸந்தானம் செய்யவேண்டும். “ **ॐमित्यात्मानंयुञ्जीत** ” “ **ॐमित्येवंध्यायतआत्मानं** ” “ **ॐमित्येकाक्षरंब्रह्मव्याहरन्मामनुस्मरन्** ” என்ற சுருதி ஸ்மிருதிகளில் ஓங்காரத்யானம் கூறப்பட்டுளது. இங்கு கூறியுள்ள ப்ராணாயாமாதி யோகாப்யாஸ முறையை ஸ்ரீகீதாசார்யாளும் அடியிற் கண்ட சுலோகங்களால் உபதேசித்திருக்கிறார்.

"संकल्पप्रभवान्कामांन्त्यक्त्वासर्वानशेषतः ।
मनसैवेन्द्रियग्रामं विनियम्यसमन्ततः ।
शनैः शनैरुपरमेद्बुध्याधृतिगृहीतया ।
आत्मसंस्थं मनः कृत्वा नकिंचिदपिचिन्तयेत् ।
यतोयतोनिश्चरति मनश्चंचलमस्थिरम् ।
तस्ततोनियम्यै तदात्मन्येववशंनयेत् ।

யோகாப்யாஸத்தால் ஸமாதிநிலையடைந்தால் தத்வ ஞானம் உண்டாகும் என்பதை ஸ்ரீபாரதீதீர்த்தஸ்வாமிகளும் சொல்லியிருக்கிறார்.

निर्गुणोपासनंपक्वं समाधिस्थाच्छनैस्ततः ।
यस्समाधिर्निरोधाख्यस्सोऽनायासेनलभ्यते ॥
निरोधलाभेपुंसोऽन्तरसंगंवस्तुशिष्यते ।
पुनःपुनर्वासितेऽस्मिवाक्याज्जायेततत्वधीः ॥
यच्छेद्वाङ्मनसीप्राज्ञस्तद्यच्छेज्ज्ञान आत्तनि ।
ज्ञानमात्मनिमहतिनियच्छेत् तद्यच्छेच्छान्त आत्मनि ॥

சுருதியும் யோகாப்யாஸம் செய்வதற்கு பிரமாணமாகும். "நான் பரமாத்மாவாய் இருக்கிறேன்" என்ற விருத்தி ஞானத்தையும் பரமாத்மாவினிடம் லயப்படுத்தின பிறகு ஞானி பரமாத்மாவே ஆகிறானென்னபதை பராசரரும் **दर्शनादर्शनेहित्वास्वयंकेवलरूपतः । यस्तिष्ठति-सतुब्रह्मन् ब्रह्मनब्रह्मवित्स्वयं ॥** என்ற சுலோகத்தால் கூறியுள்ளார்.

அவதாரிகை.

" **तमेवधीरोविज्ञायप्रज्ञांकुर्वीतब्राह्मणः** " என்றசுருதியும், " **अनन्याश्चिन्तयन्तोमां येजनाः पर्युपासते । तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहं ॥** " " **ध्यानेनात्मनिपश्यन्तिकेचिदात्मानमात्मना ।** " என்ற பகவத்கீதைவசனமும், இவ்வர்த்தத்தை உரைப்பதாகச் சொல்கிறார்.

यं ब्रह्माख्यं देवमनन्यं परिपूर्णं
हृत्स्थं भक्तैर्लभ्यमजं सूक्ष्ममतर्क्यम् ।
ध्यात्वात्मस्थं ब्रह्मविदो यं विदुरीशं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥७॥

பதவுரை

देवं= ஸ்வப்பிரகாச மாயும் **अनन्यं**= அன்யவஸ்து சூன்யமாயும். **परिपूर्णं**= எங்குமெப்போதும் நிரம்பியுள்ளதாயும். **ब्रह्माख्यं** = ப்ருஹ்மம் என்ற பெயருள்ளதாயும், **भक्तैः**= ச்ரவணமனனாதிகளால் நித்யம் பஜனம் பண்ணுகிறவர்களால் **लभ्यं**= அடையத்தகுந்ததாயும், **अजं**= ஜன்மமின்றியதாயும், **सूक्ष्मं**= இந்திரியாகோசரமாயும், **अतर्क्यं**= தர்க்கத்தால் அறிய முடியாததாயும், **आत्मस्थं**= சரீரத்தில் ஜீவரூபமாய் பிரகாசிப்பதாயும் உள்ள **यं**= எந்தபரமாத்மாவை **ध्यात्वा**= தியானித்து **ब्रह्मविदः** = ப்ருஹ்மவித்துக்களாக (ஆகின்றார்களோ) **हृत्स्थं**= ஹிருதயத்தில் அந்தர்யாமியாயுள்ள **यं**= எந்தபரமாத்மாவை **ईशं**= வ்யாபக பரமாத்மாவாக **विदुः**= அறிகின்றார்களலோ. **तं**= அத்தகைய **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை அகற்றும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

இங்கு கூறிய பரமாத்மாவின் விசேஷணங்கள் யாவு உபநிஷத்துக்களில் கூறியவையேயாகும். அதாவது:— " **अत्रायं पुरुषस्स्वयंज्योतिर्भवति** " என்றும் சுருதி ஸ்வப் காசமென்பதையும், " **यस्मात्परंनापरमास्ति-किंचित्** " என் சுருதிதனக்கு அன்யவஸ்து இல்லை என்பதையும் " **ब्रह्मैवेदममृतंपुरस्तात्** " என்ற சுருதி பரிபூர்ணமென்பதை யும், " **अंगुष्ठमात्रः पुरुषोमध्यआत्मनितिष्ठति, ईशानो भूत भव्यस्यसएवाद्यसउश्वः॥** " என்ற சுருதி எல்லோருடைய ஹ்ருதயத்திற்குள் அந்தர்யாமியாயிருக்கிறாரென்பதையும், " **तेसर्वगंसर्वतः प्राप्यधीरायुक्तात्मानः** " என்னும் சுருதி பக்திரிகளால் அடையத்தகுந்ததென்பதையும் " **महानज आत्मा** " என்ற சுருதி ஜன்மமில்லாதவரென்பதையும் " **सूक्ष्मात् सूक्ष्मतरंनित्यं** " என்ற சுருதி ஸூக்ஷ்ம மென் பதையும், " **तं त्वौपनिषदपुरुषं** " என்ற சுருதிதர்க்கா விஷயமென்பதையும், " **तदेवानुप्राविशत्** " " **अनेनजीवे नानुप्रविश्य** " என்ற சுருதிகள் சரீரத்திற்குள் பிரவேசித் திருப்பதையும், பிரதிபாதிக்கின்றன.

அவதாரிகை

பக்திமுதலியஸாதனங்களால் பரமாத்மா ஸாக்ஷாத் கரிக்கத் தகுந்தவர் என்று துதித்துவிட்டு இப்போது தத் த்வம்பதார்த்த விவேகத்தாலும் அப்பரமாத்மாவை அறிய பரம்துதிக்க ஆரம்பிக்கிறார்.

मात्रातीतं स्वात्मविकासात्मविबोधं
ज्ञेयातीतं ज्ञानमयं हृद्युपलभ्यम् ।
भावग्राह्यानन्तमनन्यं च विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥८॥

பதவுரை.

मात्रातीतं = கண்முதலிய இந்திரியாகோசரமாயும், **स्वात्मविकासात्मविबोधं** = ஸாக்ஷிசைதன்ய ஸம்பந்தத்துடன் கூடிய அந்த:கரணத்தில் விசேஷஞான ரூபமாயுள்ளதும், **ज्ञेयातीतं** = ஞானவிஷய வஸ்துவைத் தாண்டியுள்ளதும் **ज्ञानमयं** = ஞானஸ்வரூபமாயுள்ளதும் **हृदि** = அந்த:கரணத்தில் **उपलक्ष्यं** = அறியத்தகுந்ததும், **भावग्राह्यानन्दं** = ஸத்வஸ்துவாய் கிருஹிக்கத்தக்க ஆனந்தஸ்வரூபமாயும் அல்லது அந்த:கரணத்தால் அறியக்கூடிய ஆனந்தரூபமாயும். **अनन्यत्वं** = த்வைத சூன்யமானதுமான **यं** = எந்த பரமாத்மாவை **विदुः** = அறிகிறார்களோ, **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளைப்போக்குகின்ற **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

பரமாத்மா நாமரூபசூன்யரானதால் அவரைகண்முதலிய இந்திரியங்களாலேலா, தபஸ்ஸாலேலா, கர்மாக்களாலேலா தெரிந்து கொள்ளமுடியாது. “**नचक्षुषा गृह्यते नापि वाचा नान्यैर्देवैस्तपसा कर्मणा वा**” என்றசுருதி-கண்முதலியவற்றால் பரமாத்மாவை கண்டறிய முடியாதென்றால் அத்தகைய பரமாத்மா இருக்கமுடியாதெனநிகழும் சங்கைக்கு “**स्वात्मविकासात्मविबोधं**” என்பதால் பதில் கூறுகிறார். அதாவது:—ஸாக்ஷி அறிவுரூபமாயுமுள்ளது. அதன் ஸம்பந்தத்தால் ஜடமான அந்த:கரணத்தில் “இதுகுடம்” என்பதாகிய விசேஷ அறிவுஉதிக்கிறது.

அந்த:கரணவிருத்திஞானமென்று இவ்விசேஷ அறிவைக்கூறுவது வழக்கம். இதற்கு உத்பத்தி நாசம் விஷய ஸம்பந்தா ஸம்பந்தங்களால் உண்டு. இத்தகைய

விருத்தி ஞானத்திஞல் ஆத்ம ஸ்வரூப ஞானத்தை அவச்ய மங்கீகரித்தாகவேண்டும். ஸ்வப்ரகாச ஞான வஸ்து இல்லை எனல் தகாது என்று இதன் தாத்பர்யம். இத்தகைய வஸ்துவை அந்தःகரணத்தால் அறியலாமோ வென்றல் அது ஞேய வஸ்துவல்லவென்று "ज्ञेयातीतं" என்பதால் சொல்கிருர். அந்தःகரண விருத்தி ஞானத்தால் பாஹ்ய வஸ்துக்களை அறியலாம். ஸர்வாந்தரமான பரமாத்மாவை அறியமுடியாது. விருத்தி ஞானத்திற்குக் காரணமான அவ் வஸ்துவினிடம் அதுபோகாது. இதனுல் பரமாத்மா ஞான விஷயரல்ல. ஞான விஷயமாகக்கூடிய யோக்யதை இல் லாத பரமாத்மாவை எப்படி ஞான விஷயமாகச் செய்ய முடியும் "अन्यदेवतद्विदितात्" "अप्रमेयमनादिंच" என்ற சுருதிகளும் பரமாத்மா ஞேயதீதரென்று கூறுகின்றது. ஞேயாதீதம் என்பதை நிரூபிக்கிறதற்காகவே "ज्ञानमयं" என்று கூறுகிருர். "सत्यंज्ञानमनन्तंब्रह्म" "विज्ञानमानन्दं ब्रह्म" என்ற சுருதிகளும் பரமாத்மா ஞான ஸ்வரூப னென்று சொல்கின்றன. ஞேயாதீதனுயும், ஞான ஸ்வ ரூபியாயும் உள்ள பரமாத்மா அந்தःகரணத்தில் தோன்று வதெப்படி என்பதை "हृद्युपलभ्य" என்பதால் நிரூபிக் கிருர். ஆகாசத்தில் தடஸ்தமாயுள்ள ஆதித்யன் கண்ணுடி முதலியவற்றில் பிரதிபிம்பிக்கிறதுபோல், ஞேயாதீதமாய், ஞான மாத்திரமாயுள்ள பரமாத்மாவும் அந்தःகரணத் தில் பிரதிபிம்பிக்கிருர். அந்த பரமாத்மாகாரமாயுள்ள விருத்தியால்தான் அவ்வாத்மாவை உணர முடியும். இவ் விஷயத்தைத்தான் "मनसैवेदमाप्तव्यं" "एषोणुरात्माचेतसावेदितव्यः" "दृश्यतेऽग्र्ययाबुद्ध्या" என்ற சுருதிகள் உறைக்கின்றன. இவ்வாக்கியங்களால் பரமாத்மாவை அந்தः கரணத்தால் அறியலாமென்று சொல்லப்படவில்லை. மனதால் அதை உணர முடியாதன்றே. "अप्राप्यमनसासह"

" नमतेर्मन्तारंमन्वीथाः " " यन्मनसानमनुतेयेनाहुर्मनोमतं " என்ற சுருதிகள் மனதால் பரமாத்மாவை அறிய முடியாதென்று சொல்லுகின்றன.

மனதால் பரமாத்மாவை அறியலாம் என்று சில சுருதிகளில் கூறப்பட்டுளது. சில சுருதிகளில் மனதால் பரமாத்வை அறிய முடியாதென்று சொல்லப்பட்டுளது. இப்படிக்கூறும் சுருதிகளின் தாத்பர்யம் என்னவென்றால் மனதால் பரமாத்மாவை அறிய வேண்டுமென்ற சுருதிக்கு பரமாத்மா மனோவிருத்திக்கு விஷயமாவர் என்று கருத்து. மனதால் பரமாத்மாவை அறிய முடியாதென்ற சுருதிக்கு பரமாத்மா மனோவிருத்தி ஞானத்துக்கு விஷயமாகாதவர் என்று அபிப்பிராயம். பரமாத்மாவுக்கு விருத்தி விஷயத்வமென்பதென்ன வென்றால் மனோவிருத்தியானது தேஹேந்திரியாதிப் ப்ரபஞ்ச ஸ்வரூபாகாரத்தைவிட்டு பரமாத்ம ஸ்வரூபாகாரமாக ஆவது தான். மனோவிருத்தி பரமாத்மாகாரமாக ஆனால் அது நமக்குத்தோன்றும். எந்தெந்த ஆகாரத்தை மனோவிருத்தி அடைகிறதோ, அது அது நமக்கு ஸ்புரிக்கும். பாஹ்யமாயும் ஜடமாயுமுள்ள குடம் முதலிய வஸ்துக்களின் ஞானம் நமக்கேற்படவேண்டுமானால், அவற்றில் மனோவிருத்தி ஸம்பந்தமும் விருத்தி ப்ரதிபிம்பித சிதாபாஸ ஸம்பந்தமும் இரண்டும் வேண்டும். ஜடம் சிதாபாஸ ஸம்பந்தமின்றி பிரகாசிக்க முடியாதல்லவா? பரமாத்மாவோ ஸ்வப்ரகாச சைதன்ய ரூபமானதால், அதில் விருத்தி ஸம்பந்தம் மட்டும் போதுமானது. விருத்திப் பிரதிபிம்பித சிதாபாஸ ஸம்பந்தம் அதற்கு வேண்டாம். ஸ்வப்ரகாச ஞானத்தைப்பற்றியுள்ள அஜ்ஞானத்தின் நாசத்திற்காக அதில் விருத்தி ஸம்பந்தம் அவசியமாகும்.

ஸ்வப்பிரகாச பரமாத்மாவை பிரகாசிக்கும்படி செய்ய சிதாபாஸ ஸம்பந்தம அவசியமில்லை. ஜட வஸ்துவுக்கு அஞ்ஞான நிவிருத்திக்காக விருத்தி ஸம்பந்தமும், பிர காசிப்பதற்காக சிதாபாஸ ஸம்பந்தமும் இரண்டும் வேண் டும். விருத்தி ஸம்பந்தத்தை விருத்தி வ்யாப்யமென்றும், சிதாபாஸ ஸம்பந்தத்தை பல வ்யாப்யமென்றும் கூறு வது ஸம்பிரதாயம். பரமாத்மா ஞான ரூபமானதால் சிதாபாஸ ஸம்பந்தத்தால் அது பிரகாசிக்கவேண்டாம். தானே அது பிரகாசிக்கும். எனவே மேற்கூறிய சுருதி களிரண்டிற்கும் யாதொரு விரோதமுமில்லை இவ்விஷ யத்தை யெல்லாம் ஸ்ரீபாரதீதீர்த்த ஸ்வாமிகள்.

स्वप्रकाशोपि साक्ष्येष धीवृत्त्या व्याप्यतेऽन्यवत् ।
फलव्याप्यत्वमेवास्य शास्त्रकृद्भिर्निवारितम् ॥
अप्रमेयमनादिंचे त्यत्रश्रुत्येदमीरितं ।
मनसैवेदमाप्तव्यमितिधीव्याप्यताश्रुतिः ॥

என்ற சுலோகங்களால் உபதேசித்திருக்கிறார்கள். ஆகையால்மனோவாக்குக்கு அவிஷயமாயிருந்தாலும் பர மாத்மாவின் ஞானம் ஏற்படலாம். பூர்வார்த்தத்தில் த்வம் பதார்த்தமான ஜீவஸ்வரூபத்தை சோதித்து உத்தரார்த்தத் தில், தத்பதார்த்தத்தை சோதித்து இரண்டும் அபேதமாக உணர்தலை உபதேசிக்கிறார். "**योयंविज्ञानयः प्राणेषुहृद्यन्त-ज्योतिः पुरुषः**" என்ற வசனத்தால் தேஹாதிபின்னனையும், "**अत्रयंपुरुषस्स्वयंज्योतिर्भवति**" என்ற சுருதியால் ஸ்வயம்பிர காச ஸ்வரூபனையும், "**असंगोह्ययं पुरुषः**" என்பதால் அஸங் கனையும், "**द्वैतं न पश्यति**" என்பதால் நித்யசைதன்ய ரூபனையும் ஜீவனை சோதித்து ஹ்ருதயத்தில் உணரவேண்டும். பிறகு அத்தகைய ஜீவஸ்வரூபத்தை பரமாத்மாவாக வுணர

வேண்டுமென்று " **भावग्राह्यानन्दं** " என்பதாதியால் தெரிவிக்கிறார். பரமாத்மாநிரதிசயாநந்தஸ்வரூபர். நித்யநிரதிசயாநந்தத்தை இல்லை எனக்கூறக்கூடாது. " **युवास्यात्साधुयुवाध्यायकः** " என்றதைத்தர்மோபாநிஷத்தில் ஸார்வபௌமனை க்ஷத்திரியனுடைய ஆநந்தத்தை ஆரம்பித்து, மனுஷ்ய கந்தர்வாதி ஸ்தானங்களில் நூறுமடங்கு அது உயர்வுள்ளதாகக்கூறி அவ்வாநந்தம் எங்கு முடிவுறுகின்றதோ, அத்தகைய ஆநந்தமே நிரதிசயமென்றும், இதை இல்லை என்று மறுக்கமுடியாதென்றும் சொல்லப்பட்டுளது. " **यतोवाचो निवर्तन्ते । अप्राप्यमनसासहा आनन्दं ब्रह्मणोविद्वान् । नविभेति कुतश्चनेति** " என்றவாக்யத்தால் வாக்குக்குமனதிற்கு எட்டாத ஆனந்தமே நிரதிசயாநந்தமென கூறப்பட்டுளது " **बुद्धिग्राह्यमतीन्द्रियम्** " என்றவசனப்படிக்கு அனுபூதிமாத்திரத்தால் அறியப்படும் நிரதிசயாநந்த ஸ்வரூபன்பரமாத்மாஎன்றும் இப்பதத்திற்கு தாத்பர்யம் கூறலாம்.

அவதாரிகை.

பரமாத்மாவுக்கு அன்யமானத்வைதம் பிரத்யக்ஷானுபவவித்த மாயிருக்கையில், முன்சுலோகத்தில் கூறிய அனன்யத்வம் எங்ஙனம் கூறமுடியும்? என்று ஆசங்கித்து பரமாத்மாவுக்கு அன்யமான த்வைதப்பிரபஞ்சம் யாவும் சுக்திரஜதம் போல் த்ருச்யவஸ்து வாயிருப்பதால் அப்பரமாத்மாவிடம் கற்பிதமானதே. கற்பிதவஸ்துவிற்கு அதிஷ்டான ஸ்வரூபத்தைத்தவிர வேறு ஸ்வரூபமில்லை, " **सर्वंखल्विदंब्रह्म** " " **आत्मवेदंसर्वं** " " **ब्रह्मैवेदंसर्वं** " " **इदंसर्वंयदयमात्मा** " " **पुरुषएवेदंविश्वं** " என்ற சுருதிகளும் பரமாத்மாவுக்கு அன்யவஸ்துவில்லை என்று சொல்லுகின்றன. ஆதலால் பரமாத்மாவுக்கு முன்பு கூறிய அனன்யத்வதனுக்கு யாதொருஹானியுமில்லை என்று கூறுகிறார்.

यद्यद्वेद्यं वस्तु स तत्त्वं विषयाख्यं
तत्तद्ब्रह्मैवेति विदित्वा तदहं च ।
ध्यायन्त्येवं यं सनकाद्या मुनयोऽजं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥९॥

பதவுரை.

विषयाख्यं = விஷயமென்ற பெயருள்ளதும் **वद्यं** = திருச்யமானதும் **वस्तुसतत्त्वं** = (உண்மையில்) பரமாத்மாவை ஸ்வரூபமா யுடையதுமான **यद्यत्** = எந்தெந்த வஸ்துவுண்டோ **तत्तत्** = அந்தந்தவஸ்துவெல்லாம். **ब्रह्मैवेति** = பரமாத்மாவே என்று **विदित्वा** = உணர்ந்து. **तत्** = அப்பரமாத்மாவே **अहंच** = நானும் **इति** = என்று **विदित्वा** = உணர்ந்து. **अजं** = ஜன்மமற்ற **यं** = எந்த ஹரியை **सनकाद्याः** = ஸநகாதிகளான **मुनयः** = மகரிஷிகள் **ध्यायन्ति** = தியானிக்கின்றனரோ **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நசிக்கும்படி செய்கிற **तं** = அந்த **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

புருஷனைப் பந்தத்துக் குள்ளாகும்படி செய்வதால் சப்தாதிகளுக்கு விஷயமென்று பெயர். அவ்விஷயங்கள் பரமாத்மாவினிடம் ஆரோபிதமானதால் விஷய ஸ்வரூபம் வாஸ்தவமில்லை. உண்மையில் பரமாத்ம ஸ்வரூபமே அவை யாவுமாகும். அதற்குத்ருசயமாக விஷயங்களிருப்பதே காரணம். விஷயங்களாகத்தோன்றும் யாவற்றையும் பரமாத்மாவாக அறியவேண்டும். தன்னையும் (ஜீவஸ்வரூபத்தை) பரமாத்மாவாக அறியவேண்டும். நானே ப்ருஹ்மம், ப்ருஹ்மமே நான் என்று உணர்ந்து நிரந்தரம்

த்யானிக்கவேண்டும். நமக்கு த்யானத்தில் விசேஷப்பிர விருத்தி ஏற்படவே ஸநகாதிமகரிஷிகளை உதாஹரணம் காட்டப்பட்டது.

அவதாரிகை.

நானென்ற ஞான விஷயமாக ஆத்மா உகைப்பிர ஸித்தமானது. 'அத்தகைய ஆத்மா ஞேயாதீதமென்று (ஞான விஷயமில்லாததென்று) எங்ஙனம் கூறலாமென்ற ஆசங்கைக்கு உத்தரம் கூறுகிறார்.

यद्यद्वेद्यं तत्तदहन्नेति विहाय
स्वात्मज्योतिर्ज्ञानमयानन्द मवाप्य ।
तस्मिन्नस्मीत्यात्मविदो यं विदुरीशं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१०॥

பதவுரை.

यद्यत्=எது எது **वेद्यं**=த்ருச்யமோ **तत्तत्**=அதை அதை (அஹங்காராதி தேக பர்யந்த வஸ்துவை) **अहन्नेति** = ஆத்மா இல்லை என்று **विहाय** = விட்டு **स्वात्मज्योतिर्ज्ञानमयानन्दं** = ஸ்வப்ரகாச ஞான வடிவானந்தத்தை **अवाप्य**=ஊகித்து அறிந்துகொண்டு **तस्मिन्**= அவ்வாநந்த ஸ்வரூப ஆத்மாவினிடம் **अस्मीति**= இருக்கிறேனென்று **आत्मविदः**= ஆத்மாவை உணர்ந்த ஞானிகள் **यं**=எந்த **ईशं**=ஈச்வரனை **विदुः**=உணருகிறார்களோ, **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **तं**=அந்த **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்

விரிவுரை.

அஹங்காரம் முதல் தேகாதிவரையுள்ள வஸ்து வெல்லாம் த்ருச்யமாயும், ஜடமாயுமிருத்தலா ஸச்சிதா

னந்த ரூபமான ஆத்மாவாகாது. எனவே நான் என்ற ஞானத்துக்கு ஆத்மா விஷயமில்லை.

ஈண்டு இது தாத்பர்யம். ஆத்ம ஸ்வரூபமான அஹமென்ற ஞானத்துக்கு ஆத்மா விஷய மென்று கூறுவதா? இன்றேல் ஆத்மாவில் உள்ள அஹமென்ற ஞானத்துக்கு ஆத்மாவை விஷயமாகக் கூறுவதா? முதற்பக்ஷம் தவறு. ஒரே ஆத்மாகர்த்தாவாயும் கர்மாவாயும் இருக்க முடியாதல்லவா? ஆத்மாவை ஆத்ம ஸ்வரூப அஹமென்ற ஞானம் விஷயமாகச்செய்தால் தன்னைத்தானே விஷயாமாகச்செய்வதாக சொல்லவேணும். இது பொருந்தாது. இரண்டாவது பக்ஷத்திலும் ஆத்மாவின்கண்ணுள்ள அஹமென்ற ஞானம் ஜடமா? ஸ்வப்பிரகாசமா? ஜட வஸ்துவால் ஆத்மா பிரகாசிக்க முடியாததால் ஜடமென்ற பக்ஷம் சரியில்லை. ஸ்வப்ரகாச ஞான விஷயத்வம் கூறுவதானல் குடம் முதலியனபோன்று ஆத்மாவும் அநாத்மாவாகும். எனவே இரண்டாவது பக்ஷமும் யுக்தமாயில்லை. "ஸ்வப்ரகாச ஞானத்திற்கு ஆத்மா ஆத்ாரமாயிருப்பதால் ஆத்மா பிரகாசிக்கிறது அதற்கு ஆத்மா விஷயமில்லை" என்று கூறுவது சரியில்லை. ஸ்வப்ரகாச ஞானத்தால் ஏற்படுகிற ஆத்மப்பிரகாசம் ஸ்வப்ரகாச ஞானத்திற்கு விஷயமாகவேதானிருக்கவேண்டுமாதலால் ஞான விஷயமாக அங்கீகரிக்கப்பட்ட ஆத்மா அநாத்மாவாகவே ஆகும். எனவே நானென்ற ஞானத்தில் அஹங்காரம் தான் பிரகாசிக்கிறது. ஆத்மாவில்லை. அகங்காராதிகள் அனாத்மாவென்றது ஸித்தமாயிற்று. தவிர த்ருச்ய வஸ்துவெல்லாம் தனக்கு அன்ய வஸ்துவாய்தான் பிரகாசிக்கிறது. இதனால் த்ருச்ய வஸ்துவை பிரகாசிப்பிக்கும் பரமாத்மாவை ஸச்சிதாநந்த ஸ்வரூபமாய் ஊஹித்தறியவேண்டும். அவ்வாறு

மா நான் என்ற பதத்திற்கு வாச்யமாகாது. லக்ஷ்யமே. நானென்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமே த்வம்பதலக்ஷ்யார்த்தம். ஈசனென்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமே தத்பதலக்ஷ்யார்த்தமாகும். த்வம் பதலக்ஷ்யார்த்த ஞானமில்லாவிட்டால் அதை தத்பதலக்ஷ்யார்த்தமாக உணற முடியாது. இவ்விஷயம் "त्रिषुधामसुयद्भोग्यं भोक्ताभोगश्चयद्भवेत् । तेभ्यो विलक्षणस्साक्षी चिन्मात्रोहं सदाशिवः ॥ என்ற சுருதியில் கூறியுள்ளது. போக்த்ரு, போக்ய ரூபமான உபாதிகளுக்கு விலக்ஷணமான அஹம்பதலக்ஷ்யார்த்தமான ஜீவஸ்வரூபத்தையும், ஸதாசிவ சப்த லக்ஷ்யார்த்தமான அத்விதீய சச்சிதாநந்த பரமாத்மாவையும் அபின்னமாக இச்சுருதியில் நிர்ணயிக்கப்பட்டுளது. ஆதலால் த்வம்பதலக்ஷ்யார்தமின்றேல் தத்பதலக்ஷ்ய வஸ்துவின் அபேத ஸாக்ஷாத்காரம் உதிக்காது. எனவே ஆத்மா நானென்ற ஞானத்துக்கு விஷயமில்லை என்றுஸித்தம்.

அவதாரிகை.

இவ்விதமாக தேகேந்த்ரியாதிபின்னனான ஜீவாத்மாவையும், அவ்வாத்மாவே ப்ருஹ்மம் என்பதையும் நன்கு உணர்ந்துங்கூட சிலருக்கு முக்தியில்லையே? எனெனின்? மீண்டும் தேகாதிகளில் ஆத்மபுத்தியுடன் அவர்கள் காணப்படுகிறார்கள் அன்றோ? எனவே தேஹாதிபின்னமான ஆத்மஞானம் நிஷ்பிரயோஜனந்தான் என்று சங்கித்து, அவர்களுக்குப் பிரதிபந்தமின்றிய ஆத்மஞானம் உதிக்காததால் முக்தி இல்லை. இதனால் ஞானம் மோக்ஷஸாதனமில்லை என ஸித்திக்காது. அஸத்யமாகிய பிரபஞ்சத்திலும், அநாத்மாவாகிய தேஹாதிகளிலும், ஸத்யமென்றும், ஆத்மாவென்றும் பூர்வ வாஸனையால் உண்டாகும் புத்தியே ஆத்மஞானப் பிரதிபந்தகம். நீண்ட நாளாக

நிரந்தரமாக ஸத்காரபூர்வகமாக அப்யஸிக்கப்பட்ட பிர பஞ்சம் அஸத்யம்; தேஹாதிகள் ஆத்மாவில்லை" என்ற பாவனையாலும், "எல்லாம் சித்ஸ்வரூபமே" என்ற பாவனையாலும் அந்தப்பிரதிபந்தம் நிவிருத்திக்கிறது. அது நிவிருத்தித்தால் அஞ்ஞானமும் ஞானத்தால் நிவி ருத்தியடையும். அப்போது எல்லாம் ப்ருஹ்மமேயாகும் என்ற அபிப்பிராயத்தினால் உரைக்கின்றார்.

हित्वा हित्वा दृश्यमशेषं सविकल्पं
मत्वा शिष्टं भादृशिमात्रं गगनाभम् ।
त्यक्त्वा देहं यं प्रविशंत्यच्युतभक्ताः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥११॥

பதவுரை.

सविकल्पं= (கடத்வம், படத்வம்) விகற்பத்துடன் கூடியதும் **दृश्यं**= த்ருச்யமாயுமுள்ள **अशेषं**= எல்லா வற்றையும். **हित्वाहित्वा**= அடியோடு விலக்கிவிட்டு **शिष्टं**= மிச்சமான **गगनाभं**= ஆகாயம்போன்ற **भादृशिमात्रं**= ஸ்வ ப்ரகாசமான சித்வஸ்துவை **मत्वा**= தானாக உணர்ந்து. **देहं**= தேஹத்தை **त्यक्त्वा**= விட்டு. **अच्युतभक्ताः**= நாச மற்ற ப்ருஹ்மத்தில் பக்தியுள்ளவர்கள் **यं**= எந்த விஷ் ணுவை **प्रविशन्ति**= அடைகின்றனரோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்கிற **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

தேஹேந்திரியாதிகளை அநாத்ம பாவனையாலும் வெளிப்பிரபஞ்சத்தை அஸத்யத்வ பாவனையாலும் முமுக்ஷு தியாகம் செய்யவேண்டும். அதாவது தேஹா

திகளை அனாத்மாவென்றும், பிரபஞ்சத்தை மித்யை (பொய்) என்றும் பாவித்தல்வேண்டும். இத்தகையபாவனை அவச்யமென்பதை ஸ்ரீபாரதீதீர்த்தஸ்வாமிகளும்.

"आत्मा देहादिभिन्नोयं मिथ्याचेदं जगत्तयोः ।
देहाद्यात्मत्वसत्यत्वधीर्विपर्ययभावना ॥
तत्त्वभावनया नश्येत् साऽतोदेहातिरिक्ततां ।
आत्मनोभावयेत्तद्वत् मिथ्यात्वं जगतोऽनिशं ॥

என்ற சுலோகங்களால் சொல்லியுள்ளார். தேஹாதிகளில் அனாத்மத்வ பாவனையாலும், பிரபஞ்சத்தில் மித்யாத்வபாவனையாலும் ஸ்வப்ரகாச ஸத்தாமாத்ரமாய் ஆகாசம்போல் ஸ்வச்சமாயும் அஸங்கமாயும பரிபூர்ணமாயுமுள்ள ஆத்மவஸ்து மிச்சமாய்த் தோன்றும். அந்த வஸ்துவை தனது ஸ்வரூபமாக ஸாக்ஷாத்கரிக்க வேண்டும். ஸ்ரீ வித்யாரண்யஸ்வாமிகளும் "**पञ्चकोशपरित्यागे साक्षिबोधावशेषतः । स्वस्वरूपस्स एवस्यात् शून्यत्वंतस्यदुर्घटं ॥**" என்று இவ்விஷயத்தை நன்குநிரூபித்திருக்கிறார். இத்தகைய ஸாக்ஷாத்கார முண்டான பிறகும் பூர்வவாஸனையால் தேஹாதிகளில் ஆத்மத்வ பாவனையுண்டானால் ஞானாப்யாஸத்தால் அதைப்போக்கவேண்டும். பிறகு பரமாத்ம ஸ்வரூபமாக ஆகலாம். இங்கு **प्रविशन्ति** என்றபதத்தால் சொல்லப்பட்ட பிரவேசமாவது:—பரமாத்ம ஸ்வரூபமாயிருத்தலேயாகும். **अच्युतभक्ताः** என்றதால் பக்தி மோக்ஷத்துக்கு ஸாதனமென்றும், அபேதபக்தியே மிக உயர்ந்ததென்றும் ஸூசனைசெய்யப் பட்டுளது. நான்வேறு பரமாத்மாவேறு என்ற பேதபக்தியை "**अथयोऽन्यां देवतामुपास्तेऽन्योऽसावन्योऽहमस्मीति न स वेदयथापशुरेवंसदेवानां**" என்ற சுருதி கண்டனம் பண்ணுகிறதன்றோ?

அவதாரிகை.

பிருகதாரண்யகோபநிஷத்து ஐந்தாவது அத்யாயத்தில் ஒருகதை இருக்கின்றது. விதேஹதேசாதிபதியான ஜனகமஹாராஜன் அதிக தக்ஷிணையுடன் கூடிய ஒருயஜ்ஞம் செய்ய ஆரம்பித்தான். அந்த யஜ்ஞத்திற்கு அனேக தேசங்களிருந்தும் யஜ்ஞத்தை பார்க்கவேணுமென்ற ஆசையாலும், தனம் முதலியவை கிடைக்குமென்ற இச்சையாலும் ப்ருஹ்ம வித்துக்களான அனேக பிராம்ஹணர்கள் கூட்டமாய் கூடினர். அப்போது ப்ருஹ்ம வித்துக்களின் கூட்டத்தைக் கண்ணுற்றமாத்திரத்திலேயே ஜனகனுக்கு "இந்த ப்ருஹ்ம வித்துக்களுக்குள் எவர் சிரேஷ்டரான ப்ருஹ்ம நிஷ்டர் என்பதை தெரிந்துகொண்டு அவரை அணுகி அவரிடமிருந்து தத்வத்தை உணரவேண்டும்" என்ற இச்சை உண்டாயிற்று. ஜனகன் ஸ்வர்ணம் ரத்நம் முதலியவற்றால் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் பசுக்களை ப்ருஹ்மவித்துக்களின் ஸபைமுன்புக் கட்டிவிட்டு அவர்களைப்பார்த்து, ஓ! பகவான்களாகிய பிராம்ஹணர்களே! உங்களுக்குள் எவர் ப்ருஹ்ம நிஷ்டரோ; அவருக்கு இந்த ஆயிரம்பசுக்களையும் கொடுத்துவிட்டேன். என்று கூறினன். அச்சபையிலுள்ளவரனைவரும் பயந்து பேசாமலிருந்தனர். பிறகு ஸ்ரீயாஜ்ஞவல்க்ய மஹரிஷி அவர்கள் சும்மாவிருப்பதை கவனித்து, தம் சிஷ்யனிடம் "இந்த பசுக்களை யெல்லாம் நமது ஆச்ரமத்திற்குக் கொண்டு போ" என்று கட்டளையிட்டார். சிஷ்யனும் அவ்விதமே செய்தான். அதைப் பார்த்து மற்றப் பிராம்ஹணர்கள் கோபமடைந்தனர். கோபமடைந்த அவர்களுள், ஹோதாவான அச்வலர் ஆர்த்தபாகர், புஜ்யுர்லாஹ்யாயனி, உஷஸ்தி, கஹோளர், என்ற ப்ருஹ்மவித்துக்கள்

யாஜ்ஞவல்க்யருடன் விவாதம் செய்து பராஜயமடைந்த னர். பின்பு உத்தாலக மஹரிஷி அந்தர்யாமியைப் பற்றி ப்ரசங்கம் செய்தார். யாஜ்ஞவல்க்யரும் அவருக்கு அந்தர்யாமியை உபதேசித்தார். அதாவது :—"यः पृथिव्यां तिष्ठन् पृथिव्याअन्तरः"...என்று ஆரம்பித்து "योप्सु" "योग्नौ" "योऽन्तरिक्षे" "योवायौ" "योदिवि" "य आदित्ये" என்பதாதி அநேக பரியாயங்களால் அந்தர்யாமி நிரூபிக்கப்பட்டுள்ளார். ப்ருதிவீ முதலிய வஸ்துக்களில் இருந்து கொண்டு, அவற்றிற்குள்ளானதும், ப்ருதிவீ முதலிய வஸ்துக்களால் அறிந்துகொள்ள முடியாததும், அவற்றை சரீரமாயுடையதுமா யிருந்துகொண்டு எது இயங்கும்படி செய்கிறதோ அதுவே அந்தர்யாமியாம். இவ்விதம் கூறியபடி இங்கு அந்தர்யாமி பரமாத்ம ஸ்வரூபத்தைத் துதிக்க ஆரம்பிக்கிறார்.

सर्वत्रास्ते सर्वशरीरी न च सर्वः
सर्वं वेत्त्येवेह न यं वेत्ति च सर्वः ।
सर्वत्रान्तर्यामितयेत्थं यमयन्यः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१२॥

பதவுரை

यः = எது सर्वत्र = எங்கும் आस्ते = இருக்கின்றதோ, सर्वशरीरी = எல்லாவற்றையும் சரீரமாயுடையதாயிருந்தும் न-च-सर्वः = எல்லாவஸ்து வாயில்லாததோ, इह = ப்ருதிவ்யாதிகளில் இருந்துகொண்டு सर्वं = எல்லாவற்றையும் वेत्त्येव = அறிகின்றதோ, सर्वः = பிருதிவ்யாதி வஸ்து यं = எதை न च वेत्ति = தெரிந்துகொள்வதில்லையோ यः = எது यमयन् = பிருதிவ்யாதிகளை ப்ரேரணம் செய்து கொண்டு इत्थं = இவ்விதம் सर्वत्र = எங்கும் अन्तर्यामितया =

அந்தர்யாமியா யிருக்கிறனோ, **तं** = அந்த **संसारध्वान्त विनाशं** = ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

பரமாத்மா பிருதிவ்யாதி வஸ்துக்களுக்கு நூல் வஸ்திரத்துக்குப்போன்று உபாதானகாரணமாம். கார்யம் காரணத்துக்குச் சரீரம்போலிருப்பதால் பிருதிவ்யாதி வஸ்துக்கள் பரமாத்மாவுக்குச் சரீரம்போல் பிரகாசிக்கிறது. இது வாஸ்தவமில்லை. வாஸ்தவத்தில் அது ஸர்வவஸ்து கற்பனைக்கு அதிஷ்டானமாயிருக்கிறது. இத்தகைய விவர்த்தோபாதனத்வம்தான் பரமாத்மாவுக்கு பரிணாமித்வமில்லை. அதிஷ்டானமாயிருப்பதாலேயே எல்லாவற்றையும் பிரகாசிக்கும்படிசெய்கிறது. கற்பிதங்களான பிருதிவ்யாதிகள் ஜடமானதால் பரமாத்மாவை அறிந்துகொள்வதில்லை "**सवेत्तिवेद्यं न च तस्यास्तिवेत्ता**" "**वेदाहंसमतीतानि वर्तमानानिचार्जुन। भविष्याणि च भूतानि मांतुवेदनकश्चन॥**" என்ற சுருதி ஸ்மிருதிகள் இவ்விஷயத்தைச்சொல்லுகின்றன. பிருதிவ்யாதி வஸ்துக்கள் ஜடமாயிருப்பதாலேயே தாமே தம்தம் கார்யங்களை நடத்திக்கொள்ள சக்தியில்லாமலிருப்பதால், ஜட வஸ்துக்களை தம்தம் கார்யங்களில் பிரவிருத்திக்கும்படியும், நிவிருத்திக்கும்படியும் செய்யும் அந்தர்யாமி என்ற சேதனன் ஒருவன் இருக்கிறான். இவனே பரமாத்மா. இதை.

"जानामिधर्मं नचमे प्रवृत्तिर्जानाम्यधर्मं नचमे निवृत्तिः।
श्रीवासुदेवेनहृदिस्थितेन यथानियुक्तोस्मि तथाकरोमि॥
ईश्वरस्सर्वभूतानां हृद्देशेऽर्जुनतिष्ठति।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानिमायया॥"

என்ற வசனங்களும் கூறுகின்றன.

அவதாரிகை.

உபநிஷத்துக்களனைத்தும் ப்ருஹ்மம் அத்விதீயமென்றும், அதுவே ஜீவஸ்வரூபமென்றும் தெரிவிக்கின்றன. அதாவது:—ஐதரேயோபநிஷத்தில், "**आत्मावा इदमेक एवाग्र आसीत्**" என்றவாக்யத்தால் ப்ருஹ்மம் அத்விதீயமென்று கூறி "**प्रज्ञानंब्रह्म**" என்ற மஹாவாக்யத்தால் ஜீவஸ்வரூபத்தை அத்விதீயப்ருஹ்மமென்று சொல்லுகிறது. தைத்திரீய உபநிஷத்திலும், "**सत्यंज्ञानमनन्तंब्रह्म**" என்றலக்ஷணவாக்யத்தால், ப்ருஹ்மம் அத்விதீயமென வர்ணித்து விட்டு "**सयश्चायं पुरुषे। यश्चासावादित्ये सएकः**" என்றமஹாவாக்யத்தால், அவ்விதப்ருஹ்மமே ஜீவஸ்வரூபமென்று கூறியுள்ளது. அங்ஙனமேசாந்தோக்யோபநிஷத்திலும் "**सदेवसोम्येदमग्र आसीत्**" **एकमेवाद्वितीयं**" என்றவாக்யத்தால் அத்வைதப்ருஹ்மத்தை உபதேசித்துவிட்டு "**तत्त्वमसि**" என்றமஹாவாக்யத்தால் ஜீவப்ருஹ்மாபேதம் கூறப்பட்டுள்ளது. இங்ஙனமே எல்லா உபநிஷத்திலும் கூறியுள்ளதாக அறியவும்.

இதுசரியில்லை. ஆகாசம் முதலிய த்வைதமிருக்கையில் ப்ருஹ்மம் அத்விதீயமென்பது எங்ஙனம்? ஜீவனுக்கும் ப்ருஹ்மத்துக்கும் பேதம் அனுபவிக்கப்படுகையில் ஜீவனை ப்ருஹ்மமென்பதும் எங்ஙனம்? என்றுசங்கை. இதற்கு ஸமாதானமாவது:—"**सऐक्षतलोकान्नुसृजाइति सइमांल्लोकानसृजत**" "**तस्माद्वाएतस्मादात्मन आकाशस्संभूतः**" "**सोकामयत। बहुस्यांप्रजायेयेति**" "**तत्तेजोऽसृजत**" என்பதாதிஸ்ருஷ்டி ச்ருதிவசனங்கள்யாவும் எல்லாப்ரபஞ்சமும் ப்ருஹ்மத்தினின்று உத்பத்தியடைந்து, அதன்கண்ணே நிலைபெற்று, அதிலேயே லயமடைவதாகக் கூறி, மண்ணிலிருந்து உண்டாகி நிலைத்து லயமடையும் குடம்

முதலிய வற்றிற்கு மண்ணுடன் அபேதமிருப்பதுபோன்று பிரபஞ்சமும் அத்வைத ப்ருஹ்ம மாத்திரமாயிருக்கிற தென்பதைத் தெரிவிப்பதால் அத்வைதப்ருஹ்மம் ஸித்தமாயிற்று. அவ்விதமே. "**सएतमेवसीमानं विदार्यैतयाद्वारा-प्रापद्यत**" "**तत्सृष्ट्वा तदेवानुप्राविशत्**"," **अनेनजीवेनात्मनानुप्रविश्य**" என்பதாதிசுருதிகள் ப்ருஹ்மம் ஜீவரூபமாய் பிரவேசித்தது இருக்கிறதாக கூறுகிறது. வெளியிலிருந்து வீட்டிற்குள் தேவதத்தன் பிரவேசிப்பதுபோல் ப்ருஹ்மம் நாமரூபங்களுள் பிரவேசித்ததாக இங்குகூறவில்லை. உள் வெளி இன்றிய நிரவயவமான ப்ருஹ்மத்துக்கு தேவதத்தனைப்போல் பிரவேசம் ஸம்பவிக்காததால் ஜீவரூபமாய் பிரவேசிப்பதே உசிதமானது. இதனால் மறைவாக்யத்தில் சொல்லிய ஜீவப்ருஹ்மாபேதம் ஸம்பவிக்கலாமென்று போதிக்கப்பட்டுளது. இவ்விதமே நியமன சுருதியும் ஜீவ ப்ருஹ்மங்களுக்கு பேதங்கூறினால் அஸங்கதமாக ஆவதால் அவ்விருவருக்கும் அபேதம் ஸம்பவிக்கலா மெனதெரிவிக்கிறது. அங்ஙனமே, "**सवाएषपुरुषोन्नरसमयः**" "**यदग्नेरोहितंरूपं**" என்பதாதிசுருதிகள் தத்பதார்த்தமான ஈச்வரனையும், த்வம்பதார்த்தமான ஜீவனையும் சோதிக்கின்றன. இவை ஜீவனிடத்தும், ப்ருஹ்மத்தினிடத்துமுள்ள அபேத விரோதிகளான தர்மங்களை நிவிருத்திப்பது மூலமாக ஜீவ ப்ருஹ்மாபேதத்தை ஊஹித்துக் கொள்ளும்படி செய்கின்றன. அப்படியே "**ब्रह्मविदाप्नोति परं**" "**अमृतस्समभवत्**" என்பதாதிசுருதிகள் ஜீவப்ருஹ்மாபேதஞானத்துக்கு நிரதிசயப்பிரயோஜனத்தைக் கூறி அபேதஞானமே முக்ய தாத்பர்ய விஷயமென்று சொல்வதாலும் ஜீவப்ருஹ்மாபேதம் ஸம்பவிக்கலா மென்பது புலனாகிறது. இவ்வாறு ஸ்ருஷ்டி, ஸ்திதி, பிரளயம், பிரவேசம், நியமனம், தத்த்வம்பதார்த்தசோதனம், பிரயோஜனம், இவற்றைப் பிரதி

பாதிக்கின்ற எழுவகை சுருதிவாக்யங்களின் ஸஹாயத்துடன் கூடியதும், அவாந்தரவாக்ய ஸஹிதமானது மான மஹாவாக்யங்கள், எந்தவஸ்துவை அறிவிக்கின்றதோ, அதை இப்போது துதிக்க ஆரம்பிக்கிறார்.

सर्वं दृष्ट्वा स्वात्मनियुक्त्या जगदेत
द्दृष्ट्वात्मानं चैव मजं सर्वजनेषु ।
सर्वात्मैकोऽस्मीति विदुर्यं जनहृत्स्थं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१३॥

பதவுரை.

एतत् = இந்த **सर्वं** = எல்லா **जगत्** = ஜகத்தையும் **युक्त्या** = யுக்தியால் **स्वात्मनि** = தன் ஆத்மாவினிடம் **दृष्ट्वा** = பார்த்து **एवं** = இவ்விதம் **सर्वजनेषु** = எல்லா ஜனங்களிடத்தும் **अजं** = ஜன்மமற்ற **आत्मानं** = பரமாத்மாவை **दृष्ट्वाच** = பார்த்தும் **जनहृत्स्थं** = ஜனங்களின் ஹ்ருதயத்தில் பிரகாசிக்கும் **यं** = எவரை **सर्वात्मा** = ஸர்வஸ்வரூபியாயும் **एकः** = ஒருவனாயும் **अस्मीति** = இருக்கிறேனென்று **विदुः** = அறிகின்றனரோ, **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

எல்லா ஜகத்தும் ஜடமானது. ஜடத்திற்கு த்ருக் (பிரகாச) ஸம்பந்தத்தாற்றான் பிரகாசமேற்படவேண்டும். த்ருக்குக்கும் த்ருச்யத்துக்கும் ஸம்யோகம் முதலிய ஸம்பந்தம் ஸம்பவிக்காது. ஸம்யோகாதி ஸம்பந்தத்தை முன்னிட்டுப் பிரவிருத்திக்கும் விஷய விஷயிபாவமென்ற ஸம்

பந்தமில்லாமற்போனாலோ, த்ருச்யமான ஜடப்பிரபஞ்சம் பிரகாசிக்காது. ஆகவே ஆகாசாதி ஜடப்பிரபஞ்சம் த்ருக்ரூபமான சித்தில் அத்யஸ்தமென்று கூறவேண்டும். எனவே த்ருக்த்ருச்யங்களுக்குள்ள ஸம்பந்தம் அத்யாஸ தாதாத்ம்யமே என்ற யுக்தியால் தன்னிடத்தில் ஜகத்துக்கற்பிதமென்று அறிய வேண்டும் “ **पुरत्रयेक्रीडति यस्तुजीवः ततस्तुजातं सकलंविचित्रं** ” என்பது சுருதி. இவ்விதமே தன்னிடத்தில் கற்பிதமான ஜனங்களெல்லோரிடத்திலும்தானே பிரதிபிம்பித்துப் பிரகாசிப்பதாகவும் பார்க்கவேண்டும். “ **यायोनिं योनिमधितिष्ठत्येकः** ” “ **इन्द्रो-मायाभिःपुरुरूपईयते** ” **अग्निर्यथैकोभुवनंप्रविष्टो रूपंरूपंप्रति-रूपोबभूव। एकस्तथासर्वभूतान्तरात्मारूपंरूपंप्रतिरूपोबहिश्च॥** ” என்ற சுருதிகள்ஸர்வப்பிரபஞ்சத்திலும் பரமாத்மா பிரகாசிப்பதாக கூறியுள்ளன. பரமாத்மாவினிடம் ஜகத்துகற்பிதம் ஜகத்தினிடம் பரமாத்மா இருக்கிறார் என்று உணர்ந்தால் எல்லா கற்பனைகளுக்கும்தானே அதிஷ்டானமென்றும் தானே எல்லா வஸ்து ஸ்வரூபியென்றும் அத்விதீயன் தானென்றும், தோன்றும் ஸர்வாத்மபாவம் ஸித்தித்து அபரோக்ஷாநுபூதியுண்டாகும். இவ்விஷயத்தை

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानिचात्मनि ।
संपश्यन् ब्रह्मपरमं यातिनान्येनहेतुना ॥
मय्येव सकलंजातं मयिसर्वं प्रतिष्ठितं ।
मयिसर्वं लयंयाति तद्ब्रह्माद्वयमस्म्यहं ॥

என்ற சுருதிகளும் கூறுகின்றன.

அவதாரிகை.

" एकोदेवस्सर्वभूतेषुगूढः सर्वव्यापी सर्वभूतान्तरात्मा ।
कर्माध्यक्षस्सर्वभूताधिवासः साक्षीचेताकेवलोनिर्गुणश्च ॥ "
" द्वासुपर्णसयुजासखाया समानंवृक्षं परिषस्वजाते ।
तयो रन्यःपिप्पलंस्वाद्वत्ति अनश्नन्नन्योऽभिचाकशीति ॥ "

என்னும் இவ்விருமந்திரங்களும் ஆத்மாவிற்கு அவித்யையால் மித்யையான கர்த்ருத்வாதிகள் இருக்கின்றனவேயன்றியதார்த்தமாக இல்லை என்று தெரிவிக்கின்றன. ஏகமாய் ஸ்வப்ரகாசமாய் ப்ருஹ்மாதி ஸர்வவஸ்துக்களில் அவர்களால் அறியமுடியாதபடி அஞ்ஞானத்தால் மறைந்திருப்பதாய், தேசகால வஸ்துக்களால் அளவிடமுடியாததாய் ஸர்வப் பிராணிகளுக்குள் அந்தர்யாமியாய், சுத்தஸத்வகுணப் பிரதாந மாயாசக்தியால் ஈச்வரனுயிருந்து அனைவருக்கும் கர்மபலத்தை கொடுப்பதாய், ஸர்வபூதங்களுக்கும் அதிஷ்டானமாய், ஸாக்ஷிமாத்திரமாய், சைதன்யரூபியாய், உண்மையில் ஸாக்ஷித்வமற்றதாய், குணங்களில்லாததாய் (ஸச்சிதாநந்த ஸ்வரூபமாய்) உள்ள பரமாத்மாவை முதல்மந்திரங் கூறுகிறது. இரண்டாவது மந்திரமோ, எப்போதும் விட்டுப்பிரியாதவர்களும், சித்ரூபமாய் இருப்பதால் தோழர்களைப் போன்றவர்களும் இருபக்ஷிகள் போன்ற ஜீவேச்வரர்கள் ஒரே அஜ்ஞான விருக்ஷத்தை ஆச்ரியித்திருக்கின்றனர் இவர்களுள் ஒருவர் கர்மபலமான சுகதுக்கத்தை ரஸித்து அனுபவிக்கிறார். மற்றொருவர் அவரையும் அவர் கர்மபலனைச் சாப்பிடுவதையும் பார்த்துக்கொண்டுமாத்திர மிருக்கிறார் என்று கூறுகிறது. இவ்விருமந்திரங்களும் அவித்யாதசையில் கர்த்தா போக்தாவாயும், ஸ்வபாவமாகக் கூடஸ்த ஸாக்ஷிமாத்திமா

யும் எந்த பரமாத்மாவை' கூறுகின்றனரோ, அத்தகைய விஷ்ணுவை துதிக்கிறார்,

सर्वत्रैक:पश्यति जिघ्रत्यथभुङ्क्ते
स्प्रष्टा श्रोता बुद्ध्यति चेत्याहुरिमं यम् ।
साक्षी चास्ते कर्तृषु पश्यन्निति चान्ये
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१४॥

பதவுரை.

सवत्र= எங்கும் **एकः**= ஒருவனுயிருந்தும் **पश्यति**= பார்க்கிறான் **जिघ्रति**= முகருகிறான் **अथ**= மேலும் **भुङ्क्ते**= புஜிக்கிறான் **स्प्रष्टा**= ஸ்பர்சிக்கிறான் **श्रोता**= கேட்கிறான் **बुध्यतिच**= அறிகிறான் **इति**= என்று **यं**= எந்த **इमं**= ஆத்மாவை **आहुः**=கூறுகின்றனரோ **अन्ये**=மற்றும் சிலர் **कर्तृषु**=கர்த்தாக்களான சரீரங்களில் **पश्यन्**= அவற்றைப் பிரகாசிப்பிக்கச் செய்வதாய்**साक्षीच**= ஸாக்ஷியாய் **आस्ते**= இருக்கின்றது **इतिच**=என்றும் (**आहुः**=கூறுகின்றனரோ) **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

அவிவேகிகள் ப்ருஹ்மா முதற்கொண்டு ஸ்தாவரம் வரையிலுள்ள வஸ்துக்களில் பிரவேசித்துப் பலவிதமாய்ப் பரமாத்மா ஒருவரே இருந்துகொண்டு கண்ணால் பார்ப்பதாயும், காதால் கேட்பதாயும், மூக்கால் முகருவதாயும், வாயால் புஜிப்பதாயும், த்வக்கால் சீதோஷ்ணாதிகளை உணருவதாயும், புத்தியால் சென்றதையும் வருகின்றதையும் அறிவதாயும் கூறுகின்றனர். மற்றுமுள்ள விவேகி

களோவெனின் சரீரமும் இந்திரியங்களும் தம்தம் கார்யங்களை செய்துகொண்டிருக்கையில், அக்கார்யங்களை எல்லாம் ஸாக்ஷியாய் பார்த்துக்கொண்டு, உண்மையில் அகர்த்தாவாய் பரமாத்மா இருக்கிறாரென்று கூறுகின்றனர். இதனால் அவித்யாவஸ்தையில் ஆத்மா கர்த்தாவாகத்தோன்றும், வித்யாவஸ்தையில் உண்மையான அகர்த்ருத்வம் பிரகாசிக்கும் என்பது கருத்து. இவ்விஷயம் வாஸிஷ்டத்தில்

कुर्वन्नपीहजगताम्महतामनन्त बृन्दं नकिञ्चन करोतिकदाचनापि।
स्वात्मन्यनस्तमयसंविदि निर्विकल्पे त्यक्तोदयस्थितिमृतौ स्थितएकएव ॥

என்ற சுலோகத்தால் நிரூபிக்கப்பட்டுளது.

அவதாரிகை.

முன் கூறியபடிக்கு ஆத்மாவுக்கு கர்த்ருத்வம், அகர்த்ருத்வ மிரண்டையும் சுருதிகளே பிரதிபாதிப்பதால் அவ்விரண்டிலொன்றை மித்யை (பொய்) என்று ஏன் அங்கீகரிக்கவேண்டும்? ஸ்வாபாவிகமாயும், ஔபாதிகமாயுமுள்ள அவ்விரண்டையும் வாஸ்தவமென்று கூறுவதுதான் தகுதியானது. அவ்விரண்டிலொன்றை அவச்யம் பொய் எனக் கூறவேண்டுமாயின் அகர்த்ருத்வம் ஆத்மாவுக்கு ஏன் பொய்யெனக் கூறலாகாதென ஆசங்கைசெய்து, ஸ்வபாவமாய் விரோதிகளான இருவஸ்துக்கள் உபாதியாலும் ஓரிடத்தில் சேர்ந்திராது. ஸ்படிகக்கல்லில் ஜபாபுஷ்ப உபாதியால் ஏற்பட்ட சிவப்பு வாஸ்தவமாய் காணவில்லை. எனவே ஆத்மாவுக்கு அவ்விரண்டும் ஔபாதிகங்களாயினும் வாஸ்தவமென ஸம்பவியாது. கர்த்ருத்வம் வாஸ்தவமாயின் ஸுஷுப்தியிலும் ஆத்மாவினிடம் அது

காணப்படவேண்டுமன்றோ? சரீர இந்திரியஸம்பந்தமிருந்தால் கர்த்ருத்வம், அது இன்றேல் கர்த்ருத்வமும் கிடையாது என்ற நியமமன்றோ காணப்படுகிறது? பிரஹ்மஸூத்திரக்காரரும் " **यथाचतक्षोभयथा** " என்ற அதிகரணத்தில் "தச்சன் வாச்சி என்ற ஆயுதத்துடன் வேலைசெய்யும் காலத்தில் கர்த்தாவாயும், அதனல் துக்கியாயும், வேலை செய்யாதகாலத்தில் அகர்த்தாவாயும் அதனல் சுகியாயும் உலகத்திலிருப்பது போல் ஆத்மாவும் சரீரேந்திரியஸம்பந்தமுள்ள ஜாக்கிரஸ்வப்நங்களில் கர்த்தாவாயிருப்பதால் துக்கியாயும் அந்ததுக்கம் நீங்குவதற்காக சரீரேந்திரிய ஸம்பந்தமற்ற ஸுஷுப்தியை யடையும்போது அகர்த்தாவாயும், சுகியாயுமிருக்கிறது" என்று கர்த்ருத்வம் உபாதியால் ஏற்பட்டதாகக் கூறியுள்ளார். ஔபாதிகமான வஸ்து வாஸ்தவமாகாது. ஆகையால் ஆத்மாவுக்குக் கர்த்ருத்வம் பிராந்தியாலேற்பட்டதேயன்றி பரமார்த்தமன்றென்று கூறுகின்றார்.

पश्यन्शृण्वन्नत्र विजानन् रसयन् सन्
जिघ्रन्बिभ्रद्देहमिमं जीवतयेत्थम् ।
इत्यात्मानं यं विदुरीशं विषयज्ञं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१५॥

பதவுரை.

अत्र= இங்கு **इमं**= இந்த **देहं**=சரீரத்தை **जीवतया**= ஜீவரூபமாய் (நுழைந்து) **बिभ्रत्** = வஹித்துக்கொண்டு **इत्थं**= இவ்விதம் **पश्यन्** = பார்க்கிறவனையும் **शृण्वन्** = கேட்கிறவனையும் **विजानन्**= அறிகிறவனையும் **रसयन्** =

ரஸிக்கிறவனையும் जिघ्रन् = முகருகிறவனையும் (இருக்கிறான்) इति = என்று विषयञ्= விஷயங்களை அனுபவிக்கும் आत्मानं = ஆத்மாவை यं = எந்த ईशं = பரமாத்மாவாக विदुः = அறிகிறார்களோ तं = அந்த संसारध्वान्तविनाशं = ஸம்ஸார இருளை நாசஞ்செய்யும் हरिं = ஹரியை ईडे = துதிக்கிறேன்.

விரிவுரை.

ஆத்மாவுக்குக் கண் காது மூக்கு நாக்கு த்வக்கு முதலியவற்றுடன் ஸம்பந்தமுள்ளவரையில் அந்தந்த இந்திரியவியாபாரங்களில் கர்த்ருத்வம், உண்மையில் இல்லை. "आत्मेन्द्रियमनोयुक्तंभोक्तेत्याहुर्मनीषिणः" என்ற சுருதியும் சரீரேந்திரிய ஸம்பந்தமுள்ள ஆத்மாவுக்குக் கர்த்ருத்வத்தைக்கூறுகிறது. இத்தகைய ஆத்மாவை அகர்த்தாவான பரமாத்வாக அறிவதுதான் உண்மை அறிவு.

அவதாரிகை.

மாண்டூக்யோபநிஷத்தில் ஓங்காரவாச்யமான ஆத்மா நான்கு பாதமுள்ளதாகக் கூறியிருக்கிறது. விச்வன், தைஜஸன், பிராஞ்ஞன், துரியன் என்ற நான்கு பாதங்கள் ஆத்மாவிற்கு. ஜாக்கிரத்தை ஸ்தானமாகவுடையவனும் வெளி விஷயங்களை உணருபவனும் சிரஸ்முதலிய ஏழு அங்கங்களுள்ளவனும், (ஸ்வர்க்கமேசிரஸ் ஸூர்யனேகண், அக்நியே முகம், வாயுவே பிராணன் ஆகாசமே சரீரமத்யம், ஸமுத்திரமே மூத்திரஸ்தானம், பிருதிவியே பாதம்) பத்தொன்பது துவாரம் உள்ளவனும் (ஞானேந்திரியம்

ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, அந்த:கரணம் நான்கு) ஸ்தூலப்பிரபஞ்சத்தை அனுபவிப்பவனுமாயுள்ள வைச்வானனே விச்வன். இதுமுதலாவது ஆத்மபாதமாகும். ஸமஷ்டிவைச்வானரனுக்கும் வ்யஷ்டி விச்வனுக்கும் இங்கு அபேதத்தைக் கருதியிருக்கிறது. ஸ்வப்நத்தை ஸ்தானமாக வுடையவனும், தேஹத்துக்குள் வாஸநாமயப் பிரபஞ்சஞானமுள்ளவனும் ஏழங்கம், பத்தொன்பது துவாரமுள்ளவனும், வாஸநாமயப் பிரபஞ்சானுபவமுள்ளவனுமானவன் தைஜஸன் ஆத்மாவின் இரண்டாவது பாதம் எந்த அவஸ்தையில் காமமும் ஸ்வப்னமுமில்லையோ, அது ஸுஷுப்தி. இத்தகைய ஸுஷுப்தியை ஸ்தானமாயுடையவனும், கண்முதலிய இந்திரியங்கள் இன்மையால் ஏகீபாவம் பெற்றவனும். த்வைதஞானமில்லாத ஸாமான்ய ஞானவடிவனும், ஆனந்தமயனும், அவித்யா விருத்தி ஞானத்தால் ஸ்வரூபானந்தத்தை புஜிப்பவனும் உள்ளும் வெளியும் அறியாதவனே பிராஜ்ஞன். இது ஆத்மாவின் மூன்றாவது பாதம். மேற்கூறிய அவஸ்தாத்ரயத்திலும் ஸம்பந்தித்துள்ள சைதன்யமே நான்காவது ஆத்மபாதம். ஞானேந்திரியங்களால் அறியமுடியாததும், கர்மேந்திரியங்களால் கிருஹிக்க முடியாததும் வ்யவாஹாராதீதமானதும், அனுமானத்தாலும், மனத்தாலும் சப்தங்களாலும் அறியமுடியாததும், அகண்டாத்மாகார விருத்தி ஞானத்தால் மட்டும் அறியக்கூடியதும், கற்பித பிரபஞ்ச சூன்யமானதும், அத்வைத சிவஸ்வரூபமுமானதே துரீயப்ருஷ்ம பாதமாகும். இவ்விதம் மாண்டூக்யோபநிஷத்தில் கூறியிருப்பதுபோல் கைவல்யோபநிஷத்திலும், அவஸ்தாத்ரயம் ஆத்மாவுக்கு பொய்யென்றும், அது இல்லாத நிலையே உண்மை என்றும் சொல்லியுள்ளது. இவ்வித சுருதி கூறியஆத்மஸ்வரூபத்தைத் துதிக்க ஆரம்பிக்கிறார்.

जाग्रद्दृष्ट्वा स्थूलपदार्थानथ मायां
दृष्ट्वा स्वप्नेऽथापि सुषुप्तौ सुखनिद्राम् ।
इत्यात्मानं वीक्ष्य मुदास्तेच तुरीये
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१६॥

பதவுரை.

यः = எவன் **जाग्रत्** = ஜாக்கிரத்திலிருந்து கொண்டு **स्थूलपदार्थान्** = ஸ்தூலபதார்த்தங்களை **दृष्ट्वा** = அனுபவித்து விட்டும் **अथ** = பிறகு **स्वप्ने** = ஸ்ப்நத்தில் **मायां** = வாஸநா ரூபபதார்த்தத்தை **दृष्ट्वा** = அனுபவித்து விட்டும் **अथापि** = மேலும் **सुषुप्तौ** = ஸுஷுப்தியில் **सुखनिद्रां** = ஸுகத்தைக் கொடுக்கும் அஜ்ஞானத்தை **दृष्ट्वा** = அனுபவித்தும் **इति** = இவ்வாறுள்ள **आत्मानं** = ஆத்மாவை **तुरीयेच** = துரீயாவஸ்தையில் (ஸமாதிநிலையில்) **वीक्ष्य** = ஸாக்ஷாத்கரித்து **मुदा** = ஸ்வரூபசுகத்துடன் **आस्ते** = இருக்கிறானோ **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

அவதாரிகை.

ஆத்மா ஒவ்வொரு தேஹத்திலும் பிந்நனாய் அவஸ்தாத்ரயத்துடன் கூடி சுகியாயும் துக்கியாயுமிருக்கையில் அவ்வாத்மா ஒன்றென்றால் சுகதுக்கபேதம் அனுபவிக்கப்படுவது பொருந்தாமல் போகும். தவிர யஜ்ஞதத்தனின் சுகதுக்கங்கள் தேவதத்தனுக்கும் தோன்றும்படி நேரும். எனவே எங்ஙனம் ஆத்மாவை அத்வைதாநந்தரூபனாய் வேதாந்தங்கள் அறிவிக்கலாம்? என்று ஆசங்கித்து எல்லாத் தேஹத்திலும் ஆத்மா உண்மையில் ஒருவனாயி

னும், அவ்வுபாதி பேதத்தால் பொய்யான பேதத்தையும் அடைந்திருக்கிறது. சரீரோபாதியுடன் கூடிய ஆத்மாவுக்கு "பாதத்தில் எனக்கு துக்கம், சிரஸ்ஸில் சுகம்" என்ற அனுபவத்தால் அவயவபேதத்தால் சுகதுக்கபேதம் காணப்படுவதுபோல், ஒரே ஆத்மாவுக்கும் சரீராதிபேதத்தால் சுகதுக்கபேதமும் பொருத்தமானதே. சரீரம் வேறாயிருப்பதால் ஜன்மாந்தர சுகதுக்கங்களை இப்போது ஸ்மரிக்கமுடியாமலிருப்பதுபோல், யஜ்ஞதத்தன் சுகதுக்கங்களை தேவதத்தனும் ஸ்மரிக்காமலிருப்பது யுக்தமானதே. இவ்விஷயத்தை இங்கு கூறுகிறார்.

पश्यन्शुद्धोऽप्यक्षर एको गुणभेदा-
न्नानाकारान्स्फाटिकवद्भाति विचित्रः ।
भिन्नश्छन्नश्चायमजः कर्मफलैर्यः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१७॥

பதவுரை.

यः = எது **शुद्धः** = சுத்தமாயும் **अक्षरः** = நாசமற்றதும் **अजः** = உத்பத்தி இல்லாததும் **एकोपि** = ஒன்றாயிருந்தபோதிலும் **गुणभेदात्** = ஸத்வரஜஸ்தமோகுணபரிணமத்தால் **नानाकारान्** = அனேக ஆகாரங்களை **पश्यन्** = அனுபவித்துக்கொண்டு **कर्मफलैः** = சுகதுக்கங்களால் **विचित्रः** = நானாரூபமாயும் **भिन्नः** = அனேகமாயும் **स्फाटिकवत्** = ஸ்படிகக்கற்போன்று **भाति** = பிரகாசிக்கிறதோ, **अयं** = இவ்வாத்மா **छन्नश्च** = மறைந்தும் (**भाति** = பிரகாசிக்கிறதோ) **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

ஸ்படிகக்கல் ஸ்வாபவத்தில் ஒரேவிதமா யிருந்தாலும் ஜபாபுஷ்பம் முதலிய உபாதி ஸம்பந்தத்தால் பலவிதமாயும், விசித்திரமாயும் எவ்விதம் காணப்படுகிறதோ அதுபோல் ஆத்மாவும் ஸ்வபாவத்தில் சுத்தமாயும், உத்பத்தி நாசமின்றி ஒன்றாயிருந்தாலும், மாயையின் ஸத்வம் ரஜஸ்தமஸ் என்ற குணங்களின் பரிணாம ஸம்பந்தத்தால், தேவன், மனுஷ்யன், திர்யக்ஜாதி என்ற பேதத்தையடைந்து, அததற்கு ஏற்பட்ட அனாதி புண்யபாபங்களின் பிரயோஜனமான சுகதுக்கத்தையும் பெற்று, ஒரு சரீரத்துள்ளிருக்கும் ஆத்மா மற்றவருக்குத் தெரியாதபடி மறைந்தும் பிரகாசிக்கிறது.

"एकएवहिभूतात्मा भूतेभूते व्यवस्थितः ।
एकधाबहुधाचैव दृश्यते जलचन्द्रवत् ॥ "

என்று சுருதியும் ஒன்றான ஆத்மாவுக்கு உபாதியால் சந்திரன்போல் பேதமுண்டென்பதை தெரிவிக்கிறது. பிருஹ்ம ஸூத்திரக்காரரும், "**असन्ततेश्चाव्यतिकरः**" என்ற சூத்திரத்தில் உபாதிபேதத்தால் ஜீவர்களுக்குள் சுகதுக்க ஸாங்கர்யதோஷமில்லை எனத் தமது மதப்பிரகாரம் சுகதுக்கம் பின்னபின்னமாய் இருக்கலா மென்பதை நிரூபித்துவிட்டு, "**अदृष्टानियमात्**" என்பதாதி மூன்று சூத்திரங்களால் "விபுவான ஆத்மா அனேகம்" என்ற வாதிகளின் மதத்தில் எல்லாசரீரங்களிலும் எல்லா ஆத்மாக்களுக்கும் ஸாந்நித்யமிருப்பதால் எல்லா ஆத்மாக்களின் ஸந்நிதியில் உதிக்கும் அதிருஷ்டம் ஸமானமாக எல்லா ஆத்மாக்களுக்கு மிருப்பதாலும், சுகதுக்க ஸாங்கர்ய தோஷம் ஒருபோதும் விலகாதென்று கூறியுள்ளார். ஆகை

யால் ஏகாத்மவாதத்தில் தோஷமொன்றும் கூறமுடியாத தால் வேதாந்தங்கள் அத்விதீயாநந்த ரூப ஆத்மாவை அறிவிப்பதில் யாதொரு பங்கமுமில்லை.

அவதாரிகை.

"इन्द्रंमित्रंवरुणमग्निमाहुः । अथोदिव्यस्ससुपर्णोगरुत्मान् । एकंसद्विप्राबहुधावदन्ति । अग्नियमंमातरिश्वानमाहुः" "तदेवाग्निस्तद्वायुस्तत्सूर्यस्तदुचन्द्रमाः ।" तदेवशुक्रममृतं तद्ब्रह्मतदापस्सप्रजापतिः ।" "सब्रह्मासशिवस्सहरिस्सेन्द्रस्सोक्षरः परमस्वराट् । सएवविष्णुःसप्राणस्सकालोऽग्निस्सचन्द्रमाः" ॥ என்பதாதிமந்திரங்கள் ப்ருஹ்மம் ஒன்றே இந்திராதி ஸர்வ தேவதா ரூபமாயும் இருப்பதாய்க் கூறுகின்றன. இத்தகைய மந்திரங்களால் ஸர்வ தேவதா ஸ்வரூபமாய் ஸித்தித்துள்ள பரமாத்வைத் துதிசெய்கிறார்.

ब्रह्मा विष्णूरुद्रहुताशौ रविचन्द्रौ
इद्रो वायुर्यज्ञ इतीत्थं परिकल्प्य ।
एकं संतं यं बहुधाहुर्मतिभेदात्
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१८॥

பதவுரை.

एकं= ஒன்றாக **सन्तं**= இருக்கின்ற **यं**= எந்த பரமாத்மாவை **ब्रह्मा**= ஹிரண்யகர்ப்பர் **विष्णुः**= விஷ்ணு **रुद्रः**=சிவன் **हुताशः**=அக்நி **रविचन्द्रौ**= சூர்ய சந்திரர்கள் **इन्द्रः**= இந்திரன் **वायुः**=வாயு **यज्ञः**=யஜ்ஞம்(விஷ்ணு) **इतीत्थं**= என்றிவ்விதமாக **मतिभेदात्**= புத்திப்பேதத்தால

परिकल्प्य=கற்பனைசெய்து **बहुधा**=வெகுவிதமாக **आहुः**= கூறுகின்றனரோ **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

பஞ்சீகரணம் செய்யப்பட்டப் பிரபஞ்சத்தை ஸிருஷ்டிப்பவர்ஹிரண்யகர்ப்பராவர். இவருக்கு உள்ளும் வெளியும் ரஜோகுணம். விஷ்ணுவுக்கு சரீரம் தமோகுணரூபமானது; ஸர்வஜகத்பாலனத்துக்காக ஸத்வகுணம் ஸாதனமாயிருக்கிறது. சிவனுக்கு ஸத்வகுணமயமான சரீரம், ஸம்ஹாரத்துக்காக தமோகுணம் ஸாதநமாய் அமையப்பட்டுள்ளது. ஹிரண்யகர்ப்பருக்குச் சரீரமும், ரஜோரூபமானது, ஸ்ருஷ்டிக்காக குணமாயுள்ளதும் ரஜஸ்ஸே-சிவனுக்கு தமஸ்ஸை உபாதியாகக் கூறலாகாதென்பது ஸ்ரீபாகவதாதி புராணங்களில் “ **इत्यादिष्टस्सगुरुणा भगवान् नीललोहितः । सत्वाकृतिस्वभावत्वात्ससर्जाऽऽत्मसमाः प्रजाः ॥** என்னும் சுலோகத்தால் கூறியுள்ளது. சிவனை தமோகுண உபாதிகளுகக் கூறினால் அவரை ஜீவகோடியில் சேர்க்க நேரிடும். இது பாஷண்டத்வத்தைக்கொடுக்கும் என்பது ஸம்ஹிதாதிகளில் பிரஸித்தமானது.

ब्रह्मा विष्णुश्च रुद्रश्च विभक्ताअपिपण्डिता : ।
परमात्मविभागस्थाः न जीवव्यूहसंस्थिताः ॥

என்று. யஜ்ஞன் என்றால் விஷ்ணுக்கும் பெயர் உண்டு.

அவதாரிகை.

தைத்திரீயோபனிஷத்தில் பிருஹ்ம ஸ்வரூபத்தை இவ்விதம் நிரூபித்துள்ளது "ब्रह्मविदाप्नोतिपरं" என்று முதலில், ஸம்ஹிதாதி உபாஸநங்களால் ஏகாக்ரசித்தமுள்ள அதிகாரியை உத்தேசித்து விஷயப்ரயோஜனத்துடன்கூட ப்ருஹ்ம ஞானத்தை ஸூத்திரமாய் கூறியுள்ளது. இதில் ப்ருஹ்மம் என்பதால் விஷயமும், வித் என்பதால் ஞானமும், பரமாப்நோதி என்னும் பாகத்தால் பிரயோஜனமும் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸூத்ரவாக்யத்திற்கு "**सत्यंज्ञानमनन्तंब्रह्म । योवेद निहितंगुहायां परमे व्योमन् । सोश्नुतेसर्वान् कामान् सह । ब्रह्मणाविपश्चितेति ।**" என்ற வாக்யங்களால் ஸம்க்ஷேபமாகப் பொருள் கூறப்பட்டுளது. ஸூத்ரத்திலுள்ள "பிருஹ்ம" பதத்துக்கு "ஸத்யம்" என்ற வாக்யத்தாலும், "ஸூத்ர வாக்யத்திலுள்ள "வித்" என்ற பதத்துக்கு "யோவேத" என்ற வாக்யத்தாலும், "பரமாப்நோதி" என்பதற்கு "ஸோச்நுதே" என்ற பாகத்தாலும் வ்யாக்யானம் செய்யப்பட்டுளது. அதன் அர்த்தமாவது:— "ஸத்யம்" முக்காலத்திலும் பாதிக்கப்படாததும், "ஞானம்" ஸ்வப்ரகாசமானதும், "அநந்தம்" காலதேச வஸ்துக்களால் பரிச்சேதப்படாததுமாய் ப்ருஹ்மம் இருக்கிறது. இது ப்ருஹ்மத்தின் லக்ஷண வாக்யம். ஹ்ருதய குகையில் ஸ்புரிக்கும் இப்பிருஹ்மத்தை எவன் ஸாக்ஷாத்கரிப்பானோ. அவன்பிருஹ்ம ரூபியாயிருந்துகொண்டு ஸர்வாநந்தங்களையும் அகண்ட ஞானத்தால் அனுபவிக்கிறான். அதாவது ப்ருஹ்மாநந்தத்தில் விஷயாநந்தங்கள் யாவும் அடங்கியிருக்கின்றனவென்று தாத்பர்யம். பிறகு ப்ருஹ்மம் ஆநந்தரூபமென்பதை நிரூபிப்பதற்காக அப்பிருஹ்மத்தினிடமிருந்து ஆகாசாதிகளுக்கு உத்பத்தி உரைக்கப்பட்டது. அதன்

பின்பு "யோவேத" என்றவிடத்தில் சொல்லியுள்ள ஜீவனே ப்ருஹ்மம் என்பதை தேஹாதி ஐந்துகோசங்களை உபதேசித்து அதற்கு ஆந்தரமாக ப்ருஹ்மம் இருப்பதாக பிரதிபாதித்திருக்கிறது. அதன்பிறகு நாமரூபாதீதமான ப்ருஹ்மம் ப்ரத்யக்ஷாதிகளுக்கு விஷயமாகாததால் இல்லை என்று சங்கை வரவே, "सोकामयत" என்று ஸ்வர்க்க காமன்போன்று ஸ்ருஷ்டிகாமனையுடன் கூடியிருப்பதாலும், "सतपोऽतप्यत" என்று மந்திரிபோன்று ஸிருஷ்டி ஆலோசனையுடன்கூடி இருப்பதாலும், "इदंसर्वमसृजत" என்று குயவன்போன்று ஸிருஷ்டி செய்கிறவனாயிருப்பதாலும், "तदेवानुप्राविशत्" என்று ஸிருஷ்டிக்குள் நுழைந்து ஸர்வாத்மகமாயிருப்பதாலும், ப்ருஹ்மம் ஒன்று இருக்கின்றதென்பதைக் கூறிவிட்டு மேலும் ஸர்வப்ராணிகளுக்கும், ஜீவனஹேதுவாயும், ஆனந்தகரமாயும், பயாபய ஹேதுவாயும் அதைக்கூறி ப்ருஹ்மம் இருக்கிறதென்பதையே திடப்படுத்தியுமிருக்கிறது பிறகு ஆனந்தவிசாரத்தை ஆரம்பித்து உத்தரோத்தரம் நூறுமடங்கு உயர்வை நிரூபித்து, ப்ருஹ்மஞானிக்கு நிரதிசய ப்ருஹ்மாநந்த ப்ராப்தியையும், ஸகலானர்த்த நிவிருத்தியையும, விஸ்தரித்துக் கூறி, அத்தகைய ப்ருஹ்மாபரோக்ஷ ஞானம் உண்டாவதற்காக ப்ருகு வருணஸம்வாதத்தால் ஸ்ருஷ்டி ஸ்திதி லய காரணத்வ ரூபமான தடஸ்தலக்ஷணத்தை ப்ருஹ்மத்துக்குக் கூறி, பிரியபுத்திரனுகிய ப்ருகுவுக்குத் தந்தையாகிய வருணன் தபஸ் என்ற நிரந்தர ப்ருஹ்ம விசாரமே ஞானஸாதனமென்பதையும் விளக்கி, முடிவில் ப்ருஹ்ம ஞானிகளின் ஆனந்தகானத்தை அறிவித்துவிட்டு உபனிஷத்து முடிவுற்றது. இவ்வாறு தைத்திரீயோபநிஷத்து மாதாபோன்று அனைவருக்கும் ஹிதத்தை நாடி உபதேசித்துள்ள விஷ்ணுவை இதனுல் துதிசெய்கிறுர்.

सत्यं ज्ञानं शुद्धमनन्तं व्यतिरिक्तं
शान्तं गूढं निष्कलमानंदमनन्यम् ।
इत्याहादौ यं वरुणोसौ भृगवेऽजं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥१९॥

பதவுரை.

आदौ=முதலில் **अजं**=ஜன்மமற்ற **यं**=எந்தபரமாத்மாவை **असौ**=அந்த **वरुण:**=வருணன் **भृगवे**=பிருகுவின் பொருட்டு **सत्यं**= ஸத்யமாகவும் **ज्ञानं**= ஞான ஸ்வரூபமாயும் **अनन्तं**=அபரிச்சின்னமாயும் **शुद्धं**=சுத்தமாயும் **व्यतिरिक्तं**=பஞ்சகோச பின்னமாயும், **शान्तं**=துக்கசூன்யமாயும் **गूढं**=வாக்குமனங்களுக்கு எட்டாததாயும் **निष्कलं**=நிரவயவமாயும் **आनन्दं**=ஆனந்த ஸ்வரூபமாயும் **अनन्यं**=ஜீவாபின்னமாயும் **इत्याह**= ஆகக்கூறினரோ, **तं** = அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை அகற்றும் **हरिं**= ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

ஸதயம் என்றால் அநிருதமாய் இல்லாதது, ஞானம் என்றால் ஜாட்ய மற்றது. அநந்தமென்றால் மூன்றுவித அளவுக்குட்படாதது. வ்யதிரிக்தம் என்றால் ஸர்வ ஸாக்ஷியாயுள்ளது. சாந்த மென்றால் துக்கமில்லாதது, "**यदाह्येवैष-एतास्मिन्नदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयनेऽभयंप्रातिष्ठांविन्दते । अथ सोऽभयंगतोभवति ॥**" என்பது சுருதி. கூடம் என்றால் வாக்குக்கும் மனதுக்குமெட்டாதது. "**यतोवाचोनिवर्तन्ते। अप्राप्यमनसासह ॥**" என்பது சுருதி. அனன்யம் என்றால் ஜீவாபின்னமாயுள்ளது. "**सयश्चायंपुरुषे ।**

यश्चासावादित्ये । सएकः । ” என்பது சுருதி. ஆனந்தமென்பதை “आनन्दोब्रह्मेतिव्यजानात्” என்ற சுருதி கூறுகிறது.

அவதாரிகை.

எங்ஙனம் பிருகுமஹரிஷி பிருஹ்மத்தை உணர்ந்தார் என்பதைக்கூறுகிறார்.

कोशानेतान्पंचरसादीनतिहाय
ब्रह्मास्मीति स्वात्मनि निश्चित्य दृशिस्थः ।
पित्रादिष्टो वेदभृगुर्यं यजुरंते
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२०॥

பதவுரை.

यं = எந்த பரமாத்மாவை एतान् = ப்ரத்யக்ஷங்களானதும் रसादीन् = அந்த ரஸாதிரூபங்களானதுமான पञ्च = ஐந்து कोशान् = கோசங்களை अतिहाय = விட்டு दृशिस्थः = ஸாக்ஷி நிஷ்டனாய் இருந்து स्वात्मनि = தன் ஸ்வரூபத்திலேயே ब्रह्म = ப்ருஹ்மத்தை निश्चित्य = நிச்சயித்துக்கொண்டு पित्रा = தந்தையால் आदिष्टः = உபதேசிக்கப்பட்ட भृगुः = பிருகுமஹரிஷி. यजुरन्ते = தைத்திரீயோபனிஷத்தில் ब्रह्मास्मीति = நானே ப்ருஹ்மமென்று वेद = அறிந்தாரோ, तं = அந்த संसारध्वान्तविनाशं = ஸம்ஸார இருளை நாசம் செய்யும் हरिं = ஹரியை ईडे = துதிக்கிறேன்.

விரிவுரை.

ஐந்து கோசங்களின் ஸ்வரூபம் ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகளால் தத்வவிவேகத்தில் கூறப்பட்டது.

स्यात्पञ्चीकृत भूतोत्थः देहस्थूलोऽन्नसंज्ञिकः ।
लिंगेतुराजसैः प्राणैः प्राणः कर्मेन्द्रियैस्सह ॥
सात्विकैं र्धीन्द्रियैस्साकं विमर्शात्मा मनोमयः ।
तैरेवसाकं विज्ञानमयो धीर्निश्चयात्मिका ॥
कारणेसत्व मानन्द मयोमोदादिवृत्तिभिः ।

என்று

அவதாரிகை.

“ஜகத்து நித்யமானதால் இதை ஸிருஷ்டிக்கும் ஈச்வரனொருவன் ஜீவபின்னனாய், எல்லோருக்கும் பயாபய காரணமாய் இல்லை. தவிர சுகதுக்கங்கள் புண்ய பாப மூலமாக ஏற்படுவதால், அதற்காகவும் ஈச்வரனை ஒப்புக் கொள்ளவேண்டியதில்லை. வேதாந்தங்களும் கர்மாவுக்கு அங்கமான கர்த்தாவை ஈச்வரனைத் துதி செய்வ தாக ஒப்புக்கொள்வதால் அவ்வேதாந்தங்களும் ப்ரத் யக்ஷாதி ப்ரமாணவிருத்தமாக அத்விதீய ஈச்வரனைப் பிரதிபாதிக்க முடியாது” என்று ஜைமினீய மதத்தை ஆசங்கித்து எல்லா ஜகத்தும் ஸாவயவ வஸ்துவானதால் கார்யமாகும். நித்யமன்று. அவற்றிற்கு அதிஷ்டாதா ஈச்வரனொருவனின்றேல் உத்பத்தி கூறமுடியாது. ஜீவர் களுக்கு ஜகத்தை ஸிருஷ்டிப்பதற்கு ஞானமும் ஸாமர்த் தியமும் கிடையாது. ஜீவர்கள் பராதீனர்களே யொழிய ஸ்வாதீனர்களல்ல. அவர்களை ஸ்வாதீனர்களாகவும் ஸிருஷ்டி கர்த்தாக்களாகவும் அங்கீகரித்தால் பாபங்களை ஸிருஷ்டித்து அதன் பிரயோஜனமான துக்கங்களை அவர் கள் அனுபவிக்கமாட்டார்கள். கர்மாக்களும் ஜடமான

தால் ஜகத்தை ஸிருஷ்டிப்பதிலும், ஜீவர்களுக்கு புண்ய பாபானுஸாரமாக சுகதுக்கங்களைக் கொடுப்பதிலும், சேதனன் ஸம்பந்தமில்லாமற்போனால் ஸாமர்த்யம் உள்ளவையாகா. பிராணிகளின் கர்மானுஸாரமாய் ஜகத்தை ஸிருஷ்டித்து கர்ம பலன்களை கொடுக்கும் ஈச்வரனொருவன் வேதாந்தங்களிலிருந்து ஸித்திக்கும் பிரகாரத்தை முன்பு கூறியிருப்பதால், வேதாந்தங்களை ஸ்தாவகங்களாக ஒப்புதல் முறையன்று. வேதாந்தங்களைக்காட்டிலும் பிரத்யக்ஷாதிப் பிரமாணங்கள் கீழ்பட்டவைகள். வேதாந்தங்களாலும், "அங்குரம் முதலியவை காரியமானதால் கர்த்தாவுடன் கூடியது" என்ற அனுமானத்தாலும், பரமேச்வரனொருவன் இருக்கிறான் என்பதைத் துதிக்கிறார்.

येनाविष्टो यस्य च शक्त्या यदधीनः
क्षेत्रज्ञोऽयं कारयिता जंतुषु कर्तुः ।
कर्ता भोक्ताऽत्माऽत्र हि चिच्छक्त्यधिरूढः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२१॥

பதவுரை.

अयं=இந்த **क्षेत्रज्ञः**=ஜீவன் **येन**=எவனால் **आविष्टः**= பிரவேசிக்கப்பட்டானோ **यस्य**= எவனுடைய **शक्त्या**= மாயாசக்தியால் (**आविष्टः** = பிரவேசிக்கப்பட்டானோ) **यदधीनः**=எவனுக்குப்பரவசனோ, **जन्तुषु**=ஸர்வப்பிராணிகளிடத்தில் **कर्तुः**= கர்த்தாவை **कारयिता**=செய்விப்பவனோ **अत्रहि**=இச்சரீரத்தில் உள்ள **आत्मा**=அஹங்காரம் **चिच्छक्त्यधिरूढः**=எந்தசித் ஸ்வரூபத்தால் வ்யாபிக்கப் பட்டு **कर्ता**=கர்த்தாவோ ? **भोक्ता**=போக்தாவோ ? **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

பிசாசு பிடித்தவன்போல் ஜீவன்பரமேச்வரனால் பிரவேசிக்கப்பட்டு செய்யக் கூடாததையும் செய்கிறான். பரமேச்வரனது ஆவேசமின்றேல் ஜீவன் ஒருகார்யத்தையும் செய்ய முடியாமலிருப்பதால் பரமேச்வரன் ஒருவன் இருக்கின்றான். எவனுடைய மாயையால் ஆவரணமடைந்து "நான்மூடன், ஒன்றும் அறியேன் அற்பஞ்ஞன்" என்றெல்லாம் ஞான ஸ்வரூபியாயிருந்தும் ஜீவன் தன்னை நினைக்கிறானோ, அத்தகைய ஈச்வரனை இல்லை எனலாகாது, "**अनीशयाशोचातिमुह्यमानः**" "**दैवीह्येषागुणमयी मम मायादुरत्यया**" என்பது இதற்கு பிரமாணங்கள். தவிரஜீவன் ஈச்வராதீனனாயிருந்து கொண்டு அவனால் தூண்டப்பட்டே கர்த்தாபோக்தாவாயிருக்கிறான். பரமேச்வரனது சித்சக்தி ஸம்பந்தத்தால்தான் அஹங்காரம் ஜடமாயிருந்தும் அக்நிஸம்பந்தத்தால் இரும்புபோன்று சேதனன்போல் பிரகாசிக்கிறது. ஜீவனுக்குப் பராதீனமாக க்கர்த்ருத்வம் ஏற்பட்டிருப்பதை "**परात्तुतच्छ्रुतेः**" என்ற அதிகரணத்தில் ஸூத்திரக்காரரும் தீர்மானித்திருக்கின்றனர்

அவதாரிகை.

இவ்விதம் ஜீவனுக்குப் பிரவர்த்தகனாகப் பரமேச்வரனைக் கூறினால் ஜீவேச்வரர்களுக்குப் பேதமே ஸித்தியாவதால் அபேதம் வாக்யார்த்தமாக ஸித்திக்காமற்போகுமென்று சங்கித்து அவ்விருவர்களுக்கு கற்பிதபேதமிருக்கினும், வாஸ்தவமான அபேதத்தை வாக்யார்த்தமாகப் பொருத்தலாமென்ற கருத்துடன் கூறுகிறார்.

सृष्ट्वा सर्वं स्वात्मतयैवेत्थमतर्क्यं
व्यप्याथान्तः कृत्स्नमिदं सृष्टमशेषम् ।
सच्च त्यच्चाभूत्परमात्मा स य एकः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२२॥

பதவுரை.

सः= சுருதிப்பிரஸித்த **यः**= எந்த **परमात्मा**=பரமாத்மா **एकः**= ஒருவராயினும் **इत्थं**= இவ்விதமான **अतर्क्यं**= ஊகிக்க முடியாத **सर्वं**= எல்லா ஜகத்தையும் **सृष्ट्वा**=ஸிருஷ்டித்து **अथ**= பின்பு **सृष्टं**= ஸிருஷ்டிக்கப்பட்ட **कृत्स्नंइदं**= இவை எல்லாவற்றையும் **अशेषं**= மிச்சமில்லாமல் **स्वात्मतयैव**= தனது ஸ்வரூபத்தால் **अन्तः**= உள்ளே **व्याप्य**= வியாபித்து **सच्च**= மூர்த்தவஸ்துவாயும் **त्यच्च**= அமூர்த்த வஸ்துவாயும் **अभवत्**= ஆனாரோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

“ **तत्सृष्ट्वा । तदेवानुप्राविशत् ।** ” “ **सएषइहप्रविष्ट आनखाग्रेभ्यः** ” என்ற சுருதிகளில் ஏகமான பரமாத்மா தேவமனுஷ்யாதி பின்னமான இந்த ஜகத்தை ஸிருஷ்டித்து, அதற்குள் நுழைந்து மூர்த்தாமூர்த்தரூபமாக ஆயிற்றென்று கூறியிருக்கிறதால் ஜீவேச்வரர்களுக்கு பேதம் கற்பிதம்; அபேதம் ஒன்றே வாஸ்தவமென்பது ஸித்தமாயிற்று.

அவதாரிகை.

இவ்விதம் அத்வைத வேதாந்த ஸித்தாந்தப்பிரகாரமாகத் துதிசெய்து, மற்றெல்லா சாஸ்திரங்களாலும் தம் தம் ருசியை அனுஸரித்து நேர்முகமாயும், பரம்பரையாயும் வர்ணித்துள்ள விஷ்ணுவைத் துதிக்க ஆரம்பிக்கிறார்.

वेदान्तैश्चाध्यात्मिकशास्त्रैश्च पुराणैः
शास्त्रैश्चान्यैस्सात्वततन्त्रैश्च यमीशम् ।
दृष्ट्वाथांतश्चेतसि बुध्वा विविशुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२३॥

பதவுரை.

वेदान्तैश्च=வேதாந்தங்களாலும் **आध्यात्मिकशास्त्रैश्च**= ஸாங்கியாதி சாஸ்திரங்களாலும் **पुराणैः**= புராணங்களாலும் **अन्यैश्च**= மற்றுமுள்ள **शास्त्रैः**= வைசேஷிகாதி சாஸ்திரங்களாலும் **सात्वततन्त्रैश्च**= வைஷ்ணவ தந்த்ரங்களாலும் (**प्रोक्तं**= சொல்லப்பட்ட) **यं**= எந்த **ईशं**= ஈச்வரனை **दृष्ट्वा**= உணர்ந்தும் **अथ**= பிறகு **अन्तश्चेतासि**= மனதிற்குள் **बुद्ध्वा**=ஸாக்ஷாத்கரித்தும் **यं**=எந்த ஈச்வரனை (**केचन**= சிலர்) **विविशुः**= பிரவேசித்தார்களோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

ஒரேபரமாத்மாவை வேதாந்தாதி சாஸ்திரங்கள் பற்பலவிதமாகக் கூறுகின்றன. அவற்றுள் வேதாந்தங்களால் அத்விதீய ஸச்சிதாநந்த ஸ்வரூபியான ப்ருஹ்மமே ஜீவனென்று கூறப்பட்டுளது. ஜீவனைப்பற்றிக்கூறும் சாஸ்திரமே அத்யாத்ம சாஸ்திரமென்று இங்கு பொருள்.

இது காபிலஸாங்கிய சாஸ்திரங்களே. இவற்றில் அஸங்கனையும், சித்ரூபனையுமுள்ள புருஷனென்று பரமாத்மா கூறப்பட்டுளது. புராணங்களால் சிவ விஷ்ணு ரூபமாக வர்ணிக்கப்பட்டுளது. நியாயவைசேஷிகாதி மற்ற சாஸ்திரங்கள் பரமாத்மாவை ஜீவபின்னன், ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தி ஜகந்நிமித்தகாரணபூதன் என்று கூறுகின்றன. ஸத்ஸ்வரூபம் உள்ளவர் "ஸத்வாந்" வாஸுதேவரே. அவர் பக்தர்கள் ஸாத்வதர்களாவர். ஸாத்வத தந்திரங்கள் யாவும் வைஷ்ணவ சாஸ்திரங்களாகும். அவற்றால் வாஸுதேவ, ப்ரத்யும்ந, ஸங்கர்ஷணாதி வ்யூகங்களாக பரமாத்மா நிரூபிக்கப்பட்டுளது. **च** காரத்தால் மற்ற ஆகமாதிகளால் சிவாதி ரூபமாகக் கூறப்பட்டதாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு பற்பல சாஸ்திரங்களால் பற்பல ஸ்வரூபமாக பரமாத்மாவை ஸத்குரு மூலமாய் முதலில் உணர்ந்து ஹ்ருதயத்தில் நிரந்தர த்யானத்தால் கிரமமாகத் தன்னையே அவ்வீச்வரனை ஸாக்ஷாத்கரித்து முடிவில் அத்விதீய ஸச்சிதாநந்த பரமாத்மாவாகவே சில மஹாத்மாக்கள் ஆகிவிடுகிறார்கள். சாஸ்திரங்களில் கூறியுள்ளமார்க்கங்கள் யாவும் நேராயும், பரம்பரையாயும் பிரவிருத்தித்து முடிவில் ஒரே இடத்தில் சேருகின்றன என்று தாத்பர்யம்.

அவதாரிகை.

இவ்விதம் சாஸ்திரங்களாலும், ஆசார்யன் அருளாலும் அனைவரும் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்து ஏன் அதுவாக ஆகவில்லை என சங்கித்து **"श्रद्धावित्तोभूत्वाऽऽत्मन्येवात्मानंपश्येत्" "यस्यदेवेपराभक्तिर्यथादेवेतथागुरौ। तस्यैतेकथिताह्यर्थाः प्रकाशन्तेमहात्मनः॥" "ततस्तु तं**

पश्यते निष्कलंध्यायमानः " " **शान्तोदान्तउपरतः** " என்பதாதி சுருதி ஸித்தங்களான சிரத்தை பக்தி த்யானம் முதலிய ஸாதநங்களைப் பெற்றவர்களாலேயே பரமாத்மாவைத்தாநக அறியலாமேயன்றி மேற் கண்ட ஸாதநங்களைப் பெறாத வாய்வேதாந்த பண்டிதர்களால் அறிய முடியாது. " **विदूरकाष्ठायमुहुःकुयोगिनां** " என்ற வசனமும் இதற்குப் பிரமாணம்.

श्रद्धाभक्तिध्यानशमाद्यैर्यतमानै
र्ज्ञातुं शक्यो देव इहैवाशु य ईशः ।
दुर्विज्ञेयो जन्मशतैश्चापि विना तैः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२४॥

பதவுரை.

श्रद्धाभक्तिध्यानशमाद्यैः= சிரத்தை பக்தி, தியானம், சாந்தி முதலியவற்றால் **यतमानैः**= அறிய முயற்சிக்கிறவர்களால் **देवः**= ஸ்வப்பிரகசரான **यः**= எந்த **ईशः**= பரமாத்மா **इहैव**= இங்கேயே **आशु**= அதிசீக்கிரமாக **ज्ञातुं**= அறிவதற்கு **शक्यः**= ஸாத்யப்படுவாரோ **तैर्विना**= அந்த ஸாதநங்களில்லாமல் **जन्मशतैश्च**= நூறு ஜன்மங்களாலும் **दुर्विज्ञेयः**= அறிய முடியாதவரோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

வேதவாக்கிய குருவாக்யங்களில் விச்வாஸபுத்தியே சிரத்தையாகும். குருவினிடமும், விஷ்ணுவினிடமும் செலுத்தப்படும் அன்பே பக்தியாகும். ஸத்குருவால்

உபதேசிக்கப்பட்ட பரமாத்மாவையே மற்றவைகளை ஸ்மரிக்காமல் ஸதா தைலதாரைபோல் ஸ்மரிப்பதே த்யானமாகும். விஷயங்களில் செல்லாமல் மனதைத்தடுத்தலே சமமென்றுபெயர். ஆத்யசப்தத்தால் தமாதிஸாதனங்களை கூறியிருக்கிறது வெளிவிஷயங்களில் செல்லாமல் இந்திரியங்களைத் தடுத்தலேதமமாகும். ஸர்வகர்மஸந்யாஸமே உபரதியாம். குற்றம்புரிந்தோரிடம் கோபம் கொள்ளாமையே திதிக்ஷையாகும். ஸமாதிநிலையே ஸமாதானமெனப்படும். இத்தகைய ஸாதநங்களால் பரமாத்மாவை அறிய முயர்சித்தல்வேண்டும். ஸாதனங்களிருந்தால் பரமாத்மாவை, இந்தயுகத்திலேயே, இங்கேயே, இந்த ஜன்மத்திலேயே இந்த தேஹத்திலேயே ஸாக்ஷாத்கரிக்கலாம். மேற்கூறிய ஸாதநங்களில்லாவிட்டால் பலஜன்மங்களாலும், பலசாஸ்திரங்களாலும், பலவிதபண்டிதர்களாலும், அப்பரமாத்மாவை அறியவே முடியாது. “ **नाऽविरतोदुश्चरितान्नाशान्तो नासमाहितः । नाशान्तमानसोवापिप्रज्ञानेनैनमाप्नयात् ॥** ” என்றசுருதி, தீயகார்யங்களினின்றும் நிவிருத்திக்காதவனும், சாந்தியடையாதவனும், ஸமாதியை அப்யஸிக்காதவனும், மனம் அடங்காதவனும் பரமாத்மாவை அறியமுடியாதென்றும். மேற்கூறிய ஸாதநங்களால் ஸம்பாதிக்கப்பட்ட ஞானத்தாலேயே அவரை அறியலாமென்றும் கூறுகிறது.

அவதாரிகை.

“முன்பு கூறியவேதாந்தங்களால் ஈச்வரனை ஸாக்ஷாத்கரிக்கிறார்கள் என்பதை ஸ்பஷ்டமாய் இப்போது கூறுகின்றார்.

यस्यातर्क्यं स्वात्मविभूतेः परमार्थं
सर्वं खल्वित्यत्र निरुक्तं श्रुतिविद्भिः ।
तज्जादित्वादब्धितरंगाभमभिन्नं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२५॥

பதவுரை.

स्वात्मविभूतेः=தனக்கு அபின்னமானமஹிமையுடைய **यस्य**=எந்தபரமாத்மாவின் **अतर्क्यं** = தர்க்காவிஷயமான **परमार्थं**=யதார்த்தஸ்வரூமானது. **सर्वंखल्वित्यत्र**="ஸர்வம் ப்ருஹ்மம்" என்ற சுருதியில் **श्रुतिविद्भिः**= பூர்வாசார்யர்களால் **तज्जादित्वात्**= "தஜ்ஜலாந்" என்ற வாக்யத்தால் **अब्धितरंगाभं** = ஸமுத்ரமும் அலையும்போல் **अभिन्नं**= அபின்னமாய் **निरुक्तं**=நிரூபிக்கப்பட்டுளதோ, **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**=ஹரியை **ईडे**=துதிசெய்கிறேன்.

விரிவுரை.

ஸஹாயமில்லாமல் விவிதவிசித்திரப் பிரபஞ்ச ரூபமாக பரமாத்மா தோன்றுவதே விபூதி. இது பரமாத்மஸ்வரூபத்தை விட்டு வேறாயில்லை. பரமாத்மாவை தர்க்கத்தால் அறியமுடியாதென்பதை " **को अद्धावेदकइहप्रवोचत् । कुतआजाताकुतइयंविसृष्टिः । अर्वाग्देवा अस्यविसर्जनाय-अथकोवेद यत आबभूव । इयंविसृष्टिर्यत आबभूव । यदिवादधे। यदिवान ।यो अस्याध्यक्षःपरमेव्योमन् । सो अंगवेदयदिवानवेद॥"** என்ற இருமந்திரங்கள் கூறுகின்றன இதன் அர்த்தமாவது:—இவ்வுலகில் எவன்தான் பரமாத்மாவை நிச்சயமாய் உணருவான்?; எவன்தான் சொல்லுவான்? எதினின்றும் இந்த ஜகத்தின்; விருஷ்டியும் ஸ்திதியும் ஏற்பட்டதோ,

அதைஎவன் அறிவான். பரமாத்மாவால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ருஹ்மாதிதேவர்களுங் கூடதனக்குக் காரணமான பரமாத்மாவை அறியமாட்டார்கள். இவ்விதமிருக்கையில் மற்ற எவன்காரணவஸ்துவை உணரமுடியும்? எதினின்றும் இப்பிரபஞ்சம் உண்டாயிற்றோ, எதினிடம் நிலைபெறுகிறதோ, எதினிடம் லயிக்கிறதோ, அதை எவன் அறியமுடியும். இவ்வுலகத்திற்கு அதிஷ்டாதாவான பரமாத்மாவே தன்மஹிமையை உணரமுடியவில்லையே? ஏனெனின்? நிர்குண பரமாத்மாவுக்கு அன்யமாய் மஹிமை இல்லை. மஹிமை அன்யமாயிருந்தால் அதை அவர் உணரமுடியும்? ஸகுணபரமாத்மாவுக்கோ, அன்யமாய்,குணங்களும் மஹிமையுமிருந்தாலுங் கூட அவை எண்ணிக்கையற்றிருப்பதால் பரமாத்மாவாலும் உணரமுடியாது என்று சொல்லவேண்டும்.

பரமாத்மா தன்மஹிமையை அறிவதில்லை என்று கூறினல் ஸர்வஜ்ஞத்வம் அவருக்கு அற்றுவிடும். எனவே பரமாத்மா தன் ஸ்வரூபத்தையும் மஹிமையையும் அறிகிறாரு? இல்லையா என்று அனைவருக்கும் உதிக்கும் ஸம்சயத்தை சுருதிநிராகரிக்கிறது. பரமாத்மாவின் ஸ்வரூபமும் குணங்களும் அநந்தங்களானதால் அவற்றை அவர் அறிவதில்லை என்பதுதான் யுக்தமானது. அப்படியானல் அவருக்கு ஸர்வஜ்ஞத்வம் இல்லாமற்போகுமே என்று சங்கிக்க இடமில்லை. அறியமுடியாததை பரமாத்மா அறியவில்லை என்றால் ஸர்வஜ்ஞத்வம் இல்லாமற்போகுமே என்று சங்கிக்க இடமில்லை. அறியமுடியாததை பரமாத்மா அறியவில்லை என்றால் ஸர்வஜ்ஞத்வபங்கமெப்படி ஏற்படும்? அஸத்தானதால் அறியமுடியாததான முயற்கொம்பை பரமாத்மா அறியவில்லையானல் ஸர்வஜ்ஞத்

வம் பங்கமடையுமா? என்று அவ்விரு மந்திரங்களின் தாத்பர்யம். “सर्वखल्विदंब्रह्मतज्जलानितिशान्त उपासीत” என்ற சுருதியில் எல்லாப் பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டான மாயிருத்தலே பரமாத்மாவின் பரமார்த்த ஸ்வரூபமென கூறியுள்ளது. எப்படி என்றால் பரமாத்மாவினிடம் உத்பத்தி ஸ்திதி லயம் மூன்றும் பிரபஞ்சத்துக்கு இருப்பதால் அலைக்கு ஸமுத்திரம்போல் பிரபஞ்சத்திற்குப் பரமாத்மா அதிஷ்டானமாயிருக்கிறார். பிரபஞ்சமோபொய், அதிஷ்டானமான பரமாத்மாவே பரமார்த்தராவர் என்று சித்தாந்தம.

அவதாரிகை.

வேதாந்தங்களால் ஸர்வாதிஷ்டானமாய, ஜீவாபின்னமாய் அத்விதீமாயுமுள்ளப்ருஹமம் பிரதிபாதிக்கப்படுவதாக ஒப்புக்கொள்வதாயிருந்தால் கபிலாதிமஹரிஷிகளின் ஸ்மிருதிகள் அனைத்தும் அப்பிரமாணங்களாகும். அந்த ஸ்ம்ருதிகளில் பிரதானத்தை ஜகத்காரணமென்றும், ஜீவேச்வரர்களுக்குப், ஜீவஜகத்துக்கும், ஜீவர்களுள்ளும் வாஸ்தவபேதமுண்டென்றும், ஜகத்து ஸத்யமென்றும் கூறப்பட்டுள்ளன. கபிலாதிஸ்மிருதிகள், ஸ்மிருதிகளானதால் அப்பிராமாண்யம் அவைகளுக்கு இஷ்டந்தானென்று சொல்வது யுக்தமன்று. கபிலாதிமஹரிஷிகள் ஸர்வஜ்ஞர்களன்றோ? எனவே அவர்களுடைய ஸ்மிருதிகளுக்கு அப்பிராமாண்யம் எங்ஙனம் கூறமுடியும்? ஆகவே கபிலாதிஸ்மிருதி விரோதம் வேதாந்தங்களுக்கு ஸம்பவிக்கின்றதே என்று ஆசங்கித்து “विरोधेत्वनपेक्षस्यादसति-ह्यनुमानं” என்ற அதிகரணத்தில் சுருதி ஸ்மிருதிகளுக்கு பரஸ்பரவிரோதமிருந்தால் சுருதி விரோதிகளான ஸ்மிருதி

கள் அப்பிரமாணங்களாகும், சுருதி விரோதமில்லாவிட்டால் ஸ்மிருதிகள் பிரமாணங்களாகுமென்று ஜைமினி பகவான்கூறிய நியாயப்பிரகாரமாக, கபிலாதிஸ் மிருதிகள் யாவும் சுருதி விரோதிகளானதால் அப்பிரமாணங்களென்று கூறுவதுயுக்தமே. தவிர கபிலாதிஸ்மிருதிகளுக்கு மனுவாதிஸ்மிருதி விரோதமிருக்கிறது. மனு, யாஜ்ஞவல்க்யர், முதலியமஹரிஷிகள் “ **यद्वैकिंचनमनुरवदत्तद्भेषजं** ” என்பதாகி சுருதிகளால் கொளரவிக்கப்பட்ட மஹிமையுடையவர்களாய் ஸர்வஜ்ஞர்களாய் இருக்கிறார்கள். அந்த மஹரிஷிகளின் ஸ்மிருதிகள் உபனிஷத்தைப் பிரமாணமாக அங்கீகரித்து, அவ்வுபனிஷத்துக்களில் கூறியுள்ள ஜீவ ப்ருஹ்மாபேதம், பிரபஞ்ச மித்யாத்வம் முதலிய விஷயங்களை அனேக அனுகூல தர்க்கங்களால் பிரதிபாதனம் பண்ணுவதால் இத்தகைய ஸ்மிருதி விரோதிகளான கபிலாதி ஸ்மிருதிகள் அப்பிரமாணங்களே. கபிலாதி ஸ்ருமிதிகளை பிரமாணங்களென்று ஒப்புக்கொண்டால், சுருதிகளையும், மன்வாதி ஸ்மிருதிகளையும், அப்பிரமாணங்களென்று கூற நேரும். இது யுக்தமன்றென்ற அபிப்பிராயத்தால் ஸர்வஜ்ஞரான ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய பகவத்கீதா ஸ்மிருதியும் அத்வைத ப்ருஹ்மத்தை அறிவிப்பதாக இங்கு கூறுகிறார்.

दृष्ट्वा गीतास्वक्षरतत्त्वं विधिनाजं
भक्त्या गुर्व्यालभ्यहृदिस्थं दृशिमात्रं ।
ध्यात्वा तस्मिन्नस्म्यहमित्यत्र विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२६॥

பதவுரை.

गीतासु=பகவத்கிதையில் **अजं**=ஜன்மமின்றிய **अक्षरतत्वं**=ப்ருஹ்மதத்வத்தை **विधिना**=விதிபூர்வகமாக

दृष्ट्वा=அறிந்து **गुर्व्या**=அதிகமான **भक्त्या**=பக்தியால் **हृदिस्थं**=ஹிருதயத்திலுள்ள **दृशिमात्रं**=ஸாக்ஷி ஸ்வரூபமாய் **ध्यात्वा**=தியானம் செய்து **लभ्य**=ஸாக்ஷாத்கரித்து **अत्रतस्मिन्**=ஜீவாபின்ன அந்த ப்ருஹ்மத்தில் **अहम्**=நான் **अस्मीति**=இருக்கிறேனென்று **यं**=எவரை **विदुः**=அறிந்தனரோ, **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

"**अक्षरंब्रह्मपरमं**" என்று பகவத்கீதையில் சொல்லியுள்ள அக்ஷரப்ருஹ்மத்தை "**तद्विद्धि प्रणिपातेन**" என்று சொன்ன விதிப்பிரகாரமாக ஆசார்யனிடமிருந்து சிரவணம் செய்து, அன்வய வ்யதிரேகங்களால் ஆத்மானாத்மாக்களைப்பிரித்தும், தத்த்வம் பதார்த்தங்களை சோதித்தும், "அஹம்" என்பதில் உள்ள ஜடாம்சத்தை விலக்கி புத்தி ஸாக்ஷியான சைதன்யத்தை அவ்வக்ஷா ப்ருஹ்மமாக அபரோக்ஷமாய் "நானே அந்த ப்ருஹ்மமென்பதாக" அறியவேண்டுமென்று கருத்து.

"येत्वक्षरमनिर्देश्यं अव्यक्तं पर्युपासते ।
सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलंध्रुवं ॥"
"क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ॥"
"ज्ञेयंयत्तत्प्रवक्ष्यामि यत्ज्ञात्वाऽमृतमश्नुते ।
अनादिमत्परंब्रह्म नसत्तन्नासदुच्यते ॥"
"सर्वभूतेषुयेनैकं भावमव्ययमीक्षते ।
अविभक्तं विभक्तेषु तत्ज्ञानंविद्धि सात्विकं ॥"

என்ற விடங்களில் பகவத்கீதையில் ப்ருஹ்மத்தை அஸங்காத்விதீயமாயும் ஜீவாபின்னமாயும் நன்குநிரூபிக்கப்பட்டுளது.

அவதாரிகை.

स्वकृतविचित्रयोनिषु विशन्निव हेतुतया
तरतमतश्चकास्यनलवत्स्वकृतानुकृतिः ।
अथवितथास्वमूष्ववितथं तवधाम समं
विरजधियोऽन्वयन्त्यभिपन्यव एकरसम् ॥

एकस्त्वमात्मा पुरुषः पुराणस्सत्यस्वयंज्योतिरनन्तआद्यः ।
नित्योऽक्षरोऽजस्रसुखोनिरञ्जनः पूर्णोद्वयो मुक्त उपाधितोऽमृतः ॥

तस्मादिदंजगदशेषमसत्स्वरूपं स्वप्नाभमस्तधिषणंपुरुदुःखदुःखम् ।
त्वय्येवनित्यसुखबोधतनावनन्ते मायातउद्यदपियत्सदिवावभाति ॥

नसजीवश्शिवादन्यो योभुङ्क्तेकर्मणांफलम् ।
भेदाभावाच्चतच्चैक्यं नकर्मफलमर्हति ॥
अतस्सर्वजगत्साक्षी चिद्रूपः परमेश्वरः ।
अद्वितीयोमहानन्दः क्रीडयाभोगमर्हति ॥
जीवरूपइहस्थित्वा यः क्रीडति पुरत्रये ॥
नसजीवस्सदाशंभुसत्यमेवनसंशयः ॥
ससत्योऽसत्यसाक्षित्वात्सदासच्चित्सुखंतथा ।
प्रेमास्पदत्वादद्वैतो भेदाभावात्सुरर्षभाः ॥

என்பதாதி சிவவிஷ்ணு புராணாதிகளில் கூறியுள்ள ஆகண்டாத்விதீய ப்ருஹ்ம ஸ்வரூபத்தை இதில் துதிக்கிறார்,

क्षेत्रज्ञत्वं प्राप्य विभुः पञ्चमुखैर्यो
भुङ्क्तेऽजस्रं भोग्यपदार्थान् प्रकृतिस्थः ।
क्षेत्रे क्षेत्रेऽप्स्विन्दुवदेको बहुधाऽऽस्ते
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२७॥

பதவுரை.

विभुः = வ்யாபகரான **यः** = எந்தபரமாத்மா **प्रकृतिस्थः** = மாயையில் இருந்துகொண்டு **क्षेत्रज्ञत्वं** = ஜீவத்வத்தை **प्राप्य** = அடைந்து **पञ्चमुखैः** = ஐந்து இந்திரியங்களால் **भोग्यपदार्थान्** = சப்தாதிபோக்யங்களை **अजस्रं** = எப்போதும் **भुङ्क्ते** = அனுபவிக்கிறாரோ, **क्षेत्रेक्षेत्रे** = ஒவ்வொருசரீரந்தோறும், **अप्सु** = ஜலங்களில் **इन्दुवत्** = சந்திரன்போன்று **एकः** = ஒருவராயிருந்தாலும் **बहुधा** = அனேகராக **आस्ते** = இருக்கின்றாரோ, **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

ஆகாசம்போல் வ்யாபகரான பரமாத்மா அவித்யையிலும் அதன் காரியமான அந்தஃகரணாதிகளிலும் பிரதிபிம்பித்து ஜீவனாக ஆகிறார். ஐந்து ஞானேந்திரியங்களால் சப்தஸ்பர்சாதி போக்ய வஸ்துக்களை அனுபவிப்பவர் போலுமிருக்கிறார். பரமாத்மா ஒருவரேயானாலும் குடம் முதலிய அனேக ஜலபாத்திரங்களில் பிரதிபிம்பித்த சந்திரன் அனேகமாய்த் தோன்றுவதுபோல், அனேக

அந்தஃகரணம் முதலிய உபாதிகளில் பிரதிபிம்பித்து அனேகராயும் தோன்றுகிறார்.

" एकएवहिभूतात्मा भूतेभूते व्यवस्थितः ।
एकधाबहुधाचैवदृश्यते जलचन्द्रवत् ॥

என்ற சுருதியும் இதற்குப் பிரமாணமாகும்.

அவதாரிகை.

மதவாதிகளனைவரும் "த்வைதம் யதார்த்த"மென அங்கீகரித்துள்ளனர். அனேக யுக்திகளைக்கொண்டும் அதை ஸ்தாபிக்கின்றனர். வேதத்திற்கும் கூடத்வைதானு குணமாக பொருத்தி அர்த்தம் கூறுகின்றனர். அது அனைவருடைய அனுபவத்திற்கும் அமைந்ததாயிருக்கின்றது. நீங்கள் ஒருவர்மட்டும் "அத்வைதமே யதார்த்த" மென்கிறீர்கள். த்வைத வாதிகளோ வெகுபேர்களிருக்கின்றனரே. இங்ஙனமிருக்கையில் உமது பக்ஷமாகிய அத்வைதத்தில் எங்ஙனம் விச்வாஸம் உண்டாகுமென்று ஆசங்கித்து, தத்வநிர்ணயம்செய்யும் விஷயத்தில், அனேக வாதிகள், ஒரேவாதிஎன்பது காரணமாகாது. கண்ணுள்ளவனொருவன் செய்யும் ரூபதத்வ நிர்ணயத்தில் ஆயிரம் குருடர்கள் பிரதிவாதியாக இருக்க முடியுமா? பின்னையோ வெனின்? பிரமாணமும் யுக்தியும் அதிகரித்திருப்பதும் குறைந்திருப்பதும் தான் தத்வ நிர்ணய காரணமாகும். பிரமாணமும், யுக்தியும் மிகுதியாக அத்வைத பக்ஷத்திற்றான் இருக்கின்றன. த்வைதவாதிகளுடைய பிரமாணமும், யுக்தியும் ஆபாஸங்களேயாம். அத்வைத பக்ஷத்தில் பிரமாண யுக்திகள் அதிகமென்பது பகவான்

ஸ்ரீபாதராயணுசார்யாள் இயற்றியுள்ள ப்ருஹ்ம ஸூத்ரங்களை நன்கு விசாரித்தால் புலனுகும் என்பதை இங்கு கூறுகிறார்.

युक्त्यालोड्य व्यासवचांस्यत्र हि लभ्यः
क्षेत्रक्षेत्रज्ञान्तरविद्भिः पुरुषाख्यः ।
योसौ हंसस्सोऽस्म्यहमेवेतिविदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२८॥

பதவுரை.

व्यासवचांसि=வியாஸர் வசனங்களை (ப்ருஹ்ம ஸூத்திரங்களை) **आलोड्य**= நன்கு விசாரித்து. **युक्त्या**= யுக்தியால் **क्षेत्रक्षेत्रज्ञान्तराविद्भिः**=சரீரம், ஜீவன் இவர்களின் பேதத்தை அறிந்தவர்களால் **पुरुषाख्यः**= பரமாத்மா **अत्राहि**= இந்த சரீரத்துக்குள்ளேயே **लभ्यः**= அடைய யோக்யர் (ஆவர்) **योहं**= எவன் தேஹேந்திரியாதி ஸாக்ஷியோ, **सोहं**= அவனே பரமாத்மா **सः**= அந்த பரமாத்மா **अहमेवास्मि**= நானுகவே இருக்கிறேன். **इति**= என்று **यं**= எந்த பரமாத்மாவை **विदुः**= அறிகின்றனரோ **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

பகவான் ஸ்ரீவேதவ்யாஸாசார்யாள் உபநிஷத்து வாக்யங்களை மூலமாய் அவலம்பித்து "**अथातोब्रह्माजिज्ञासा**" என்ற சூத்திரம் முதற்கொண்டு "**अनावृत्तिःशब्दात्**" என்ற சூத்திரம்பர்யந்தம் உள்ள ப்ருஹ்ம ஸூத்திரங்களை இயற்றியுள்ளார். அந்த சூத்திரங்களை நன்கு அர்த்த விசாரம் செய்தால் ஜீவாபின்ன அத்வைத ப்ருஹ்மமே

உபனிஷத்துக்களின் தாத்பர்ய விஷயமென்பது புலனாகும். அதாவது :— " अथातोब्रह्मजिज्ञासा " என்ற சூத்திரத்தினால் காலதேசவஸ்து பரிச்சேதமின்றிய ஜீவாபின்ன ப்ருஹ்மத்தை முமுக்ஷுக்கள் விசாரிக்கவேண்டு மென்று பிரதிஜ்ஞை செய்தார். "जन्माद्यस्ययत:" என்ற சூத்திரத்தினால் அப்பிருஹ்மத்துக்கு லக்ஷணத்தையும், " शास्त्रयोनित्वात् " என்ற சூத்திரத்தினால் அதற்குப் பிரமாணத்தையும் கூறினார். அதன்பின்பு சாஸ்திரங்கள் எல்லாம் கர்மாக்களை கூறுகின்றனவே யன்றி பிருஹ்மத்தைக் கூறவில்லை என்ற மீமாம்ஸகர்சங்கைக்கு உத்தரமாக " तत्तुसमन्वयात् " என்ற சூத்திரத்தினால் சாஸ்திரங்களுக்குக் கர்மாக்களைக் கூறுவதில் தாத்பர்யமில்லை; பிருஹ்மத்தைக் கூறுவதில் தான் தாத்பர்யமென்றுரைத்தார். பின்னர் "ईक्षतेर्नाशब्दं" என்ற சூத்திரத்தால் ஸாங்கியர்கூறும் பிரதாநம் ஜகத்காரணமில்லை என்று கூறி " गतिसामान्याच्च " என்பதால் எல்லா வேதங்களுக்கும் அத்வைதப் பிருஹ்மத்தில்தான் தாத்பர்ய மென்பதை ஸ்தாபித்தார். இவ்வித பிருஹ்மத்தில் வேதாந்த தாத்பர்யமென்பதை " आनन्दमयोऽभ्यासात् " என்ற அதிகரணம் முதற்கொண்டு ஒன்று இரண்டு மூன்று பாதங்களால் விரிவாய் கூறிவிட்டு, நான்காம்பாதத்தில் சில அதிகரணங்களால் சாங்கியர் கூறும் பிரதாநம் வேதத்தில் கூறவில்லை என்று சொல்லிவிட்டு அந்த பிருஹ்மந்தான் ஜகத்திற்கு நிமித்தகாரணமாயும் உபாதாந காரணமாயுமிருப்பதாக " प्रकृतिश्चप्रतिज्ञादृष्टान्तानुपरोधात् " என்ற சூத்திரத்தால் கூறிவிட்டு முதலாவது அத்யாயத்தை ஸ்ரீவ்யாஸர் பூர்த்திசெய்தார்.

இரண்டாவது அத்யாயத்தில் முதல் பாதத்தால் அத்வைத மதத்துக்கும் ஸாங்கியயோக வைசேஷிகாதி ஸ்மிருதி

களுக்கும் உள்ள விரோதத்தைப் பரிஹரித்து அவர்க ளால் கூறப்பட்ட யுக்திகளுக்கும் அத்வைதமதத்தில் பரிஹாரம் கூறியுள்ளார். இரண்டாவது பாதத்தால் ஸாங் யர், வைசேஷிகர், நையாயிகர், மூன்று பௌத்தர்கள், ஜைனர், பாஞ்சராத்ரர், சைவர், இவர்களது பக்ஷங்கள் யாவும் ஆபாஸயுக்திகளால் ஆவிர்பவித்துள்ளன வென் பதை நிரூபித்து ஜிவபின்னனான பரமேச்வரனை யுக்திப் பிரமாணத்தால் நிராகரித்தார். பின்பு மூன்றும் பாதத் தால் பஞ்சபூத ச்ருதிகளுக்கும், ஜீவச்ருதிகளுக்கும் பரஸ் பர விரோதத்தைக் கண்டித்து நான்காம்பாதத்தால் லிங்க சரீர சுருதிகளுக்குப் பரஸ்பர விரோதபரிஹாரம் செய் துள்ளார். இவ்வாறு இரண்டாவது அத்யாயத்தால் அத்வைத மதத்திற்கு வாதிகளால் கூறப்படும் விரோதத்தை நிவிருத்தித்தார்.

மூன்றுவது அத்யாயம் முதலாவது பாதத்தில் ஸம் ஸாரிகளுக்கு லோகாந்தரத்தைக் குறித்துப் போக்குவரவை நிரூபணம் செய்வது மூலமாக ஸம்ஸார தோஷத்தை எடுத்துரைத்து அதிகாரிகளுக்கு வைராக்யத்தை வற்புறுத் துகிறார்.

இரண்டாம் பாதத்தில் "தத்வமஸி" முதலியமஹா வாக்யார்த்தஞானம் ஸித்திப்பதற்காக ஜாக்கிரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி மூர்ச்சை, மரணம் முதலிய அவஸ்தைகளி லிருந்து த்வம் பதார்த்தனான ஜீவனைப் பிரித்துரைத்து, தத் பதார்த்தனான ஈச்வரனையும் த்வைதப்பிரபஞ்சம் பொய் யெனக்கூறி அதினின்றும் பிரித்துரைத்தார். பின்மூன்றும் பாதத்தால் உபாஸனையின் பேதாபேதங்களைக் கூறுவது மூலமாக குணங்களை கிருஹித்துக்கொள்வதையும், குணங் களைக்கிருஹித்துக் கொள்ளாமலிருப்பதையும் எடுத் துரைத்து, ஸகுணநிர்குணவேத வசனங்களுக்குள்ளிருக்

கும் விரோதத்தை ஔபாதிகபார மார்த்திகங்களால் பரிமாணம்போலப்பரிஹாரம் செய்துள்ளார். நான்காம்பாதத்தால் **पुरुषार्थोऽतःशब्दादितिबादरायणः**" என்ற அதிகரணத்தில் கர்மாபேக்ஷை இன்றிய பிருஹ்மஞானமே மோக்ஷஸாதநமென்றும், அதுஉண்டாக ஸந்யாஸ சாந்தியாதிகளே அந்தரங்க ஸாதநங்களென்றும், யஜ்ஞாதிகர்மாக்கள் யாவும் ஞானத்துக்குப் பஹிரங்கஸாதநங்களென்றும், ஞானஸாதன முள்ளவர்களுக்கும் பிரதிபந்தமில்லாவிட்டால் இந்தஜன்மத்திலேயே மோக்ஷம்ஸித்திக்கும், பிரதிபந்தமிருந்தால் மறுஜன்மத்தில் மோக்ஷம்ஸித்திக்கும் என்பதையும்கடைசி அதிகரணத்தில் கூறி மூன்றும் அத்யாயத்தை பூர்த்திசெய்தார்.

அதன் பின்நான்காம் அத்யாயத்தில் முதற்பாதத்தில் "**आवृत्तिरसकृदुपदेशात्**" என்ற அதிகரணத்தில் பிருஹ்மஸாக்ஷாத்காரம் உண்டாகும் வரையில் சிரவணமனநாதிகளை ஆவிருத்தி செய்யவேண்டும் என்று கூறி "**आत्मेतितूपगच्छन्तिग्राहयन्तिच**" என்ற அதிகரணத்தில் தத்வமஸிமஹாவாக்யார்த்தமான ஜீவப்ருஹ்மாபேதத்தையும் தெரிவித்து, ஸகுணோபாஸகனுக்குக் கிரமமுக்தியையும் தெளிவுபடுத்தியுள்ளார். இரண்டாம்பாதத்தில் ஸகுணோபாஸகனுடைய உத்க்ரமணம் முதலியவற்றை வர்ணித்து விட்டு மூன்றும்பாதத்தில் ஸகுணோபாஸனுக்குறிய தேவயான மார்க்கத்தை விசாரித்து அவனுடைய ப்ருஹ்மலோகப்பிராப்தியையும் நிர்ணயித்து நிர்குண ப்ருஹ்மஞானிக்கு உத்க்ராந்தி, கதி, ஆகதி இல்லையென நிரூபித்தார். நான்காம் பாதத்தில் நிர்குண ஞானப்பிரயோஜனத்தைக் கூறி ப்பிறகு ஸகுணோபாஸகனுக்கு ப்ருஹ்மலோகத்தில் ஐச்வர்யபோகத்தை நிரூபித்து முடிவில் ஸகுணோபாஸகர்களுக்குப் புநராவிருத்தி கிடையாதென்பதைக் கூறிசாஸ்திரத்தை முடித்

துள்ளார். இவ்வாறுஸர்வஜ்ஞ வேதவ்யாஸர் எழுதிய நான்கு அத்யாயங்கொண்ட ப்ருஹ்மமீமாம் ஸாசாஸ் திரத்தை விசாரித்தால் அத்வைதமேஸித்திப்பதால் பேத வாதிநாய் குலேப்பால் அத்வைத மஹாமேருபர்வதத்திற்கு யாதொருபங்கமும் விளைவிக்க முடியாது.

அவதாரிகை.

முமுக்ஷுவான அதிகாரி தன்ஸாக்ஷியைமட்டும் ப்ருஹ்மமாக அறிகிருனா? அல்லது மற்றெல்லா ஸாக்ஷியும் ப்ருஹ்மமாக அறிகிருனா? முதலாவது பக்ஷத்தில் மற்றவர் களுடைய ஸாக்ஷியை உண்மைஎன்று நினைப்பானு? அல் லது கற்பிதமென்று கருதுவானு? த்வைதம் பிராப்த மாவதால் உண்மை என்பது யுக்தமில்லை. இரண்டாவது பக்ஷத்திலோ, மற்றஸாக்ஷியைக் கற்பிதமாய் அறிவதுபோல் தன்ஸாக்ஷியையும் ஏன் கற்பிதமென்றுணரக் கூடாது? தன்ஸாக்ஷியையும், மற்றவர் ஸாக்ஷியையும் பிருஹ்மமாக உணருவதாயிருந்தால் தன் ஸாக்ஷியை ப்ருஹ்மமாக ஸாக்ஷாத்கரித்ததால் தனக்குப் பந்தநிவிருத்தி ஏற்பட்டிருப் பதுபோல் மற்றவர்களுக்கும் தன்ஞானகாலத்தில் பந்தம் நிவிருத்திக்க வேண்டுமே? என ஆசங்கித்து தன்ஸாக்ஷியைப் போல் புருஷாந்தர ஸாக்ஷியையும் பிருஹ்மமாகவே ஞானி ஸாக்ஷாத்கரிக்கிருன் என்ற இரண்டாவது பக்ஷத்தை இந்த சுலோகத்தில் ஸித்தாந்தம் செய்கிருர்.

एकीकृत्यानेकशरीरस्थमिमं ज्ञं यं
विज्ञायेहैव स एवाशु भवन्ति ।
यस्मिन्लीना नेह पुनर्जन्म लभन्ते
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२९॥

பதவுரை.

अनेकशरीरस्थं= அனேக சரீரங்களிலுள்ள **इमं**= இந்த **हंसं**= ஸாக்ஷி சைதன்யத்தை **एकीकृत्य**= ஒன்றுபடுத்தி **यं**= எந்த பரமாத்மாவை **विज्ञाय**= அபரோக்ஷமாய் அறிந்து **इहैव**= இத்தேஹத்திலேயே **आशु**= இப்பொழுதே **सएव** = அப்பரமாத்மாவாகவே **भवन्ति** = ஆகின்றார்களோ? **यस्मिन्**= எந்த பரமாத்மாவினிடத்தில் **लीनाः**= லயமடைந்தவர்களாய் **इह** = இச்சம்ஸாரத்தில் **पुनर्जन्म**= மீண்டும் ஜன்மத்தை **नलभन्ते**= அடைவதில்லையோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

ஸாக்ஷீ ஜீவஸாக்ஷி ஈச்வரஸாக்ஷி என இருவிதம். ஈச்வரஸாக்ஷிக்கு உபாதியான மாயை ஒன்றானதால் அவ்வீச்வரஸாக்ஷி ஒன்றேயாகும். ஜீவஸாக்ஷிக்கு உபாதியான அவித்யாந்தஃகரணம் முதலியவை அனேகமானதால் ஜீவஸாக்ஷி அநந்தமாகும். முமுக்ஷுவான அதிகாரி முதலில் ஜீவஸாக்ஷிகளை ஒன்றே என்று அறிதல் வேண்டும். பிறகு ஈச்வரஸாக்ஷியுடன் அபேதமாய் உணரவேண்டும். இதனால் அகண்ட ப்ருஹ்ம பாவம் ஏற்படும்.

"यत्परं ब्रह्मसर्वात्मा विश्वस्यायतनंमहत् ।
सूक्ष्मात्सूक्ष्मतरंनित्यं तत्त्वमेव त्वमेवत् ॥"

"ब्रह्मवेद ब्रह्मैवभवति"

"तद्योयोदेवानां प्रत्यबुध्यत सएवतदभवत्"

என்ற சுருதிகள் இவ்விஷயத்தைக் கூறுகின்றன. எல்லா ஸாக்ஷியையும் பிருஹ்மமாக அறிந்தால் எல்லோ

ருக்கும் ஒருவன் ஞானத்தாலேயே பந்தநிவிருத்தி ஏற்பட வேண்டுமென்ற சங்கைக்கு ஸமாதானமாவது :— ப்ருஹ்ம ஞானியின் திருஷ்டியில் அன்யர்களெல்லோரும் பந்த நிவிருத்தி பெற்றவர்களே யாவர். அந்யர்களின் திருஷ்டி யில், அவ்வன்யர்களுக்கு ப்ருஹ்ம ஞானம் உதிக்காததால் அவர்கள் பந்தநிவிருத்தி யற்றவர்களே. ஞானி திருஷ்டியில் எல்லோரும் முக்தர்களென்பது ப்ருஹ்ம கீதையில் விரிவாய் கூறப் பட்டுள்ளது.

" स्वशरीरेऽन्यदेहेषु समं निश्चित्य तद्दृढं ।
तथाकाराश्च जायन्तेह्यमृताश्चभवन्तिहि ॥
बद्धोमुक्तो महाविद्वानज्ञइत्यादिभेदतः ।
एकएवसदाभाति चेतनस्स्वप्नवत्स्वयम् ॥
अतस्स्वमुक्त्याचान्येषामाभासानामपिध्रुवं ।
मुक्तिंजानाति हेदेवाः आत्मनामात्मविद्वरः ॥
स्वसंसारदशायांतु स्वभ्रान्त्या सर्वदेहिनां ।
आभासानां च संसारं वेदमुक्तिं तथैवच ॥

என்று

அவதாரிகை.

பிருஹதாரண்யோபநிஷத்து நான்காம் அத்யாயத்தில் மதுப்பிராஹ்மணமிருக்கிறது. அதில் " **इयं पृथिवीसर्वेषां भूतानां मधु अस्यै पृथिव्यै सर्वाणिभूतानि मधु** " ' **इमा आपः** ' " **अयमग्निः** " " **अयं वायुः** " " **अयमादित्यः** " என்று பிரு திவீ, ஜலம், அக்னி, வாயு ஆதித்யன் முதலியவை, எல்

லாப் பிராணிகளுக்கும் மது. (தேனடை). பிருதிவீ முதலிய வற்றிற்கு எல்லா பிராணிகளும் மது. (தேனடை) தேனீக் களுக்குத் தேனடைபோல் பிருதிவி முதலியவற்றிற்கும், பிராணிகளுக்கும் பரஸ்பரம் போக்யத்வம்கூறி பரஸ்பரம் கார்யகாரணபாவம் கூறப்பட்டுளது. அதனுலேயே அவ் விரண்டும் மித்யையாம். அவ்விரண்டிற்கும் அதிஷ்டான மான சைதன்யமே யதார்த்தமாம். அதிதைவமாயுள்ள பிருதிவீ முதலியவற்றிலிருக்கும் தேஜோமய புருஷனையும் உபாதியை நீக்கி, ஐக்யப்படுத்தி, அதையே அகண்ட ப்ருஹ்மமென்றும், ஜகத்காரணமென்றும், அதைத் தவிர வேறுவஸ்து இல்லை என்றும் அறியவேண்டுமென்று கூறி யுள்ளது. இம்மதுப் பிராஹ்மணத்தில் அத்யாத்மத்திலும், அதிதைவத்திலும் உள்ள த்வந்துவங்களை ஐக்யப்படுத்தி எந்தப்ருஹ்மம் சொல்லப்பட்டுளதோ, அந்தவிஷ்ணு ஸ்வ ரூபத்தைத் துதிக்கிருர்.

द्वन्द्वैकत्वं यच्च मधुब्राह्मणवाक्यैः
कृत्वा शक्रोपासनमासाद्य विभूत्या ।
योऽसौ सोऽहं सोऽस्म्यहमेवेति विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३०॥

பதவுரை.

मधुब्राह्मणवाक्यैः = மதுப்பிராம்மண வாக்யங்களால் **यच्च** = எந்த **द्वन्द्वैकत्वं** = த்வந்துவங்களுடைய ஐக்யம் **प्रोक्तं** = கூறப்பட்டுளதோ **तत्** = அவ்வைக்யத்தை **कृत्वा** = உணர்ந்துகொண்டு **विभूत्या** = ஐச்வர்யத்தால் **शक्रोपासनं** = இந்திரனின் தனது உபாஸநத்தை **आसाद्य** = அடைந்து **योसौ** = எந்த ஈச்வரனுண்டோ **सोहं** = அவனே நான்

अहमेव=நானே **सोऽस्मि** = அவ்வீச்வரன் **इति**= என்று **यं**= எவனை **विदुः**= அறிகிருர்களோ. **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

பிருதிவீ முதலியவற்றில் உள்ள பரமாத்மாவையும் ஸ்தூல சரீராதிகளில்உள்ள பரமாத்மாவையும் மதுப் பிராம்மணத்தில் கூறியபடி ஏகமாய் அறிந்தால் அகண்டாத்வைதப் பிருஹ்ம ஸ்வரூபத்வம் ஸித்தமாகும். இத்தகைய ஞானியை இந்திரன் முதலிய தேவர்களும் ஸேவிக்கிருர்கள். "**यस्त्वेवंब्राह्मणोविद्यात्। तस्यदेवाअसन्वशे।**" என்று சுருதியும் இதற்குப் பிரமாணமாகும். தன்னிடத்தில் ப்ருஹ்மம் இல்லை என்றபுத்தி நிவிருத்திப்பதற்காகத் தன் ஸ்வரூபத்தை ப்ருஹ்மமாகவும், ப்ருஹ்மத்தில் பரோக்ஷத்வபுத்தி நிவிருத்திக்காக ப்ருஹ்மத்தை தன் ஸ்வரூபமாகவும் பரஸ்பராபேதத்துடன் உணரவேண்டும்.

அவதாரிகை.

"**तद्योहंसोसौयोसौसोहं**" **त्वंवाअहमस्मि भगवोदेवते अहंवैत्वमसिभगवोदेवते**" என்ற சுருதிகளில் நானே அப்பரமாத்மா; அவனே நான் என்று பரஸ்பராபேதமாக த்யானம் செய்யும்படி எந்த பரமாத்மாவை உபதேசித்துளதோ, அந்த விஷ்ணுவை இதில் ஸ்தோத்ரம் செய்கிருர்

योऽयं देहे चेष्टयितान्तःकरणस्थः
सूर्ये चासौ तापयितासोऽऽस्म्यहमेव ।
इत्यात्मैक्योपासनया यं विदुरीशं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२१॥

பதவுரை.

योयं= எவர் **अन्तःकरणस्थः**= மனதில் இருந்து கொண்டு **देहे**=தேஹத்தில் **चेष्टयिता**=கார்யப்பிரவர்த்தகரோ **असौ**= இவரே **सूर्यें**= ஸூர்யனிடத்திலும் **तापयिता**= தபிக்கும்படி செய்கிறவர் **सः**= அவர் **अहमेव**= நானே **अस्मि**= ஆகிறேன் **इति**= என்றிவ் விதமாக **आत्मैक्योपासनया** = பரஸ்பரபேதோபாஸனையால் **यं** = எந்த **ईशं**= பரமாத்மாவை **विदुः**= அறிகின்றனரோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

சேதனனன்றி ஜடதேஹம் சேஷ்டிக்காது. ஜடதேஹ சேஷ்டையைக்கொண்டு சேதனனை ஊஹித்தறிய வேண்டும். அஸங்கோதாஸீநராயுள்ள பரமாத்மாவுக்கு ஸ்வபாவமாக ஜடதேஹ சேஷ்டைக்கு ஹேதுவாயிருத்தல் பொருந்தாது. அதற்காக தேஹாதிகளுடன் சேதனனுக்கு ஸம்பந்தம் கற்பிதமாக ஒப்பவேண்டும். ஜடதேஹ சேஷ்டைக்குக் காரணமான சேதனனே, ஸூர்யமண்டலாபிமானியின் சேஷ்டைக்கும் காரணமாயுள்ளது. இதனால் அந்தர்யாமி அனேகரில்லை என்பது ஸித்தமாயிற்று. ஜட உபாதி ஸம்பந்தம் சேதனனுக்குக் கற்பிதமானதால் அந்தர்யாமித்வம் முதலிய தர்மமும் முடிவில் கற்பிதமேயாம். உபாதிகளை நீக்கி, ஸூர்யமண்டலாந்தர்யாமியையும், ஜடதேஹாந்தர்யாமியையும் ஐக்யமாய் உபாஸித்தால் அகண்ட ப்ருஹ்ம ஸாக்ஷாத்காரம் ஆவிர்ப்பவிக்கும். அபேதமாய் உபாஸித்தலே ச்லாக்யமாகும்.

அவதாரிகை.

பூர்வ சுலோகத்தில் பரமாத்மா அபேதமாய் உபாஸிக்கத்தகுந்தவரென்று கூறினதால் அபேதமாய் அறியத்தகுந்தவராயு மவராவரென்ற ஆசங்கையை இதில் நிராகரணம் செய்கின்றார்.

विज्ञानांशो यस्य सतश्शक्त्यधिरूढो
बुद्धिर्बुध्यत्यत्र बहिर्बोध्यपदार्थान् ।
नैवान्तस्थं बुध्यति यं बोधयितारं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३२॥

பதவுரை.

यस्य= எந்த **सतः**= ஸத்ரூபியான பரமாத்மாவின் **शक्त्यतिरूढः**= அவித்யாசக்திப் பிரதிபிம்பிதனான **विज्ञानांशः**=விஜ்ஞானமயஜீவன் **अत्र**=இவ்வுலகில் **बहिः**= வெளியிலுள்ள **बोध्यपदार्थान्**= அறியத்தகுந்த விஷயங்களை **बुद्ध्यति**= அறிகின்றானோ, **बुद्धेः**= அந்தக்கரணத்துக்கு **अन्तस्थ**= உள்ளே இருக்கின்ற **यं**= எந்த **बोधयितारं**= அறியும் தன்மை அளிக்கும் அறிவை **नैवबुध्यति**= அறிகின்றான் இல்லையோ **तं**= அந்த **संसारध्वान्ताविनाशं**= ஸம்ஸார இருளை நாசஞ்செய்யும். **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

ஸச்சிதாநந்த ரூபியான பரமாத்மாவின் அவித்யாசக்தியில் ஏற்படும் பிரதிபிம்பமே ஜீவனென்றபெயர் பெறும். ஜீவன் அந்தக்கரண தர்மங்களான சுகதுக்கங்களையும் காமக்குரோதாதிகளையும், வெளியிலுள்ள குடம் முதலிய

விஷயங்களையும் நன்குணர்ந்தாலும், தனக்கு அறியும் சக்தியை அளித்தபேரறிவான ஸாக்ஷியை உணரமாட்டான். "विज्ञातारमरे केनविजानीयात् येनेदंसर्वंविजानाति तंकेनविजानीयात्" "नविज्ञातेर्विज्ञातारं विजानीयात्" என்ற சுருதிகள் உள்வெளிபதார்த்தங்களை அறிவுரூபமாயிருந்துகொண்டு உணரும் பிரமாதாவை எந்த ஸாதநங்களால் உணரமுடியும்? மனம் முதலிய ஞானஸாதநங்களெல்லாம் வெளிவிஷயங்களை உணருமேயன்றி பிரமாதாவை உணராது. தவிர மனஆதிகள் ஜடங்களானதால் இன்னொரு வஸ்துவை அறியும்சக்தி அதற்கு சைதன்யஸம்பந்தத்தாற்றான் ஏற்படும். அந்தசைதன்யரூபனை பிரமாதாவை மனஆதிஸாதநங்களால் எங்ஙனம் உணரமுடியும். விருத்திஞானத்தால் ஆத்மாவை அறியமுடியாதென்று சொல்லுகின்றன. "दृश्यते त्वाग्र्ययाबुध्या" என்ற சுருதி அகண்டாகாராந்த: கரணவிருத்திப் பிரவாஹ விஷயமாக ஆத்மா ஆகுமென்பதைக் கூறுகின்றதேயொழிய அத்தகைய விருத்திஞானப் பிரவாஹ விஷயமாக ஆத்மா ஆகுமென்று கூறவில்லை. எனவே ஆத்மா மனோவிருத்திஞானத்திற்கு விஷயமாகாது. மனோ விருத்திக்கு விஷயமாகும். இதுதான் ஆத்மாவை அறிதலாகும். ஆத்மாவை உபாஸனை செய்வதும் மனோவிருத்தி விஷயமாக ஆத்மாவைப்பண்ணுவதேயொழிய மனோ விருத்திஞான விஷயமாகப்பண்ணுவதன்று. மனோவிருத்தி ஞான விஷயமாகாததால் ஆத்மாவை அறியமுடியாதென்றும் மனோவிருத்தி விஷயமாவதால் ஆத்மாவை அறியலாம் என்று மிருவிதமாய் சுருதிகள் வர்ணிக்கின்றன.

அவதாரிகை.

ஆத்மாவே எல்லாவற்றையும் அறிபவனென்பது சுருதிப் பிரமாணத்தால் மாத்திரம் ஸித்திக்கவில்லை; யுக்திப் பிரமாணத்தாலும் ஸித்தமாகிறது. குடம் முதலியவை ஜடமானதால் அறியுந்தன்மை அவற்றிற்கு இல்லை. ஆத்மா ஞாதாவாய் ஸித்திக்கிறனென்பதை வர்ணிக்கிறார்.

कोऽयं देहे देव इतीत्थं सुविचार्य
ज्ञाता श्रोतामन्तयिता चैष हि देवः ।
इत्यालोच्य ज्ञांश इहासीति विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥२३॥

பதவுரை.

देहे = சரீரத்தில் **कोयं**=யார் **देवः** = ஞாதாவான தேவன்? **इतीत्थं**=என்றிவ்விதமாக **सुविचार्य**=நன்கு விசாரித்து **एषहि**= இந்த **देवः**=ஸ்வப் பிரகாசமான ஆத்மாவே **ज्ञाता**=அறிபவன் **श्रोता**= கேட்பவன் **मन्तयिता**= மனனம் செய்பவன் **इति**=என்று **आलोच्य**=உணர்ந்து **इह**=தேஹாதிகளில் **ज्ञांशः**=அறிவு அம்சமாக **असीति**= இருக்கிறேனென்று **यं**=எந்தபரமாத்மாவை **विदुः**=அறிகின்றனரோ, **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**=ஸம்ஸார இருளைநாசம் செய்யும் **हरिं**=ஹரியை **ईडे**=துதிக்கிறேன்.

விரிவுரை.

முமுக்ஷு சரீரத்துக்குள் ஞாதாயார் என்பதை விசாரித்துணரவேண்டும். சரீரமோ, இந்திரியங்களோ, பிராணாதிகளோ, அந்தஃகரணமோ, இவை ஜடங்களானதால் ஞாதாக்களாகா. ஸ்வப்பிரகாசஸாக்ஷிசைதன்யமே ஞாதா

வாகும். அதுசமதுவாஸ்தவ ஸ்வரூபமென்று அறிய வேண்டும். “अदृष्टोद्रष्टाऽश्रुतःश्रो ताऽमतोमन्ताऽविज्ञातो-विज्ञाता” என்ற சுருதியில் தர்சனச்ரவணுதிகளுக்கு விஷயமாகாத ஆத்மாவை தர்சனச்ரவணுதிகளுக்கு ஞாதாவாய்வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

அவதாரிகை.

कोह्येवान्यात्कःप्राण्यात् । यदेषआकाश आनन्दो नस्यात् । एषह्येवानन्दयाति । ” என்ற தைத்திரீயோபநிஷத்தில் ஆகாசம்போன்ற ஆனந்த ஸ்வரூபியான ஆத்மா இல்லாமற் போனல் எவன் பிராணுபாந வியாபாரம் செய்வான்? பிராணுதிகளும் ஜடமானதால் சேதந ஸம்பந்தமின்றி தம்தம் கார்யங்களில் பிரவர்த்திக்கமாட்டாது. இவ்வாத்மாவே எல்லா ஜனங்களையும் ஆனந்தப்படுத்துகிறது. அதாவது:— ஆநந்தத்தால்தான் அனைவரும் ஜீவிக்கிறூர்கள். ஆநந்தமின்றேல் விஷயாநந்தமில்லை, விஷயாநந்தமில்லையென்றூல் பொருக்கவொண்ணு துக்கங்களைப் பொருத்துக்கொண்டாவது ஜீவனம் செய்யவேணுமென்ற பிரார்த்தனை இல்லாமற்போகும். அவ்வாநந்தத்தை ஆசைப்பட்டுக்கொண்டே அனைவரும் ஜீவனத்தை ஆசைப்படுகிறூர்கள். என்று கூறியுள்ள எல்லோருடைய வியவாஹாரத்துக்கும் ஜீவனத்துக்கும் ஹேதுவான ஸச்சிதாநந்த பரமாத்மாவை இங்கு கூறுகின்றூர்.

को ह्येवान्यादात्मनि न स्यादयमेष·
ह्येवानन्दः प्राणिति चापानितिचेति ।
इत्यस्तित्वं वक्त्युपपत्त्या श्रुतिरेषा
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३४॥

பதவுரை.

आत्मनि = சரீரத்தில் अयं = அறிவுருபியான ஆத்மா यदिनस्यात् = இல்லாமற் போனால் कोह्येव = எவன்தான் अन्यात् = அபானகார்யம் செய்வான் आनन्दः = பரமாத்ம ரூபியான एषह्येव = இவ்வாத்மாவே प्राणितिच = உச்வாஸம் விடுகிறது. अपानितिच = நிச்வாஸம் விடுகிறது. इति = என एषा = பிரஸித்தமான श्रुतिः = தைத்திரியோபநிஷத்து उपपत्या = யுக்தியுக்தமாய் अस्तित्वं = ஆத்மா இருக்கிற தென்பதை वक्ति = கூறுகிறதோ तं = அந்த संसारध्वान्तविनाशं = ஸம்ஸார இருளை நாசம் செய்யும் हरिं = ஹரியை ईडे = துதி செய்கிறேன்.

அவதாரிகை.

ஐதரேயோப நிஷத்தில் ஸங்கிரஹமாயும் விஸ்தாரமாயும் விசார பூர்வகமாக நிர்ணயிக்கப்பட்ட பரமாத்ம ஸ்வரூபத்தை இதில் துதிசெய்கிறார். அதாவது:— “ आत्मावाइदमेक एवाग्र आसीत् ” என்று ஆரம்பத்தில் அத்வைத ப்ருஹ்மத்தைக்கூறி, அத்வைதத் வத்தை நிரூபிப்பதற்காக ஈக்ஷண பூர்வமாக ஜகத்ஸிருஷ்டியையும், சரீரஸிருஷ்டியையும், தேவதைகளின் ஸிருஷ்டியையும் அதின்றும் வைராக்யத்திற்காக அத்தேவதைகளின் பசிதாகமுள்ள ஸம்ஸார ஸாகரத்தில் விழுதலையும் காண்பித்து, அதன்பின் அத்தேவதைகளின் பசிதாகம் நிவிருத்திப்பதற்காக அந்நஸிருஷ்டியை வர்ணித்து, அதற்குப்பிறகு அவ்வந்நத்திற்குப் போக்தாவாய் அபானனை தெரிவித்து, அத்தேவதைகளுக்கு பரமாத்மப் பிரவேசமில்லாவிட்டால் தம்தம் கார்யங்களை இயற்றும் சக்தி இல்லையானதால்

சிரஸ்ஸைப் பிளந்துகொண்டு சரீரத்துக்குள் பரமாத்மா நுழைந்து, அத்தேஹத்தில் நானென்ற அபிமானத்தால் ஸம்ஸாரியாய் ஜீவனைத் தோன்றினர் என்று கூறிற்று. அத்தகைய பரமாத்ம ஸ்வரூபியான ஜீவனுக்கு, பூர்வ புண்ய பரிபாகவசமாக ஞானேச்சை உதிக்கவே, "வாக் முதலிய இந்திரியங்கள் ஆத்மாவன்று பின்நான்யார்" என்ற ஆத்மவிசாரத்தை ஆரம்பித்து, ஜாக்கிரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி என்று மூன்று அவஸ்தைகள் பொய்யென்றும், ஆத்மா வாகாதிகளுக்கு அன்யமென்றும், கூறி ஸர்வ ஸாக்ஷியாயும், சிந்மாத்ரமாயும் ஆத்மாவை பரிசேஷித்து, அதை ப்ருஹ்மமென்று ஜீவன் உணர்ந்ததாகக்கூறி முதல் அத்யாயம் பூர்த்தியடைந்தது.

இரண்டாவது அத்யாயம் வைராக்யம் அவச்யம் என்பதை வர்ணித்து பூர்த்தியடைந்தது.

மூன்றும் அத்யாயத்தில் சிரஸ்ஸு வழியாகவும், கால் நுனி வழியாகவும் சரீரத்துக்குள் நுழைந்துள்ளதாக முன்பு கூறப்பட்டவர்களும், ஞானசக்தி கிரியாசக்தி யுடையவர்களுமான ஜீவன்பிராணன் இவ்விருவர்களுக்குள் ஆத்மா யார் என்று நீண்ட விசாரணை செய்து சைதன்யமே ஆத்மாவென்பது முடிவில் தீர்மானமாய் கூறிஅத்தகைய ஆத்மாவே ப்ருஹ்மாதி ஸர்வவஸ்துரூப மென்று கூறி "**प्रज्ञानंब्रह्म**" என்ற மஹாவாக்யத்தால் சைதன்யரூமான ஆத்மாவும் ப்ருஹ்மமும் ஒன்றென்று கூறுவதுடன் ஐதரேயோபநிஷத்து முடிவுற்றது. இவ்வுபநிஷத்தில் கூறியபிரகாரமாக பரமாத்மாவை இதில் துதிக்க ஆரம் பிக்கிறார்.

प्राणोवाहं वाक् श्रवणादीनि मनो वा
बुद्धिर्वाहं व्यस्त उताहोपि समस्तः ।
इत्यालोच्य ज्ञप्तिरिहास्मीति विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३५॥

பதவுரை.

अहं = நான் **व्यस्तः** = தனித்தனியான **प्राणोवा** = பிராணனு? **वाक्** = வாகிந்திரியமா? **श्रवणादीनि** = காது முதலியனவா? **मनोवा** = மனமா? **अहं** = நான் **बुद्धिर्वा** = புத்தியா? **उताहो** = இல்லையேல் **समस्तोपि** = இவைளல்லாம்சேர்ந்தகூட்டமா? **इति** = என்று **आलोच्य** = விசாரித்து **इह** = இத்தேஹத்தில் **ज्ञप्तिः** = அறிவுருபமாக **अस्मीति** = இருக்கிறேனென்று **यं** = எந்தபரமாத்மாவை **विदुः** = அறிகிறார்களோ, **तं** = அந்த **संसारध्वान्ताविनाशं** = ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

எனக்குப் பசிக்கிறது, தாஹிக்கிறது, நான் பேசுகிறேன் என்னும் அனுபவத்தால் நான் என்றவஸ்து பிராணுதிகளுக்குள்ளொன்ரு? அல்லது அதன் ஸமுதாயமா? இன்றேல் இவ்வெல்லாவற்றிற்கும் ஸாக்ஷியா? என்று அந்தர்முக திருஷ்டியால் நிரந்தரம் விசாரணைபுரிந்தால், பிராணுதி வஸ்துக்களுக்கு அன்யமாய், அவற்றிற்குப் பிரகாசகமாய் ஸாக்ஷியாயுள்ள சுத்த சைதன்யம்தான் நான் என்றஸாக்ஷாத்காரம் ஆவிர்பவிக்கும் என்பது இதன் தாத்பர்யமாகும்.

அவதாரிகை.

பிராணாதி வஸ்துக்களில் நான் என்கிற அனுபவம் அனைவருக்கும் இருக்கிறபடியால் அவை ஆத்மாவில்லை சைதன்யமே ஆத்மாவென்று எங்ஙனம் கூறலாம் என்ற ஆசங்கைக்கு இதில் உத்தரம் உரைக்கின்றார்.

नाहं प्राणो नैव शरीरं न मनोऽहं
नाहं बुद्धिर्नाहमहङ्कारधियौ च ।
यः प्रज्ञांशस्सोऽस्म्यहमेवेति विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३६॥

பதவுரை.

अहं= நான் **प्राणः**= பிராணன் **न**= இல்லை. **शरीरं**= சரீரமும் **नैव**= இல்லை. **अहं**= நான் **मनः**= மனமும் **न**= இல்லை. **अहं**= நான் **बुद्धिः**= புத்தியும் **न**= இல்லை. **अह**= நான் **अहंकारधियौ च**= அஹங்காரமும், சித்தமும் **न**= இல்லை **अत्र**= இச்சரீரத்துக்குள் **यः**= யாதொரு **प्रज्ञांशः**= சைதன்யபாகமுண்டோ, **सएव**= அதுவே **अहं**= நானாக **अस्मि**= இருக்கிறேன் **इति**= என்று **यं**= எந்த பரமாத்மாவை **विदुः**= அறிகிறார்களோ **तं**= அந்த **संसारध्वान्त विनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

பிராணன்முதல் சித்தம்வரையிலுள்ள வஸ்துக்கள் யாவும் திருச்யமானதால் த்ருக்கான ஆத்மாவாகாது. தவிர பஞ்சபூத கார்யங்களாயிருப்பதாலும், ஸாவயவங்களானதாலும், எனது, இது, என்ற ஞானத்துக்கு விஷயங்

களானதாலும், ஸுஷுப்தியில் ஆத்மா இருக்கையில் இவை இல்லாமலிருப்பதாலும், பெருத்தல் இளைத்தல் முதலிய விகாரங்களுடன் கூடியிருத்தலாலும் அவை ஆத்மாவென்று கூறமுடியாது. த்ருச்யமில்லாததும் பிராணாதிகளுக்கு ஸாக்ஷியானதும், பிராணாதிகள் இல்லாத காலத்தில் பிரகாசிப்பதுமான சைதன்யமே ஆத்மாவென்று கொள்ளவேண்டும். பேசுகிறேன் நான் என்பதாதி வ்யவஹாரங்கள் ஸ்படிகத்தில் சிவப்புப்போல் பிராந்தியாலேற்பட்டவைகளேயன்றி உண்மையிலில்லை என்று கருத்து.

அவதாரிகை.

சாந்தோக்யோபனிஷத்தில் ஆறும் அத்யாயத்தில் ஸஜாதீய விஜாதீயஸ்வகதபேத சூன்யமாய் அத்விதீயமாய் ஸத்தாமாத்ரமாய் ஜீவாபிந்நமாய் கூறியுள்ள ப்ருஹ்மத்தை இப்பொழுது துதிக்கிறார். அவ்வுபநிஷத்தில் ஆறுவது அத்யாயத்தில் சொல்லியுள்ள விஷயத்தின் ஸங்கிரஹமாவது :- அவ்வத்யாயம் உத்தாலகமஹரிஷிக்கும் அவரது புத்திரனை ச்வேதகேதுவுக்கும் ஸம்வாதரூபமாய் இருக்கிறது. வித்யா கர்வங்கொண்ட ச்வேதகேதுவைப்பார்த்து உத்தாலகர் " **उततमादेशमप्राक्ष्यः येनाश्रुतंश्रुतंभवति** " என்ற வசனத்தால் எந்த ஒரு வஸ்துவை அறிந்தால் எல்லாவற்றையும் அறியலாமோ, அந்த வஸ்துவை (ப்ருஹ்மத்தை) ஆசார்யரிடமிருந்து நீ உணர்ந்துவிட்டாயோ ? இன்றேல் நீ கர்வங்கொள்ள நியாயமில்லையே " என வினவினர். ச்வேதகேது அப்படிப்பட்ட வஸ்துவொன்று எங்ஙனம் ஸம்பவிக்கும்? என்று உத்தாலகரைக்கேட்கவே அவர் " **यथासोम्यैकेनमृत्पिण्डेन** " என்

பதாதியால் மண்பிண்டத்தை உணர்ந்தால் குடம் முதலி யவை அறியப்படுவதால் காரணத்தை அறிந்தால் கார்யங் கள் யாவும் அறியப்படலாமென்று அனேக திருஷ்டாந் தங்களால் எடுத்துக்கூறி தார்ஷ்டாந்திகத்தையும் விவர மாய் "**सदेवसोम्येदमग्रआसीदेकमेवाद्वितीयं**" என்பதாதி யால் கூறுகிருர். பிரளயத்தில் ஸஜாதீய விஜாதீயஸ்வகத பேதமின்றிய ஸத்வஸ்து ஒன்றுதான் இருந்தது என்று கூறிப் பிறகு அஸத்வாதத்தை ஆசங்கித்து நிஷேதித்துள் ளது. பிறகு ஸத்ரூப பிருஹ்மத்திற்கு விஜாதீயமான ஜட வஸ்து பேதமில்லை என்றுரைப்பதற்காக ஆகாசாதிப் பிர பஞ்ச ஸிருஷ்டியை அப்பிருஹ்மத்தினின்றும் கூறி, ஸஜா தீயபேதமில்லை என்பதற்காக அந்த ஸத்வஸ்துக்கு ஸிருஷ் டிக்கப்பட்ட வஸ்துக்களுக்குள் பிரவேசத்தையும், திரு விருத்கரணபூர்வமாக நாமரூபஸிருஷ்டியையும் கூறினர். அதன்பின் ஆகாசாதிப் பிரபஞ்சஸ்மித்யை என்பதைக் கூறி தேஹம், வாக்கு, பிராணன் மனம் இவை அன்னகார்ய மானதால் அனாத்மாவென்று நிரூபணம் செய்து "**ऐतदा-त्म्यंइदंसर्वं तत्सत्यंस आत्मातत्वमसिश्वेतकेतो**" என்று சுவேத கேதுவை வியாஜமாய் வைத்துக் கொண்டு முமுக்ஷுக் களைவருக்கும் ஸத்தாய் அத்விதீயமாய் அதிஸூக்ஷ்ம மாய் பரமார்த்தமாய், தனக்கு அபின்னமாய் பிருஹ்ம மத்தை ஒன்பது முறை உபதேசம் செய்தார். அதாவது:— "**प्रयतोवाङमनसिसंपद्यते**" என்று ஸுஷுப்தி உத் கிராந்தி முதலிய அவஸ்தைகளில் ஜீவன் எதில் லயிக் கிறுனே அதுதான்ஸத்தான ப்ருஹ்மம், அதுவே நீ என்ற தந்தையின் உபதேசத்தைக் கேட்டத்தநயன் "ஸுஷுப்தி முதலிய அவஸ்தைகளில் ஸத்தில் லயித்த ஜீவர்கள் அந்த ஸத்ரூப பிருஹ்மமாயிருத்தலை ஏன் உணருவதில்லை" என்று ஸம்சயப்படவே, அதைப்போக்குவதற்காகக்

தந்தை "**यथासोम्यमधुमधुकृतः**" என்பதாதியால் "தேனீக்களால் சேகரிக்கப்பட்டதேனடையில் அனேகமரங்களுடைய புஷ்பரஸங்கள் வேருயிருந்தும் உணரமுடியாமலிருப்பதுபோல் ஸுஷுப்தி முதலிய அவஸ்தைகளில் ஸத்ரூப பிருஹ்மத்தை அடைந்தும் அதை ஜீவர்களால் உணர முடியவில்லை" என்றுகூறினுர்.

அதன்பின் சுவேதகேது "ஸுப்தியிலிருந்து விழித்தெழுந்த ஜீவர்கள் நாம் ப்ருஹ்மத்தினின்று எழுந்தோம் என்று ஏன் அறியவில்லை என்று சங்கைசெய்யவே அதை உத்தாலகர் "**इमास्सोम्यनद्यः**" என்பதாதியால் எங்ஙனம் ஸமுத்திரஜலத்தை இழுத்து மேகங்களால் வர்ஷிக்கப்பட்ட நதீப்பிரவாஹங்களை வேறுரஸத்துடன் கூடியிருப்பதால் ஸமுத்திரத்தினின்றும் வந்தனவென்பதாக கண்டுகொள்ள முடியவில்லையோ, அவ்விதமே ப்ருஹ்மத்தினின்றும் எழுந்தஜீவர்கள் வேறு ஸ்வபாவத்துடன் கூடியிருப்பதால் ப்ருஹமத்தினின்றும் நாம் எழுந்தோமென்று தெரிந்துகொள்ள முடியவில்லை என்பதாக நிராகரணம் செய்தார்.

அதற்குப்பிறகு "ஸுஷுப்தியில் ஜீவனுக்கு ப்ருஹ்மத்தில் லயம் கூறுவதானுல் ஸமுத்திரத்தின்கண் அலைகள் நசிப்பதுபோல் ஜீவனும் நசித்துவிடுவானே" என்ற சுவேதகேதுவின் ஆசங்கைக்கு "**अस्यमहतोवृक्षस्य**" என்பதாதிவாக்யத்தால் எங்ஙனம் கோடாரியால் மரத்தை வெட்டினுல் ரஸம் ஒழுகுவதால் அது ஸஜீவனுகவே இருக்கிறதோ, அதுபோல் ஸுஷுப்திகாலத்திலும் ரத்தவோட்டம் அறியப்படுவதால் ஜீவனுக்கு நாசமில்லை என்று உர்தாலகர் உத்தரம்கூறி முன்புகூறிய ப்ருஹ்மத்தையே மீண்டும் உபதேசித்தார்.

மீண்டும் "ஸூக்ஷ்மமான ப்ருஹ்மத்தினின்றும் ஸ்தூலமான பிரபஞ்சம் எங்ஙனம் உத்பத்தியடையலா மென்ற சுவேதகேதுவின் சங்கைக்கு உத்தாலகர். " न्यग्रोधफलमतआहर " என்ற வாக்யத்தால் "ஸூக்ஷ்ம மான ஆலவிருக்ஷவிதையிலிருந்து ஸ்தூலமான ஆலமரம் உத்பத்தியாகுதல்போல் ஸூக்ஷ்ம ப்ருஹ்மத்திலிருந்தும் ஸ்தூலஜகத்து உத்பத்தியாகலாம்" என்று ஸமாதானம் உரைத்து மீண்டும் முன்கூறிய ப்ருஹ்மத்தையே உபதே சித்தார்.

மறுபடியும் "ஜகத்துக்கு மூலகாரணமான ப்ருஹ்மம் என் அறியப்படவில்லை" என்ற சுவேதகேதுவின் சங் கைக்கு உத்தாலகர் "" लवणमेतदुदकेऽवधाय " என்ற வசனத்தால் "ஜலத்தில் கரைத்த உப்புக்கட்டி, கண் களாலும், த்வக்காலும் அறியப்படாவிருந்தாலும், நாக் கால் நிச்சயமாய் அறியப்படுவதுபோல், பிருஹ்மமும், கண் முதலிய இந்திரியங்களால் அறியமுடியாவிட்டாலும், கார்யலிங்கானுமானத்தால் அறியப்படலாம்" என்று கூறி முன்கூறிய ப்ருஹ்மத்தையே உபதேசித்தார்.

பிறகு "ப்ருஹ்மஸாக்ஷாத் காரத்துக்கு உபாயம் யாது? என்று சுவேதகேது ஆசங்கைக்கு, உத்தாலகர் " यथासोम्यपुरुषंगन्धारेभ्यः " என்பதாதி வசனத்தால் "கந்தாரதேசத்தினின்றும் கண்களைகட்டிக் காட்டில் திரு டர்களால் விடப்பட்ட புருஷன் கண்கட்டை அவிழ்த்து விட்ட வழிப்போக்கனது உபதேசத்தால் கந்தாரதேசம் போய் சேருவதுபோல் ஸத்குருவின் உபதேசத்தால் பருஹ்ம ஸாக்ஷாத்காரமும், அவித்யாநிவிருத்தியும் உண் டாகலாமென்று ஸமாதானம்கூறி முன்கூறிய ப்ருஹ்மத் தையே மீண்டும் உபதேசித்தார். அதன்பின் ஞானி எந்தப்

பிரகாரத்தால் ப்ருஹ்மத்தை அடைகிறுன்? என்ற சுவேத கேதுவின் சங்கைக்கு உத்தாலகர் " **पुरुषंसोम्योपतापिनं** " என்பதாதியால் "நாமரூபங்கள் லயித்தால் ஞானமாகும் தீபத்தால் அப்பிரஹ்மத்தை அடைகிறுன். தேவயானுதி மார்க்கங்களை ஞானி அபேக்ஷிப்பதில்லை" என்று முன் கூறிய ப்ருஹ்மத்தையே மீண்டும் கூறினுர்.

பிறகு மரணமடைபவனும், மோக்ஷமடைபவனும், ப்ருஹ்மத்தையே அடைவானுகில்? ஞானியைப்போல் அஞ்ஞானியும் இவ்வுலகத்திற்கு ஏன் திரும்பாமலிருக்கக் கூடாது?" என்ற சுவேதகேதுவின் சங்கைக்கு உத்தாலகர், " **पुरुषंसोम्योतहस्तगृहीतमानयन्ति** " என்பதாதியால் "அக்நியில் காய்ந்த பரசுவை கட்டிக்கொள்ளுகின்ற திருடனுக்கும், திருடாதவனுக்கும் காய்ந்த பரசுவின் ஸம்பந்தம் ஸமானமாயிருந்தாலும், திருடாதவனை அந்தப் பரசு எறிப்பதில்லை, திருடினவனையோ எறித்து விடுகிறது. அவ்விதமே ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் ப்ருஹ்ம ப்ராப்தி ஸமானமாயிருந்தாலும், ஸத்யமான ப்ருஹ்மத்தை அறிந்த ஞானிக்கு மீண்டும் ஸம்ஸாரத்தில் திரும்புதலில்லை. தேஹாதிகளில் ஆத்மபுத்தியுள்ள அஞ்ஞானிக்கோ மீண்டும் ஸம்ஸாரமுண்டு என்று பதில்கூறி அதேதத்வமஸிவாக்யத்தை மீண்டும் உபதேசித்தார்.

இவ்விதம் ஒன்பது தடவையில் சுவேதகேதுவின் அந்தந்த ஆசங்கைகளுக்கு ஸமாதானம்கூறி முதல் தடவையில் கூறிய ஜீவப்ருஹ்மா பேதத்தையே மீண்டும் உத்தாலகர் உபதேசிக்கவே புத்திரனுக்கு அபரோக்ஷஞானம் பிரதிபந்தமின்றி நிலைபெற்றது.

இவற்றுல் ஸஜாதீயவிஜாதீயபேதம் பிருஹ்மத்துக்கு இல்லை என்று நிரூபிக்கப்பட்டது. நிர்குணமான ப்ருஹ்

மத்துக்கு ஸ்வகதபேதம் ஸம்பவிக்க முடியாததால் அதை சுருதி உபேக்ஷித்து விட்டதாகக் காண்க.

இவ்விதம் சாந்தோக்யயோபநிஷத்தில் கூறிய பரமாத்ம ஸ்வரூபத்தை இந்த சுலோகத்தில் வர்ணிக்கிறார்.

सत्तामात्रं केवलविज्ञानमजंसत्
सूक्ष्मं नित्यं तत्त्वमसीत्यात्मसुताय ।
साम्नामन्ते प्राह पिता यं विभुमाद्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥ ३७

பதவுரை.

सत्तामात्रं= ஸந்மாத்திரமாய் **केवलविज्ञानं**= சுத்த ஞானமாத்திரமாய் **अजं**= ஜன்மமின்றியதாய் **सत्**= ஸத்யமாய் **सूक्ष्मं**= ஸூக்ஷ்மமாய் **नित्यं**= நித்யமாய் **विभुं**= வியாபகமாய் **आद्यं**= காரணமாயும் உள்ள **यं**= எந்த பரமாத்மாவை **साम्नां** = ஸாமவேதங்களுடைய **अन्ते**= முடிவில் (சாந்தோக்யத்தில்) **पिता**= தந்தை (உத்தாலகர்) **आत्मसुताय**= தன்புத்திரனுக்கு (சுவேதகேதுவுக்கு **तत्त्वमसि**= நீ அதுவாயிருக்கிறாய் **इति**= என்று **प्राह**= உபதேசித்துள்ளாரோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளைநாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

இருக்கிறதென்ற ஞானத்துக்கு விஷயமானது ஸத்து. " **वाचारंभणं** " என்ற சுருதியால் விஷயங்கள் பொய்யானதால் விஷய சூன்ய ஞானரூபமே ப்ருஹ்மம். "**अग्रआसीत्**" என்ற சுருதியால் ப்ருஹ்மத்துக்கு ஜன்மமில்லை. இங்

திரியங்களுக்கு விஷயமாகாததால் ஸூக்ஷ்மமாகும். "**नजीवोम्रियते**" என்பதால் நித்யமாகும். "**स आत्मा**" என்பதால் வியாபகமானது. ஜகத்துக்கு அபின்ன நிமித்தோபாதநமாயிருப்பதுதான் பிருஹ்மம்.

அவதாரிகை.

பிருஹதாரண்ய கோபநிஷத்தில் மூர்த்தா மூர்த்த பிராஹ்மணம் இருக்கிறது. அதில் "**द्वेवा ब्रह्मणोरूपे-मूर्तंचामूर्तंच**" என்று பிருஹ்மத்துக்கு மூர்த்தம் அமூர்த்தம் என்ற இருரூபங்களுண்டென்று ஆரம்பித்து கிரமமாக அமூர்த்தமென்பது வாயு ஆகாசங்களென்றும், மூர்த்த மென்பது பிருதிவி, ஜலம், தேஜஸ் மூன்றுமென்றும் மூர்த்தாமூர்த்த பதங்களுக்கு வியாக்யானம்பண்ணி, இவ்விரண்டும், கிரமமாக நித்யாநித்யங்களாயும், பரிச்சின்ன வியாபகங்களாயும், பிரத்யக்ஷ பரோக்ஷங்களாயும் இருப்பதாக எடுத்துரைத்துவிட்டு, ஸமஷ்டி வியஷ்டி வடிவங்களான ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களை மூர்த்தா மூர்த்த ரூபபஞ்சபூதங்களின் கார்யங்களாக வர்ணித்துவிட்டு, ஆரோபத்தை நிரூபித்துள்ளது. பிறகு "**अथातआदेशो नेतिनेतीतिनह्येतस्मात्परमन्यदस्ति**" என்ற வாக்யத்தால் அவ்விருரூபத்தையும் நிஷேதம் செய்திருக்கிறது. இதனர்த்தமாவது:—ப்ருஹ்மத்துக்கு மூர்த்தம் அமூர்த்தமென்ற இரு ரூபங்கள் கூறியபிறகு ப்ருஹ்மம் உபதேசிக்கப்படுகிறது. நேதிநேதி என்ற வாக்யம் மூர்த்தா மூர்த்தங்களான இரு ரூபங்களில்லை. என்று கூறுகிறது. ப்ருஹ்மத்தை இல்லையென நிஷேதிக்க வில்லை. எனவே இரு ரூபங்கள் இல்லாததே பிருஹ்மம்.

சங்கை :— நேதிநேதி என்பதால் இரு ரூபங்களின் நிஷேதம் புலப்படுகிறதே யொழிய பிருஹ்மோ பதேசம் புலப்படவில்லையே என்று. இதற்கு ஸ்மாதானமாகத்தான் "**नह्येतस्मात्**" என்று சொல்லியுள்ளது. இரு ரூபங்களை நிஷேதித்து உபதேசிபபதைத் தவிர வேறுவிதமான உபதே சப்பிரகாரம் நிர்விசேஷ ப்ருஹ்மத்துக்குக் கிடையாது என்று இதனர்த்தம். அங்ஙனமாயின் அத்தகைய ப்ருஹ்மம் ஒன்று இல்லைஎன்ற சங்கை ஏற்படவே "**परमन्यदस्ति**" என்ற பாகத்தால் மூர்த்தா மூர்த்த ரூபங்களிரண்டையும் நிஷேதிப்பதற்கு அவதியாய் ப்ருஹ்மம் ஒன்று அவச்ய மிருக்கவேண்டும். இன்றேல் அவதியில்லாத நிஷேதத்தை ஒப்புநேரிடும். இது அஸங்கதம் அவதியில்லாத பதார்த்த நிஷேதம் இவவுலகில் கண்டதில்லையன்றோ என்று ஸமா தாநம் கூறப்பட்டது. அல்லது நேதி நேதி என்றவாக் கியத்திற்கு எல்லாவிஷயமும் நிஷேதிக்கப்பட்டிருப்பதாக வும் அர்த்தம் கூறலாம். இவ்விதம் எல்லாவிஷயத்தையு மில்லை என நிஷேதித்து நிர்விசேஷமாய், நிர்விஷயமாய் ஜீவாபிந்நமாய் எந்த ப்ருஹ்மம் மூர்த்தா மூர்த்த ப்ராஹ் மணத்தில் பிரதிபாதிக்கப்பட்டுளதோ அதை இதில் துதிக்கிறார்.

मूर्तामूर्ते पूर्वमपोह्याथ समाधौ
दृश्यं सर्वं नेति च नेतीति विहाय ।
चैतन्यांशे स्वात्मनि सन्तं च विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३८॥

பதவுரை.

समाधौ = மனேலயாதிஷ்டானமாய் **चैतन्यांशे** = சைதன்யரூபமாய் **स्वात्मनि** = ஜீவாபிந்நமாயுமுள்ள ப்ருஹ்

மத்தில் **पूर्वं**= முதலில் **मूर्तामूर्ते**= மூர்த்தா மூர்த்த ரூபங்களை **अपोह्य** = நிஷேதித்து **अथ**= அல்லது **दृश्यं**=த்ருச்யமான **सर्वं**=எல்லாவற்றையும் **नेति**=இது இல்லை **नेतिचेति**= இது இல்லை என்றும் **विहाय**=நிஷேதம் செய்து. **यं**=எதை **सन्तंच**= நிஷேதாவதியாக இருக்கும் வஸ்துவாக **विदुः**= அறிகின்றனரோ **तं**=அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை அகற்றும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

ஜீவாபின்னமான ப்ருஹ்மத்தில் மூர்த்தா மூர்த்தங்கள் ஆரோபிதங்களே. வாஸ்தவங்களல்ல. பிருஹ்மத்தை நிஷேதவாயிலாகத் தெரிவிப்பதுபோல் விதிவாயிலாகவும் தெரிவிக்கலாம் என்பதை "**च**" என்பதால் ஸூசனை செய்திருக்கிறார். இவ்விஷயத்தை ப்ருஹ்ம ஸூத்திரக்காரரும், "**प्रकृतैतावत्त्वंहिप्रतिषेधति ततोब्रवीतिचभूयः**" என்ற சூத்திரத்தால் அறிவிக்கிறார். அதாவது— நேதி நேதி என்ற வாக்யமானது ப்ருஹ்மத்தின் மூர்த்தா மூர்த்த ரூபங்கள் இரண்டை நிஷேதிக்கின்றனவே யன்றி ப்ருஹ்மத்தை நிஷேதிக்கவில்லை. ஏனெனின் "**अन्यत्परमस्ति**" என்ற வாக்யத்தால் இருரூபங்களைத் தவிர ப்ருஹ்மம் உபதேசிக்கப்படுகின்றதன்றோ வென்று இந்த ஸூத்திரத்தின் அர்த்தம்.

அவதாரிகை.

பிருஹதாரண்ய கோபநிஷத்தில் மூன்றும் அத்யாயத்தில் கார்க்கீப் பிராஹ்மணம் இருக்கிறது. அதில் உஷஸ்தர், கஹோலர் முதலிய மஹரிஷிகளை வாதத்தில் வென்று ஜயலக்ஷ்மியுடன் விளங்கும் ஸ்ரீயாஜ்ஞ வல்க்ய

மஹரிஷியை ஜயிக்கக் கருதி கார்க்கீஎன்ற ப்ருஹ்ம ஞானி யொருவள் ஸ்பையிலுள்ள பிராஹ்மணர்களிடம் அனுமதி பெற்று இருபாணங்கள் போன்ற இருபிரச்னங்களைக் கேட்டாள். "இவ்வெல்லாஜகத்தும், முக்காலத்துடன் கூட எங்கு நிலைபெற்றிருக்கிற" தென்று முதல்பிரச்நம். இதற்கு "இவையாவும் அவ்யாகிருத(மாயை) ஆகாசத்தில் நிலைபெறுகிறது" என்று யாஜ்ஞவல்க்யரின் உத்தரம். "இந்த அவ்யாகிருதாகாசம் எங்கு ஸ்திபெற்றுள்ளது" என்று இரண்டாவது பிரச்னம். இந்த இரண்டாவது பிரச்னத்துக்கு யாஜ்ஞவல்க்யர் உத்தரம் கூறுவாரானல், சொல்லக்கூடாத வஸ்துவை உத்தரமாகச் சொல்வது என்ற நிக்ரஹஸ்தானத்தை அவரிடம் ஆரோபித்து அவரை ஜயித்து விடலாம். உத்தரங் கூறாவிட்டால் உத்தரம் தெரியவில்லை என்றகுற்றத்தால் அவரை ஜயித்துவிடலாம் என்று கார்க்கியின் அபிப்பிராயம். ஸ்ரீயாஜ்ஞவல்க்யரும் அவளது அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு ஒரேகாலத்தில் இருதோஷங்களும் போகும்படி, சொல்லாமல்சொல்லி உத்தரங்கூறினர். "**एतद्वैतदक्षरं गार्गि ब्राह्मणा अभिवदन्ति अस्थूलमनण्वह्रस्वमदीर्घमलोहितमस्नेहं**" என்று அக்ஷர ப்ருஹ்மத்தில் அவ்யாக்ருதாகாசம் ஆரோபிதம் என்று பிராஹ்மணர்கள் கூறுகின்றனர் என்பதால் சொல்லக்கூடாததை உத்தரமாகச் சொன்னதோஷம் நிவிருத்திக்கப்பட்டுளது. ஸ்தௌல்யாதி தர்மங்களில்லாததாக அக்ஷரப்ருஹ்மத்தை அறிந்திருப்பதால் உத்தரம் தெரியவில்லை என்ற தோஷமும் விலகிற்று. ஸ்தௌல்யாதி தர்மங்களின் நிஷேதத்துக்கு அவதிஸ்வரூபமாய் உள்ள அக்ஷர ப்ருஹமமே ஸத்யமானது என்று ஸித்திக்கின்றது. ஸூர்யன் சந்திரன், ஆகாசம், பிருதிவி, காலங்கள், நதீ, ஸமுத்திரம், தேவர்: பிதிருக்கள், எல்லோரும் இந்த அக்ஷர பிருஹ்மத்தின் ஆஜ்ஞைக்குக் கீழ் இருக்

கின்றன. இவ்வுலகமெல்லாவற்றையும் தரித்துக்கொண்டுள்ள அப்பிருஹ்மம்தான் ஸத்யம். அதையறியாதவன் கிருபணன் ஸம்ஸாரி, அதையறிந்தவன்தான் முக்தன். அது குடம் முதலியவைபோல் எல்லோருக்கும் அனுபவ விஷயமாகா. அதுவே ஸ்வயம்பிரகாச ஸாக்ஷிரூபமாயுள்ளது. இதில்தான் அவ்யாகிருதாதி ஸர்வப் பிரபஞ்சமும் கற்பிதமாயிருக்கிறது என்று கார்க்கிக்கு யாஜ்ஞவல்க்யர் கூறிய அக்ஷர ப்ருஹ்மத்தை இதில் துதிக்கிறார்.

ओतं प्रोतं यत्र च सर्वं गगनान्तं
योऽस्थूलानण्वादिषु सिद्धोऽक्षरसंज्ञः ।
ज्ञातातोन्यो नेत्युपलभ्यो न च वेद्यः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥३९॥

பதவுரை.

गगनान्तं= அவ்யாக்ருதாகாச பர்யந்தம் **सर्वंच** = இந்த ஜகத்தெல்லாம், **यत्र**= எந்த பரமாத்மாவினிடம் **ओतंप्रोतं**=கற்பிதமோ **यः**=எந்த பரமாத்மா **अस्थूलानण्वादिषु**= அஸ்தூலாதி வாக்யங்களில் **अक्षरसंज्ञः**= அக்ஷரமென்ற பெயருடன் **सिद्धः**= பிரஸித்தரோ, **अतः**= இவ்வக்ஷரத்தைத் தவிற **अन्यः**= வேறொரு **ज्ञाता**= அறிபவன் **नेति**=இல்லை என்னும் உபாயத்தால் **उपलभ्यः**= அறியத்தக்கவரோ, **वेद्यः**= பிரத்யக்ஷமாய் அறியத்தக்கவராய் **नेच** = இல்லையோ, **तं** = **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

இவ்வுலகமெல்லாம் வஸ்திரம் நூற்களில் இருப்பது போல் ப்ருஹ்மம் வியாபித்திருக்கிறது. இதனாலேயே

அக்ஷரம் என்ற பெயர் அதற்கேற்பட்டுள்ளது. அக்ஷரத்தைத்தவிர அன்யமெல்லாம், ஜடமாயும் திருச்யமாயுமிருப்பதால் ஞாதாவன்று. அதை ஞானத்தால் அறிய முடியாது. அன்யவஸ்து ஞாதாவில்லை என்ற நிஷேதமூலமாகத்தான் அதை அறியலாம். "**अविज्ञातं ज्ञातृनान्यदतोस्ति**" என்று சுருதி இவ்விஷயத்தை நிரூபிக்கின்றது.

அவதாரிகை.

பிரத்தியக்ஷாதி பிரமாணங்களால் ஸித்தித்துள்ள த்வைதப்பிரபஞ்சம் தோன்றுங் காலையில் எங்ஙனம் அன்ய நிஷேதத்தால் ப்ருஹ்மத்தை அறியவேண்டுமெனக் கூறலாமென்ற சங்கைக்கு இதில் உத்தரங் கூறுகிறார்.

तावत्सर्वं सत्यमिवाभाति यदेत-
द्यावत्सोऽस्मीत्यात्मनि यो ज्ञो न हि दृष्टः ।
दृष्टे तस्मिन् सर्वमसत्यं भवतीदं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥४०॥

आत्मनि= சரீரத்தில் **यः**= எந்த **ज्ञः**= ஸாக்ஷிசைதன்யமுண்டோ **सः**=அது ப்ருஹ்மம். **अस्मिति**=(அதாக நான்) இருக்கிறேனென்று **यावत्**= எதுவரை **दृष्टोनहि**= அறியப்படவில்லையோ **तावत्**= அதுவரை **यदेतत्**= பிரத்தியக்ஷாதிஸித்தமான **सर्वं**= இந்த ஜகத்தெல்லாம். **सत्यमिव**= ஸத்தியம்போல் **आभाति**= தோன்றுகிறது. **तस्मिन्**= அந்த பிருஹ்மமானது **दृष्टे**= அறியப்பட்டால் **इदं**= இந்த **सर्वं**=எல்லா ஜகத்தும் **असत्यं**= அஸத்தியமாய் **भवति**= ஆகிறது **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

நமது சரீரத்துக்குள் ஸர்வத்துக்கும் ஸாக்ஷியாயுள்ள சைதன்யத்தை ப்ருஹ்மமாக அறியாவிட்டால் இந்த ஜகத்தெல்லாம் ஸத்யம் போற்றோன்றும். தன்னை ப்ருஹ்மமாக அறிந்துவிட்டால் விழித்தெழுந்தவனுக்கு ஸ்வப்னம்போல் ஜகத்தெல்லாம் பொய்யாய் போகும் "**यत्रत्वस्यसर्वमात्मैवाभूत्तत्केनकंपश्येत्**" என்று சுருதியும் இதனைக் கூறுகிறது. எல்லாம் பரமாத்மாவாய்த் தோன்றினால் ஞாதா, ஞானம், ஞேயமென்ற த்ரிபுடி இல்லையென்பது இதனர்த்தம். அஜ்ஞானகாலத்தில் தோன்றும் ஜகத்து பாரமார்த்திகஸத்யமில்லை வியாவஹாரிக ஸத்யந்தான். பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களும், வியாவஹாரிக விஷயங்களைத் தெரிவிக்கின்றன. இப்படிப்பட்ட பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களைக் காட்டிலும், சுருதியே மேலான பிரமாணமானதால் பிரத்யக்ஷாதி பிரமாணங்களையும், அவற்றால் ஸித்தித்த ஜகத்தையும் சுருதிப் பிரமாணம் நிஷேதித்து பிரபஞ்ச சூன்யமாய், அத்வைதமாயுள்ள ப்ருஹ்மத்தைத் தெரிவிப்பதில் யாதொரு தடையுமில்லை.

சங்கை :—"**सत्यकामस्सत्यसंकल्पः सर्वगन्धस्सर्वरसः**" என்பதாதி சுருதி பிரமாணங்களால் பிரபஞ்சத்துடன் கூடிய ஸகுண ப்ருஹ்மமும் தெரிவிக்கப்படுவதால், பிரபஞ்ச சூன்யமாய், நிர்குணமாய் அத்வைதமாயுமுள்ள ப்ருஹ்மம் எங்ஙனம் ஸித்திக்கும்? நிஷ்பிரபஞ்ச ப்ருஹ்மத்தைத் தெரிவிக்கும் சுருதியும் ஸப்பிரபஞ்ச பிருஹ்மத்தைத் தெரிவிக்கும் சுருதியும், சுருதிரூபப்பிராமாண்யத்தில் ஸமான மானதால் நிஷ்பிரபஞ்ச சுருதியால் ஸப்பிரபஞ்ச சுருதியை எங்ஙனம் நிஷேதிப்பது நியாயமாகும்?

ஒரே பிருஹ்மம், ஸப்பிரபஞ்சமாயும் நிஷ்பிரபஞ்சமாயு மிருப்பது பரஸ்பரவிரோதமானதால் முடியாது என்று கூறுவது சரியன்று. நிஷ்பிரபஞ்ச ப்ருஹ்மத்தை ஸ்வபாவ மாயும், ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மத்தை உபாதி ஸம்பந்தத் தாலேற்பட்டதாயும் அங்கீகரித்து அவ்விரு ப்ருஹ்மமும் பாரமார்த்திகந்தானென்று ஒப்புக்கொள்வது தான் சுருதி களின் கருத்து என்று.

ஸமாதானம் :—ஸ்வபாவத்தில் விரோதிகளான இரு வஸ்துக்கள் உபாதி ஸம்பந்தத்தாலும் கூட பாரமார்த்திக மாக ஓரிடத்தில் ஸம்பந்திககமாட்டா. வெண்மை ஸ்வபாவமுள்ள ஸ்படிகக்கல்லில் செம்பரத்தைப்பூ உபாதி ஸம்பந்தத்தால் காணப்படும் சிவப்பு பார மார்த்திகமாகுமா? ஸூர்யனையும், இருளையும் இணைக் கும் உபாதி ஏதாவது உலகில் கண்டதுண்டா? இவ்விஷ யத்தை ப்ருஹ்ம ஸூத்திரக்காரர் “ **नस्थानतोपि परस्यो भयलिंगं सर्वत्रहि** ” என்ற அதிகரணத்தில் தெளிவாய்கூறி யிருக்கிறார் அதாவது உபாதி ஸம்பந்தத்தாலும் பார மார்த்திகமாக நிஷ்பிரபஞ்ச ஸப்பிரபஞ்சங்களான இரண்டு ஸ்வரூபங்களை ப்ருஹ்மத்துக்குக் கூறக்கூடாது. ‘ **अशब्दम- स्पर्शं** ” “ **अस्थूलमनणु** ” “ **यत्तदद्रेश्यं** ” “ **अदृश्येऽनात्म्ये** ” “ **महानज आत्मअमरोमृतः** ” “ **यतोवाचोनिवर्तन्ते** ” “ **नेतिने- त्यात्मा** ” “ **यत्रनान्यत्पश्यति** ” “ **यत्रत्वस्यसर्वमात्मैवाभूत्** ” என்பதாதி வேதாந்த வாக்கியங்கள் நிஷ்பிரபஞ்ச ப்ருஹ்ம மத்தையே தெரிவிக்கின்றன. உண்மையில் பரஸ்பர விரோதிகளான இருரூபங்கள் ஓரே இடத்தில் இருக்க மாட்டாதே யொழிய அவற்றுள் ஒரு ரூபத்தை (உபாதி யாலேற்பட்டதை) மித்யை என்று ஒப்புக்கொள்வதால் ஓரே இடத்தில் இருக்கலாம். ஸ்படிகத்தில் வெண்மை

பரமார்த்தமானது. சிவப்பு, உபாதியாலுண்டானதால் உண்மையாகாதென்பது காணப்படுகின்றது.

சங்கை:—ஸப்பிரபஞ்ச நிஷ்பிரபஞ்ச சுருதிகளுக்குள் ஏதாவதொரு சுருதியை மித்யை என்று கூறுவதானல் ஸப்பிரபஞ்ச சுருதியை யனுஸரித்து நிஷ்பிரபஞ்ச சுருதியை மித்யை என்று ஏன் சொல்லலாகாது? நிஷ்பிரபஞ்ச சுருதியை யனுஸரித்து ஸப்பிரபஞ்ச சுருதியை மட்டும் என் மித்யை என தள்ளவேண்டும்?

ஸமாதானம்:—தாத்பர்யமில்லாத சுருதியைக்காட்டி லும் தாத்பர்யத்துடன் கூடிய சுருதி பலமுள்ள பிரமாணம். ஸப்பிரபஞ்ச சுருதிக்கு ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மத்தைத் தெரி விப்பதில் தாத்பர்யங்கிடையாது. நிஷ்பிரபஞ்ச சுருதிக்கு நிஷ்பிரபஞ்சாத்வித்திய ப்ருஹ்மத்தைத் தெரிவிப்பதில் தாத் பர்யமிருப்பது உபக்ரமாதி ஆறுதாத்பர்ய லிங்கங்களால் அறியப்படுகிறது. எனவே நிஷ்பிரபஞ்ச சுருதியை மித்யை எனல் கூடாது. ஸப்பிரபஞ்ச சுருதியைத்தான் மித்யை எனக்கூறவேண்டும். “ **द्वेवावब्रह्मणोरूपेमूर्तंचामूर्तंच** ” என்ற சுருதி ஸப்பிரபஞ்ச ஸகுண ப்ருஹ்மத்தை முதலில் சொல்லிவிட்டுப் பிறகு “ **नेतिनेति** ” என்பதால் அதை நிஷேதம் செய்திருப்பதால் ஸப்பிரபஞ்ச சுருதிக்கு நிஷே தத்துக்கு விஷயமாக ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மத்தைத் தெரி விப்பதில்தான் தாத்பர்யம் புலனாகிறது. எனவே நிஷ்பிர பஞ்ச சுருதிக்கு ஸப்பிரபஞ்ச சுருதியானது சேஷமாக இருக்கிறதே யொழிய, பிரதானமன்று. நிஷ்பிரபஞ்ச சுருதியே பிரதானமாகும்.

சங்கை:—ப்ருஹ்மத்தை ஸப்பிரபஞ்சமென்று முதலில் கூறிவிட்டுப்பிறகு எதற்காக அதை இல்லை என நிஷேதிக்கவேண்டும்? “ **प्रक्षाळनाद्धिपंकस्य-**

दूरादस्पर्शनंवरं " "சேற்றைப்பூசிக் கொண்டு அலம்புவதைக் காட்டிலும் சேற்றைப்பூசிக் கொள்ளாமலிருப்பதே நலம்" என்ற நியாயப்பிரகாரம் ப்ருஹ்மத்திற்குப் பிரபஞ்ச ஸம்பந்தத்தைக் கூறாமலிருப்பதேயன்றோ பொருத்தமானது?

ஸமாதானம்:—சுருதியின் அபிப்பிராய மிவ்விதம். அதாவது:—ஆரம்பத்திலேயே அத்விதீய நிஷ்பிரபஞ்ச ப்ருஹ்மத்தை உபதேசிக்கும் பக்ஷத்தில், ஆகாசாதித்வைதமிருக்கையில் அந்த ப்ருஹ்மம் அத்விதீயமென எங்ஙனம் கூறலாமெனசங்கை நிகழலாம். எனவே அவ்வாசங்கையை நிவிருத்திப்பதற்காக, உபாதாநகாரணமாயுள்ள ப்ருஹ்மத்தினின்றும் ஆகாசாதித்வைதப் பிரபஞ்சம் உண்டானதாகக்கூறி, கார்யத்துக்கு உபாதாநகாரணத்தைத் தவிர வேறிடத்தில் ஸ்திதி கிடையாததால் அப்பிருஹ்மத்தினிடத்திலேயே ஸ்திதியையும் த்வைதத்துக்குக் கூறி " नेहननास्तिकिंचन " என்பதாதிவாக்யங்களால் த்வைதத்தை அதிலில்லை எனநிஷேதிக்கும் பக்ஷத்தில் ப்ருஹ்மம் அத்விதீயமென்பது திடமாய் ஸ்தாபிக்கப்பட்டதாகும். ஸ்ருஷ்டிவாக்யங்களால் ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மத்தைச் சொல்லாமல் முதலிலேயே " नेहनानास्ति " என்று பிரபஞ்சத்தை ப்ருஹ்மத்தினிடம் நிஷேதிக்கும்பக்ஷத்தில், "எதில் குடம் இல்லை என்றுசொன்னல் வேறிடத்தில் குடமிருப்பது ஸித்திப்பதுபோல்" இந்த ப்ருஹ்மத்தினிடம் த்வைதப்பிரஞ்சமில்லை என்று சொன்னல் வேறொரு ப்ருஹ்மம் ஸப்பிரபஞ்சமாக இருக்கலாமோவென்ற ஆசங்கை உதிக்கலாம். இந்த அபிப்பிராயத்தாலேயே ஸிருஷ்டிவாக்யங்களால் முதலில் ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மத்தைக் கூறினபிறகு " नेहनानास्ति " என்று ப்ருஹ்மத்தில் பிரபஞ்சத்தை நிஷேதித்திருகிறது. இதுதான் சுருதியின் அபிப்பிராயம்.

சங்கை. த்வைதப்பிரபஞ்சம் மித்யையானல், ஸப்பிரபஞ்சமாயும், ஸகுணமாயுமுள்ள ப்ருஹ்மத்தின் உபாஸனை எவ்விதம் ஸித்திக்கும்?

ஸமாதானம்:—கற்பிதமான த்வைதப்பிரபஞ்சத்துடன் கூடியஸகுண ப்ருஹ்மத்தை ஏன் உபாஸிக்கக் கூடாது; உபாஸனைக்கு விஷயமெல்லாம் பரமார்த்தமாக இருக்கவேண்டுமென்றநிர்பந்தமில்லை. **"वाचंधेनुमुपासीत"** வாக்கைக் காமதேனுவாக உபாஸிக்கவேண்டுமென்று சொன்ன உபாஸ்தியில் வாக்குக்கு காமதேனுத்தன்மை ஆரோபிதமேயன்றி வாஸ்தவமாகாததால், பிரபஞ்சம் மித்யையானாலும், மித்யையான ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மத்தை உபாஸிப்பது உசிதமே.

சங்கை:—நிஷ்பிரபஞ்சாத் விதீயப்ருஹ்மத்தை ஆரோபிதமாய் அங்கீகரித்து அதையும் ஏன் உபாஸ்திசெய்யலாகாது?

ஸமாதானம்:—**"तदेवब्रह्मत्वं विद्धि नेदं यदिदमुपासते"** என்று நிஷ்பிரபஞ்ச நிர்குணாத் விதீயப்பிரஹ்மம் உபாஸ்திக்கு விஷயமாகாதென்று கூறியிருப்பதால் அதை உபாஸிக்க முடியாது. தவிர நிஷ்பிரபஞ்ச ப்ருஹ்மத்தைக் கூறும்பிரகரணங்களில் அதைஉபாஸிக்கும்படி விதிஇல்லை. ப்ருஹ்மம் நிஷ்பிரபஞ்சமென்பது ஆரோபிதமாகாது. இன்றேல் ஒவ்வொரு வேதாந்தங்களிலும் பிரபஞ்சமானது ப்ருஹ்மத்தினிடம் இல்லை என்பதாக தாத்பர்யத்துடன் வர்ணித்திருப்பது பொருந்தாமல்போகும். ப்ருஹ்மஸூத்திரக்காரரும், **"अरूपवदेवहि तत्प्रधानत्वात्"** என்ற ஸூத்திரத்தில் நிஷ்பிரபஞ்ச ப்ருஹ்மம்தான் பரமார்த்தமென்றும், வேதாந்தங்களுக்கெல்லாம் அதில்தான் தாத்பர்யமென்றும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார். ஆகையால் நிஷ்பிரபஞ்ச

நிர்குணத் விதீயஸச்சிதாநந்த ப்ருஹ்மமே பரமார்த்தம், ஸப்பிரபஞ்ச ப்ருஹ்மம் உபாஸ்திக்காக உபதேசிக்கப்பட்டிருகிறது என்பதுதான்ஸித்தாந்தம்.

அவதாரிகை.

இவ்விதம் பல்லாயிரம்முறை ஆத்மதத்வத்தை எடுத்துரைத்தபோதிலும், ராகாதிதோஷங்களினின்றும் விடுபட்ட அவ்வாத்மா இருப்பதாகத் தெரியவில்லையாதலால், அதை எங்ஙனம் பரமாத்மாவாக ஸாக்ஷாத்கரிக்க முடியுமென்ற ஆசங்கைக்கு உத்தரம் கூறுகிறார்.

रागामुक्तं लोहयुतं हेम यथाग्नौ
योगाष्टाङ्गैरुज्ज्वलितज्ञानमयाग्नौ ।
दग्ध्वात्मानं ज्ञं परिशिष्टं च विदुर्यं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥४१॥

பதவுரை.

रागामुक्तं=ராகாதி தோஷங்கள் விடுபடாத **आत्मानं**= ஆத்மாவை **योगाष्टांगैः**= ஞானத்துக்கான அஷ்டாங்க யோகங்களால் **उज्वलितज्ञानमयाग्नौ**=ஜ்வலிக்கின்ற ஞானக்நியில் **लोहयुतं**= இரும்போடு கூடிய **हेम**= தங்கத்தை **अग्नौ**= அக்நியில் **यथा**= எங்ஙனமோ, (**तथा**=அங்ஙனம்) **दग्ध्वा**=எறித்து (சோதித்து) **परिशिष्टंच**=மிச்சமாயுள்ள **यं**= எந்த **ज्ञं**= சைதன்யத்தை **विदुः**= அறிகிறார்களோ, **तं**= அந்த **संसारध्वान्तविनाशं**= ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं**= ஹரியை **ईडे**= துதிக்கிறேன்.

விரிவுரை.

அக்நியில் தங்கத்தைச் சுத்திசெய்வதுபோல், ஆத்மாவை ஞானக்னியில் சுத்தப்படுத்தவேண்டும். தங்கத்தில் அக்னிசுத்தியால் இருப்பு மண் முதலிய அசுத்தம் விலகுவதுபோல் ஆத்மாவினிடமும், ஞானக்நி சுத்தியால் சாரீரதோஷங்களும், அந்தஃகரண தோஷங்களும் விலகிவிடும். மிச்சமான சைதன்யத்தை ப்ருஹ்மமாக உணரவேண்டும்.

இங்குள்ள योग என்ற பதத்திற்கு யோகம் ஞனமிரண்டுமர்த்தம். நிர்குண ஜீவாபிந்ந பிருஹ்மஞானத்துக்கும் எட்டு அங்கங்களுண்டு. நிர்குணயோகாஷ்டாங்கங்களென்று இவற்றின் பெயர்.

(1) அவையாவன யமம்:—தேஹம் இந்திரியங்கள், சப்தாதி விஷயங்கள் இவற்றில் ஏற்படும் வைராக்யமேயாம்.

(2) நியமம்:—தனது ஆத்மத்வத்தில் ஆவிர்பவிக்கும் இடையறு அன்பேயாம்.

(3) ஆஸநம்:—எல்லா விஷயங்களிலும் உதாஸீநமாயிருத்தலேயாம்

(4) பிராணயாமம்:—ஸத்யம்போற்றோன்றும் இந்த ஜகத்தைப் பொய்யென அறிதலேயாகும்.

(5) பிரத்யாஹாரம்:—வெளிவிஷயங்களை நோக்காமல் புத்தியை அந்தர்முகமாகத் திரும்பச்செய்தலேயாகும்.

(6) தாரணை:—மனதை அசைவற்றிருத்தலேயாகும்.

(7) தியாநம்:—"நான் சைதன்ய மாத்ரமான பிருஹ்மமாயிருக்கிறேன்" என்று தைலதாரைபோல் ச்ரத்தா பக்தியுடன் செய்யப்படும் நிரந்தர ஸ்மரணமேயாகும்,

(8) ஸமாதி:—மேற்கூறிய ஸ்மரணம் அற்று பிருஹ்ம மாத்ரமாயிருத்தலேயாகும்.

இந்த ஞானஷ்டாங்கங்களாகிற விறகுகளால் ஐக்ய ஞானமாகிற அக்நிக்கு ஜ்வாலைகளேற்படும். அந்தஞானந் தான்ராகாதிதோஷங்களை நிவிருத்தித்து சைதன்ய மாத்ர மாய்ஜீவனைமிச்சப்படும்படி செய்யும். ஞானஷ்டாங்கங்கள் பல உபனிஷத்துக்களில் கூறியுள்ளன.

देहेन्द्रियादिवैराग्यं यम इत्युच्यते बुधैः ।
अनुरक्तिःपरेतत्वे नियमः परिकीर्तितः ॥
सर्ववस्तुष्वुदासीनवृत्तिरासनमात्मनः ।
जगत्सर्वमिदं मिथ्याप्रतीतिः प्राणसंयमः ॥
चित्तस्यान्तर्मुखीभावः प्रत्याहारस्सउच्यते ॥
चित्तस्यनिश्चलीभावो धारणाऽसौनिगद्यते ॥
सोहं चिन्मात्रमेवेति चिन्तनं ध्यानमुच्यते ।
ध्यानस्य विस्मृतिस्सम्यक् समाधिरभिधीयते ॥

என்று. பாதஞ்ஜலயோகஸூத்திரத்தில் பதஞ்ஜலி பகவான் கூறிய அஷ்டாங்கயோகத்தை இங்குள்ளயோக பதத்தின் அர்த்தமெனவும் கொள்ளலாம். அவையாவன.

(1) யமம்:—அஹிம்ஸை, ஸத்யம், திருடாமை, பிருஹ்ம சர்யம் அபரிக்ரஹம் (அதிகபோக்ய வஸ்துக்களை சேகரிக்காமை)

(2) நியமம்:—சௌசம், ஸந்தோஷம், தபஸ், ஸ்வாத்யா யம் ஈச்வரப்ரணிதானம். (ஸ்வாத்யாயம் பிரணவம் முதலியமந்திரங்களை ஜபித்தல். ஈச்வரப்ரணிதான மென்பது ஈச்வரபக்தி)

(3) **ஆஸநம்:**—எவ்விதம் உட்கார்ந்து கொண்டால் அவயவங்களில் துக்கமேற்படாதோ, ச்ரமமின்றி மனதிற்கும் ஸ்திரத்தன்மை ஏற்படுமோ, அவ்விதம் இருப்பதே ஆஸநமாகும். இவை பத்மகாதிகளால் அநேகங்கள்.

(4) **பிராணாயாமம்:**—தேஹத்திற்குள்ளிருக்கும் வாயுவின் ச்வாஸம், ப்ரச்வாஸம் என்ற இருவித கமனாகமனத்தை அடக்குதலேயாம்.

(5) **ப்ரத்யாஹாரம்:**—சப்தஸ்பர்சாதி விஷயங்களில் இந்திரியங்களை செல்லாமல் தடுத்து நிற்றலேயாம்

(6) **தாரணை:**—ஏதாவதொருவஸ்துவில், அல்லது ஆத்மனிடத்தில் மனதை அசையாமல் ஸ்தாபனம் செய்வதேயாம்

(7) **த்யாநம்:**—ஆத்மாவையோ, அல்லதுவேறு வஸ்துவையோ தைலதாரைபோல் எப்போதும் ஸ்மரித்தலேயாம்

(8) **ஸமாதி:**—த்யானம் செய்பவன், த்யானம் இவை இன்றி, த்யான விஷய ஸ்வரூபமாய் ஆகுதலே. அதாவது மனோவிருத்தி இல்லாதநிலை ஸமாதியாகும்.

இவ்விதம் பதஞ்ஜலிபகவான் கூறிய யோகாப்யாஸத்தாலோ, உபநிஷத்துக்களில் கூறிய ஞானஷ்டாங்காப்யாஸத்தாலோ, ஏற்பட்ட ஞானக்நிஜ்வாலையில் ஜீவனைஸ்புடம் செய்துசோதித்தால் அவன் ராகாதி தோஷங்களினின்றும் விடுபடுவான். பிறகுப்ருஹமமேநான் என்ற ஸாக்ஷாத்காரம் உதிக்கும். இத்தகைய ஜீவன்முக்தர்கள் வெகுபேர்கள் காணப்படுகிறார்கள்.

அவதாரிகை.

இந்த சுலோகத்தில் பக்திமுதலிய ஸாதநங்களால் பரமாத்மாவை அடைவதே பிரயோஜனமென்று கூறுகிறார்.

यं विज्ञानज्योतिषमाद्यं सुविभान्तं
हृद्यर्केन्द्वग्न्योकसमीड्यं तटिदाभम् ।
भक्त्याराध्येहैवविशंत्यात्मनि सन्तं
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥४२॥

பதவுரை.

हृदि = ஹ்ருதயத்தில் **तटिदाभं** = மின்னல்போல், **सुविभान्तं** = நன்கு பிரகாசிக்கும் **विज्ञानज्योतिषं** = ஞானஜ்யோதிஸ்ஸாயும் **आद्यं** = காரணமாயும் **ईड्यं** = துதிக்கத்தக்கதாயும் **अर्केन्द्वग्न्योकसं** = ஸூர்யன் சந்திரன் அக்நி இவர்களிலிருப்பவருமான **यं** = எவரை **भक्त्या** = பக்தியால் **आराध्य** = ஆராதித்து **आत्मनि** = தனக்குள் **सन्तं** = இருப்பவராக **इहैव** = இங்கேயே **विशन्ति** = ஆகிறார்களோ, **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நாசம் செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

ஹ்ருதயத்தில் மின்னல்போல் ஸ்புரித்துக்கொண்டிருக்கும் அறிவே பரமாத்மா. அவரே ஸூர்யமண்டலம் முதலிய விடங்களிலும் இருக்கிறார். பக்திச்ரத்தையுடன் இவரை பஜனம் பண்ணினால் இவருடைய அனுக்ரஹத்தால் இவரை தனக்குள்ளிருப்பவராக அறிந்து தந்மயமாய் ஜீவதசையிலேயே ஆகலாம் என்பது தாத்பர்யம்.

அவதாரிகை.

இதில் ஸ்தோத்ரத்தைச் செய்த பக்தனை தனக்குப் பிரயோஜனத்தை விளக்கித் துதிசெய்கிறார்.

पायाद्भक्तं स्वात्मनिसन्तं पुरुषं यो
भक्त्या स्तौतीत्याङ्गिरसं विष्णुरिमं माम् ।
इत्यात्मानं स्वात्मनि संहृत्य सदैकः
तं संसारध्वान्तविनाशं हरिमीडे ॥४३॥

सदा = எப்போதும் **एकः** = ஒருவரான **यः** = எந்த **विष्णु** = பரமாத்மா **स्वात्मनि** = தன்வாஸ்தவ ஸ்வரூபத்தில் **सन्तं** = இருக்கின்றவனும் **भक्तं** = பக்தனுமான **पुरुषं** = புருஷனை **स्वात्मनि** = தன்யதார்த்த ஸ்வரூபத்தில் **आत्मानं** = மனதை **इति** = கீழ்கண்டபிரகாரமாக **संहृत्य** = அடக்கி **आंगिरसं** = அவயவங்களின் ரஸரூபனை **इमं** = இந்த **मां** = என்னை **भक्त्या** = பக்தியால் **स्तौति** = துதிக்கிறான் **इति** = என்று நினைத்து **पायात्** = ரக்ஷிக்கக்கடவரோ, **तं** = அந்த **संसारध्वान्तविनाशं** = ஸம்ஸார இருளை நாசம்செய்யும் **हरिं** = ஹரியை **ईडे** = துதிக்கிறேன்.

விரிவுரை.

இந்த ஸ்தோத்ரத்தை இயற்றிய ஸ்ரீபகவத் பாதாசார்யர் தன்னை இந்த ஸ்தோத்ரத்தால் நிரூபித்த பரமாத்மா காப்பாற்றவேணுமென்று பிரார்த்திக்கிறார். அதாவது:— தன்னைப் பரமாத்மாவாக அறிந்து பக்திசெய்பவர் உத்தம பக்தராவர். "**चतुर्विधाभजंतेमां**" என்று ஆரம்பித்து "**ज्ञानीत्वात्मैव मे मतं**" என்று ஸ்ரீகீதாசார்யரும் ஞானி பக்தனை புகழ்ந்திருக்கிறார். மனதை தன்ஸ்வரூபத்தில் நிறுத்தி தனக்குள்ளிருக்கும் பரமாத்மாவை மனம்உருகி துதித்தால், அவனுக்குப் பரமாத்மா தன்ஸ்வரூபத்தைத் திடமாய் பிரகாசிக்கும்படி செய்கிறார். இதுவே பக்தனை

ரக்ஷிப்பதாகும். பேதபக்தி செய்வது நிஷ்பிரயோஜனம். அபேதபக்தியே ச்லாக்யமானது.

“ तक्षादि नीचैस्सुकृतानसत्यान्
पाषाणमृद्दारुमयांश्चदेवान् ।
भजन्तिये माधवनिन्दकास्ते
पूर्णस्सदानन्दमयोहिविष्णुः ॥ ”

என்று பேதபக்தியை நிந்திக்கிறது. அபேதமாய் தன்னை பஜனம் பண்ணுபவன் என்ற காரணத்தால் பரமாத்ம பக்தரனைவரையும் ரக்ஷிப்பது போன்று தன்னையும் ரக்ஷிக்கட்டும் என்று பகவத்பாதாள் கூறுகிறார்.

அவதாரிகை.

இந்த ஸ்தோத்ரத்தின் அர்த்தத்தை உணராமல் இதை பாராயணம் பண்ணுபவர்கள் விஷ்ணுலோகம் சென்று முக்தியடைவரென்றும், இதன் அர்த்தத்தை அறிந்து இதைப் பாராயணம் பண்ணுபவர்கள் இங்கேயே பரமாநந்தமயமான பரமாத்ம ஸ்வரூபப்பிராப்தி வடிவ முக்தியை அடைவரென்றும், வர்ணித்து இந்த ஸ்தோத்ரத்தை பூர்த்திசெய்கிறார்.

इत्थं स्तोत्र भक्तजनेड्यं भवभीति-
ध्वान्तार्काभं भगवत्पादीयमिदं यः ।
विष्णोर्लोकं पठति श्रुणोति व्रजति ज्ञो
ज्ञानं ज्ञेयं स्वात्मनि चाप्नोति मनुष्यः ॥४४॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य जगद्गुरु श्रीमच्छङ्कराचार्य सद्गुरुविरचिंत

॥ हरिमीडेस्तोत्रं संपूर्णम् ॥

பதவுரை.

य= எவன் **इत्थं**= இவ்விதமாக **भक्तजनेड्यं**=பக்தஜனங்களால் துதிக்கத்தக்கதும் **भवभीतिध्वान्तार्काभं**=

ஸம்ஸாரபயமாகும் இருளுக்கு ஸூர்யன் போன்றதும் **भगवत्पादीयं**= ஸ்ரீமத் பகவத்பாதர் இயற்றியதுமான **इदं**= இந்த **स्तोत्रं**= ஸ்தோத்திரத்தை **पठति**= பாராயணம் பண்ணுகிறானோ? **शृणोति**= கேட்கிறானோ, (**सः**= அவன்) **विष्णोः**=விஷ்ணுவின் **लोकं** = லோகத்தை (வைகுண்டத்தை) **व्रजति**= அடைகிறான். **ज्ञः**= இந்த ஸ்தோத்திரத்தின் அர்த்த முணர்ந்தவனான **मनुष्यः**=மனிதனோ **स्वात्मनि**= தன்னிடத்தில் **ज्ञानं**– ஞானத்தையும், **ज्ञेयंच**= சுத்தப்ருஹ்மத்தையும் **आप्नोति**= அடைகிறான்.

விரிவுரை.

பகவானிடம் பக்திசெலுத்தியுள்ள அன்பர்கள் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்யவேண்டும். அப்பாராயணத்தால் ஸூர்யனைக்கண்ட இருள்போல் ஸம்ஸாரபயமும், துக்கமும் தொலைந்துபோம். ஸ்ரீபகவத்பாதாசார்யாளின் முகத்திலிருந்து இது வெளிவந்திருப்பதால் மேற்கூறிய பிரயோஜனமுண்டாவதில் ஸம்சயத்திற்கு இடமில்லை. ஒன்றுமறியாத பாமர ஜனங்களும் இதை அடிக்கடி பாராயணம் பண்ணுவதால், வைகுண்டலோகத்தில் வெகுகல்பகாலம் வஸித்துவிட்டுப் பிறகு முக்திபெறுவர். ஸந்யாஸிகளாய் ஞானிகளாயுள்ளவர்களும், இதன் பாராயண மஹிமையால் தன்னை சுத்தப்ருஹ்மமாய் ஸாக்ஷாத்கரித்து அந்த ப்ருஹ்மமாகவே ஆவர்.

"**ब्रह्मवेदब्रह्मैवभवति**" என்பது சுருதி.

ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் இயற்றிய

ஹரிமீடே ஸ்தோத்திரம்

பூர்த்தியடைந்தது

சுபமஸ்து.

LIST OF BOOKS AVAILABLE FOR SALE

Sanskrit.		Rs.	A.	P.
Sri Vidya Saparya Padhathi	...	3	8	0
Dévi Mahatmym with navanga	...	1	4	0
Sri Vidya Stotramala	...	0	6	0
Parasambhu mahimna Stotra	...	0	6	0
Text in Sanskrit with Tamil translation	...			
Lalitha Trisati	...	3	0	0
Hari Mide Stotram	...	1	8	0
Lalitha Ashtothiram	...	0	6	0
Sakthi Mahimna Stotram	...	0	12	0
Varivasya Rahasyam	...	1	0	0
Kamakala Vilasam	...	1	8	0
Subramania Tatvam	...	1	8	0
Sri Vidya Gita	...	1	4	0
Maneesha Panchakam	...	0	10	0
Guru Tatvam	...	0	6	0
Atmarpana Stuti	...	1	8	0
Bhavanopanishad	...	0	10	0
Muka Panchasati	...	1	8	0
Tamil.				
Vedic Religion and Manastatvam	...	2	0	0
Brahma Vidya Rahasyam	...	1	0	0
Sri Pura Sri chakra Varnana (Kummi)	...	1	0	0

In the Press, will be released shortly.

Sri Lalitha Trisati with Sankara Bhasyam (Sanskrit.)

Text with Tamil Commentary.

Siva Mahimna Stotram.

Siva Ashtothira Satanama Stotram.

Copies Can be had of :—

N. RAJAM & Co.,
2/43, Purasawalkam High Road,
VEPERY, MADRAS-7